

www.padippakam.com
முரண்பாடுகள்
இதயராசன்
படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# முரண்பாடுகள்

(சிறுகதைத் தொகுதி)

- இதயராசன் -

தேசிய கலை இலக்கியப் பேரவை

படிப்பகம்

www.padippakam.com

# நூல்விபரம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | : முரண்பாடுகள் |
| நூலாசிரியர் | : இதயராசன் |
| பக்கங்கள் | :108 + xvi |
| பதிப்புரிமை | :நூலாசிரியருக்கே |
| நூலின் அளவு | : 1/8 |
| எழுத்தளவு | : 11 புள்ளிகள் |
| வெளியீடு | : தேசிய கலை இலக்கியப் பேரவை<br>இல. 571/15, காலி வீதி, கொழும்பு 06<br>T.P – 2381603, 0778851989 |
| வெளியீட்டு இல | : 111 |
| பதிப்பு | : ஆகஸ்ட் 2010 |
| விலை | :250 ரூபா |
| கணனிப்பதிப்பு | : S பிறின்ட் , கொழும்பு 06 |
| ISBN | : 978 - 955 - 8637 - 30 - 2 |

## BIBLIOGRAPHICALDATA

| | |
|---|---|
| TItle of the Book | : MURANPADUKAL |
| Author | : Ithayarasan |
| Copy right | : to Author |
| No of Pages | : 108 + xvi |
| Price | : Rs : 250 |
| Book Size | : 1/8 |
| Font Size | : 11 points |
| Publishers | : Dhesiya Kalai Illakia Peravai |
| Publishing No | : 111 |
| Edition | : August 2010 |
| Printing | : S PRINT, Colombo - 06 |
| ISBN | : 978 - 955 - 8637 - 30 - 2 |




படிப்பகம்

www.padippakam.com

# இதய சமர்ப்பணம்

எங்கள் கிராமத்தின் எழுச்சிக்காய் உழைத்து
தாங்கள் உதிரத்தால் தலையெழுத்தை மாற்றிய
மங்காப் புகழ் மாண்புடைப் பெரியோர்க்கும்
பொங்கிச் சரித்த பெருவன்னி மாந்தர்க்கும்



படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 111வது வெளியீடாக நண்பர் இதயராசன் எழுதிய சிறுகதைகள் ''முரண்பாடுகள்'' என்ற பெயரில் நூல் வடிவம் பெறுகிறது. இதயராசனின் கவிதைகள் கடந்த 2008-இல் ''மீறல்கள்'' என்ற பெயரில் நூலாக்கம் பெற்று பரந்த வரவேற்பைப் பெற்றது. இவரது இரண்டாவது நூலையும் பேரவை வெளியிடுவதில் பெருமகிழ்வு கொள்கிறது.

இவரின் சிறுகதைகளின் கருக்கள் 1970களில் முளை கொள்ளத் தொடங்கி அடை காக்கப்பட்டு கடந்த வருடம் முதலே பிரசவம் பெறத் தொடங்கியுள்ளன. ''பத்துச் சதம்'' என்ற இவரது முதலாவது சிறுகதை 2008-இல் 'தாயகம்' இதழில் வெளிவந்தது. இவரது முதலாவது கவிதையும் 1977 இல் 'தாயகம்' சஞ்சிகையில் வெளிவந்துள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் தனது இளமைக் காலம் முதல் உறவு பூண்டு, உழைக்கும் மக்களின் வர்க்க உணர்வில் தன்னைப் புடம் போட்டு வளர்ந்த எழுத்தாளர் இதயராசன் மிக விரைவிலேயே ஒரு சிறுகதைத் தொகுதி வெளியிடுமளவில் வளர்ச்சி பெற்றுள்ளார்.

மானுட அறமும் மனிதப் பெறுமானங்களும் தலை கீழாகப் புரட்டப்பட்டு விதேசிய விருப்புக்களும் நுகர்வுப் பண்பாடும் ஊட்டம் பெற்று சமூக வாழ்வு சீர்குலைந்துள்ள விஷச் சூழலில் இதயராசனின் சிறுகதைகள் போல் ஒன்றல்ல பல தொகுதிகள் வெளி வருவது சமகாலச் சமூக தேவையாகும்.

சிறுகதைகள் நூலாக்கம் பெறுவது மட்டுமன்றி அவை வீடுகள் முதல் நிறுவனங்கள் வரை பரந்த வாசிப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும். வாசிப்புடன் மட்டுமன்றி விவாதங்கள் எழுப்ப வேண்டும். விவாதங்கள் எழுப்புவதோடு திருப்தியடையாது வாழ்வின் நடைமுறை யதார்த்தத்தோடு பொருத்திப் பார்க்கப்பட்டு முரண்பாடுகளை முகம் கொள்ளும் வாழ்வுக் கலையை கற்கும் மனப்பக்குவத்தை உருவாக்க வேண்டும்.

இலக்கியம் என்பது வாழ்வுப் பயிற்சிப் பள்ளியாக மாறுவதற்குச் செயலூக்கமுள்ள செயற்பாட்டாளர்களாகி நாம் அனைவரும் புத்தகப் பண்பாட்டை முன்னெடுக்க முயல்வோம்.இச் சிறுகதைகள் பற்றிய வாசகர்களின் திறந்த மனத்துடனான விமர்சனங்களை வரவேற்கிறோம்.

**தேசிய கலை இலக்கியப் பேரவை**
இல. 571/15, காலி வீதி,
கொழும்பு – 06
18-02-2010
T.P – 2381603, 0778851989



படிப்பகம்

www.padippakam.com

# அணிந்துரை

**- பேராசிரியர் சி.சிவசேகரம் -**

நண்பர் இதயராசன் அண்மைக் காலமாகவே சிறுகதைகளை எழுதி வருகிறார். ஆனால் அவர் சொல்லுகிற கதைகள் அவருடைய இதய ஆழத்தில் எத்தனையோ ஆண்டுகளாகப் புதைந்து கிடந்தவை. தன்னுடைய சிந்தனையையும் உலக நோக்கையும் நெறிப்படுத்தியவை என்று சொல்லக் கூடிய நிகழ்வுகளும் மனித உறவுகளுமே அவருடைய கதைகளிற் பதிவாகியுள்ளன. எல்லாக் கதைகளுமே வன்னிப் பிரதேசத்தை மையமாகக் கொண்டவை. அங்கே மாறிவந்த சமுதாயச் சூழலின் பல்வேறு காலகட்டங்களின் நிகழ்வுகள் சுவைபடப் பரிமாறப்படுகின்றன.

அவர் எழுதி நான் வாசித்த முதலாவது கதை பத்துச் சதம் என்று நினைக்கின்றேன். அது சிறுவயதில் நடந்த ஒரு நிகழ்வு எவ்வாறு ஒருவருடைய உலக நோக்கை மாற்றியமைத்தது என்பதன் பதிவு. ஆசிரியர் கதையை ஒரு சிறுவனுடைய மொழியில் எழுத முயலவில்லை. வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்க்கிற போது அந்நிகழ்வு தன்னுடைய மனதில் எவ்வாறு பதிவாகியிருந்ததோ, அவ்வறே கதை கூறப்பட்டுள்ளது. சுயநலமும் தன்முனைப்பும் மிக்கவனாக வளர்ந்திருக்கக் கூடிய ஒரு சிறுவனுக்கு நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் ஒரு முதியவர் காட்டுகிற அன்பும் கனிவான சொற்களும் அவனுடைய கண்களைத் திறந்து விடுவதையே கதை கூறுகிறது. இதயராசன் நீதிக்கதை போன்றோ உபதேசம் போன்றோ கதையைக் கூறவில்லை. வெறுமனே, உரிய தருணமொன்றில் ஏற்படும் சிறியதொரு அனுபவம் வாழ்க்கைப் பாதையில் ஒரு நல்ல திருப்பத்தை ஏற்படுத்தக் கூடும் என்பது எந்தவிதமான ஆரவாரமோ ஆர்ப்பாட்டமோ இல்லாமற் கூறப்பட்டுள்ளது. இது இந்த நூலிலுள்ள கதைகளில் என் மனதை மிகவும் கவர்ந்ததென்பேன்.

நவீன சீன ஆக்க இலக்கியத்தின் முன்னோடியான லூஷுன் தன்னுடைய முதலாவது சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் தனது படைப்புக்களிற் பலவும் தன்னுடைய கடந்த கால அனுபவங்கள் சில ஏற்படுத்திய ஆழமான மனத் தாக்கங்களிலிருந்து உருவானவை என்று கூறியிருக்கிறார். அவரைப்போலவே சீனாவின் முக்கியமான நவீன இலக்கியவாதியான மாஓ துன் எழுதிய சிறப்பான கதைகள் அவரைச் சூழ நிகழ்ந்தவற்றை அடிப்படையாகக் கொண்டவையே. இவ்வாறே தமிழின் சிறந்த சிறுகதை எழுத்தாளர் எனக் கொண்டாடப்படும் புதுமைப் பித்தனின் கதைகளிற் பெரும்பாலானவை அன்றாட வாழ்வின் பிரதிபலிப்புக்களே. மொழி நடை, கதை கூறும்விதம், ஆசிரியரது கருத்தை நுழைக்கும் நுட்பம் போன்றவை ஆளுக்காள் வேறுபடலாம். ஆனால் உலகின் உன்னதமான படைப்புக்கள் மனித இருப்பையும் மனித இருப்புப்பற்றிய பார்வையையும் பற்றியனவாகவே பெரும்பாலும் அமைகின்ன என்றே நினைக்கிறேன்.



படிப்பகம்

கதை கூறல் என்பது கண்டதை அப்படியே திருப்பிக் கூறுவதல்ல. அது வெறுமனே மனப்பதிவொன்றின் மீளுருவாக்கமோ அல்ல. கண்டதன் அல்லது அனுபவித்ததன் சாரம்சத்தை மற்றவர்கள் விரும்பிக் கேட்குமாறும் கண்டது அல்லது அனுபவித்தது தன் மீது ஏற்படுத்திய தாக்கத்தையும் அதன் விளைவான எண்ணங்களையும் மாற்றவர்களுடன் பகிர்வதுமே நல்ல கதை கூறலாக இயலும். இங்கு சில விடயங்கள் சொல்லத் தேவையற்றோ சொல்லத் தகாதவையாகவோ அமையலாம். சில விடயங்கள் கதையுடன் பொருத்தி வருவனவாக வேறு களங்களில் நிகழ்ந்தனவாக இருக்கலாம். சில நிகழாத ஆனால் நிகழக்கூடியனவாக இருக்கலாம். சில நிகழ வேண்டியன என ஒரு படைப்பாளி வேண்டுவனவாகவும் இருக்கலாம் இங்கேதான் புனைவு என்கிற அம்சம் நுழைகிறது. காட்சி வருணனைகள் போன்றும் கதைச் சூழலின் விவரணங்கள் போன்றும் கதையோடு சேர்கிற புனைவுகள் வாசகரது கவனத்தை ஈர்ப்பதற்காகவோ கவனத்தைத் தொடர்ந்தும் பேணவோ வெறுமனே அலங்கார நோக்கிலோ அமையலாம். இவையெல்லாம் ஒவ்வொருவர் கதை கூறக் கைக்கொள்கிற உத்திகளுடன் சேர்த்துக் கருத்தத் தக்கவை. அன்றாட வாழ்வின் பரிமாறப்படுகிற கதைகளிற்கூட நாம் இப்பண்புகளைக் காணலாம்.

ஒரு கதையின் சாரம்சத்தை ஓரிருவரிகளிற்கூடக் கூறி விடலாம். அதைப் பக்கக்கணக்காக விரிவுபடுத்தலாம். கதையொன்று வாசகரின் ஆர்வத்தைப் பேணுவதைவிட முக்கியமானது சொல்ல நினைத்த, சரியாகச் சொன்னால் பகிரநினைத்த, எண்ணத்தை வாசகரின் மனதில் பதியவைக்க முடிந்ததா என்பதுதான். எல்லாமும் எல்லார் மனதிலும் பதியக் கூடியனவல்ல. எனவே கதை கூறுகிறவர் எவ்வகையான வாசகரை மனதிலிருத்தி எழுதுகிறார் என்பது முக்கியமானது. அவர்களுடன் ஒரு படைப்பாளிக்குத் தனது அனுபவத்தைப் பகிர இயலுமானால் அது அவரது படைப்பின் பயனை எய்துவதாகும்.

இதயராசனின் மொழிநடை பேச்சுமொழியோடியைந்தது. அதிலே ஆர்ப்பாட்டமான தன்மையையோ சொல் அலங்கார அடுக்குக்களையோ வாசகரைப் பிரமிக்கச் செய்யும் வர்ணனைகளோ இல்லை. அவர் அருகிலிருந்து பேசுவது போலவே அவருடைய கதைகள் அமைந்துள்ளன. அவரே எனக்குத் தெரிவித்தபடி இக்கதைகள் அவர் அறிந்த நிகழ்வுகளின் மறுவார்ப்புக்கள்.

சமூகம் பற்றிய அவரது பார்வை இக்கதைகளூடு தெளிவாகவே புலனாகின்றன. பின்தங்கிய கிராமவாழ்வின் மனித உறவுகளும் விழுமியங்களும் செயற்படுகிறவிதமும் அவை இளமனம் ஒன்றில் ஏற்படுத்துகிற தாக்கங்களும் ‘பத்துச்சதம்’, ‘வைரவி ஆச்சி’ ஆகிய கதைகளில் சிறப்பாகப் பதிவாகின்றன. மூடநம்பிக்கைகள் பற்றிய பதிவுகளாகவும் அவற்றை எவ்வாறு போரிட இயலுகிறது எனவும், செய்வினை சிறப்பாகச் சொல்கிறது. கிராமவாழ்வின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள சமூக விரோதப் போக்குகள் எவ்வாறு மனிதரிற் குடிகொள்கின்றன என்பதையும் அவற்றை எவ்வாறு சமூக அக்கறையுடைய

www.padippakam.com

ஒரு சிறுபான்மையினரால் வெல்லமுடியும் என்னபதோடு மட்டுமல்லாமல் தொடர்ச்சியாகக் களைபிடுங்கப்படாவிட்டால் தோட்டம் புல் பூண்டுகளால் நிறைந்து விடும் என்பதனைத் 'தபால்' சொல்லுகிறது.

இவ்வாறு இதயராசனின் சமூக அக்கறை சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகிற புல்லுருவிக் கூட்டத்தின் மீதான அவரது வெறுப்பாகவே பதிவாகியுள்ளது. வெள்ளைச்சி, வைரவி ஆச்சி ஆகிய இரண்டு கதைகளும் முறையே ஒரு பசுவிடம், ஒரு பாட்டியிடமும் ஒரு சிறுவனுக்கு உருவாகி வளருகிற ஆழமான பாச உணர்வின் பதிவுகள் மிக நன்றாகவே சொல்லப்பட்டுள்ளன.

. இத்தொகுதியில் நல்ல மனிதருள் உறைந்து கிடக்கும் போராட்ட உணர்வை வெளிப்படுத்துகிற கதை 'நம்பிக்கை'. போரின் பயனாக அங்கவீனமான ஒரு பெண் தன்வாழ்வை சமூகப் பயனுள்ளதாக அமைப்பதிற் காட்டுகிற உறுதியைக் கூறுகிற இக்கதை இன்றைய சூழலில் மிகவும் பயனுள்ள ஒரு பதிவுமாகும். அவ்வாறே இனத்துவேஷம் படமெடுத்தாடுகிற ஒரு சமூகச் சூழலில் மக்களுக்கு நிதானமூட்டுகிற ஒரு கதையாக 'ஜெயா' உள்ளது. இக்கதை சிங்களத்திற்கு மொழிபெயர்க்கப்படுவது பயனுள்ளது.

இதயராசனின் கதைகள் இன்னுஞ்சிறிது ஆழமாகச் சமுதாய நிகழ்வுகளைத் தோண்ட முற்படுமானால், அவர் காணுகிற அநீதிகட்கும் அவற்றுக்கெதிரான போராட்டங்கள் உரிய வெற்றியை எப்போதுமே காண இயலாமைக்குமான காரணங்களையும் அவற்றால் வெளிக்கொணர இயலுமாயிருக்கும். வெளிவெளியாக அரசியல் சார்ந்த எழுத்தாகவே அவை அமைய வேண்டும் என்பது எனது கருத்தல்ல. அவரது கதைகள் வலுவான கேள்விகளை அவர் இலக்கு வைக்கும் வாசகர்களிடம் எழுப்ப வேண்டும் என்பதே என் விருப்பம்.

அதிகம் அலட்டிக் கொள்ளாமல் குறியீடு, படிமம் என்பவற்றின் பேரில் வலிந்து நடைமுறைக்கு இசைவற்ற புனைவுகளைத் திணிக்காமல் அழகாகக் கதை கூறுகிற ஒரு படைப்பாளி ஈழத் தமிழ் எழுத்துத் துறைக்குக் கிடைத்துள்ளார். அவர் மானுடம் பயனுற மேலும் எழுதிவர வேண்டும்.



படிப்பகம்

# முன்னுரை

'போராளியும் எழுத்தாளனும் தூக்கத்திலும் விழித்திருப்பார்கள்' எழுத்தாளர் இதயராசனின் 'முரண்பாடுகள்' சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை எழுத ஆரம்பித்தபோது, மேற்படி கூற்று எனது மனதில் தோன்றிற்று. போராளியையும், எழுத்தாளனையும் சமநிலைப்படுத்திக் கூறப்பட்ட இக்கூற்றினுள் உள்ளடங்கியிருக்கும் எழுத்தாளனைப்பற்றிய 'சமூகப்படிமங்கள்' என்னை மேலும் நிதானப்படுத்தியது.

இலக்கியங்கள் நித்தியமானவைகள்; அந்தவகையில் 'இலக்கியப் பிரம்மனான' எழுத்தாளனும் நித்தியமானவன், அவன் தனது மரணத்தின் பின்பும் இலக்கியத்தினுள் வாழ்ந்திருப்பான்.''இலக்கியத்தை வளர்த்தவன் மனிதன், இலக்கியத்தால் வளர்ந்தவன் மனிதன்.'' முகவரி தெரியாத யாரோ ஒரு எழுத்தாளனால் பதிவு செய்யப்பட்ட அர்த்தபுஷ்டியான வாக்கியங்கள் இவை!.

ஒரு இலக்கியப்படைப்பின் ஆழத்தையும், அகலத்தையும், கூர்மையையும், கவர்ச்சியையும் இவைகளுக்கு மேலால் காலங்கடந்த சமூகப் பங்களிப்பையும் ஏற்படுத்துவது அவ்விலக்கியத்தைக் கையாளும் மொழிவாண்மையிலேயே தங்கியுள்ளதெனலாம்.

இலக்கிய மொழிவாண்மை என்பது, ஒருவன் கட்டுப்பாடான சுதந்திரத்துடன் தன்னிச்சையாக மேற் கொள்ளுகின்ற 'சமூக மேச்சலுக்கூடாகப்' பெறுகின்ற அனுபவங்களையும், அந்த அனுபவங்களுகூடாகப் பெறுகின்ற மொழிவாண்மையயுமே குறிக்கின்றது. அனுபவங்களுக்கூடாக பெறுகின்ற இம்மொழி வளத்தை 'அனுபவமொழி' எனக்கொள்ளலாம். அதேவேளை வரன்முறையான மொழிப்பயிலுகை இலக்கிய ஆக்கத்திற்கு உகந்ததல்ல என்பது என்கருத்தல்ல. வரன்முறையான மொழித்தேர்வு இலக்கியப் படைப்புக்கான மொழிப்பிரயோகச் செல்நெறியை வளப்படுத்தும் என்பதில் எனக்கு முரண்பட்ட கருத்தில்லை என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமென எண்ணுகிறேன்.

இலக்கியப்படைப்புகள் என்பன எழுத்தாளனானவன் தான் பெற்றுக்கொண்ட அனுபவத்தை அந்த அனுபவ உணர்வுக்கூடாக அவனால் நிதர்ஷனமாகத் தரிசிக்க முடிகின்ற பயன்மிக்க செய்திப்படிமத்தை உளவியல், சமூகவியல், மானிடவியல், வாழ்வியல், அழகியல் போன்ற கூறுகளின் ஆதார சுருதியுடன் பொருத்தமான மொழிவளத்துக்கூடாக வெளிப்படுத்தலே இலக்கியப் படைப்புகள் எனலாம். இலக்கியப் படைப்புக்களுள் சிறுகதை இலக்கியமானது மிகவும் நுணுக்கமானதும், வலிமையானதும், வாசகர்களிடம் வரவேற்புப் பெற்றதுமானதொரு கூறாகும்.

சிறுகதை இலக்கியத்தில் குறுகியதொரு எல்லைக்குள் பல்வேறுபட்ட உணர்வுகளை அவற்றின் நயம் கெடாமல் கூறவேண்டியுள்ளதால் இதையொரு நுணுக்கமான படைப்பாக இனங்காணமுடிகிறது, அதேவேளை அதே குறுகிய எல்லைக்குள் பல்வேறுபட்ட கூறுகளுக்கூடாக ஒரு சமூகச்செய்தியையும் வழங்கக் கூடியதாக உள்ளதால் இப்படைப்பை ஒரு வலிமையான வடிவமாக முன்னிலைப் படுத்த முடிகின்றது.

இயந்திரமயமாகிவிட்ட மனிதவாழ்வியலில் இலக்கிய வாசிப்புக்காக நேரத்தை ஒதுக்குகின்ற தன்மை வெகுவாகவே அருகிவிட்டதை சமூகத்தில் அவதானிக்க முடியும். ஆதலால் குறுகிய நேரத்தில் ஒரு இலக்கியத்தை வாசித்து முடிக்கவும், அவ்விலக்கியத்திலுள்ள எண்ணிக்கையில் மிகவும் குறைவான 'படிமங்களைத்' தங்கள் மனத்தளத்தில் உள்வாங்கிக் கொள்ளவும் ஏற்றதாக இச் சிறுகதை இலக்கிய வடிவம் அமைவதால், சிறுகதை இலக்கியமானது வாசகர்களால் பெரிதும் விரும்பப்படும் ஒரு இலக்கியக் கூறெனலாம்.

இன்றைய சமூகத்தின் இயங்கியலை நோக்கும்போது பல்வேறுபட்ட பிரச்சினைகள் சங்கிலித்தொடர்பாக நீண்டு செல்கின்றன. அதிலும் குரல்வளையை நசிக்கும் சம்பவங்களாகவே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவைகளை உடனுக்குடன் இலக்கியமாக்குவதற்கு சிறுகதை இலக்கியவடிவந்தான் இடங்கொடுக்கின்றது.

எனவே இலக்கியத்தில் சிறுகதை இலக்கியப்பிரிவானது, வாசகர்களிடமிருந்தும் எழுத்தாளர் களிடமிருந்தும் ஒன்றையொன்று ஈர்க்கின்ற கருத்துநிலைகள் மேற்கிளம்புவதால் சிறுகதை இலக்கியமானது மேலுயர்ந்துள்ளதெனலாம். அண்மைக்காலத்தில் புதிய எழுத்தாளர்களின் வருகை இலக்கியப்பரப்பை செழுமைப்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எழுத்தாளர் இதயராசன் இலக்கியப்பரப்பில் கவிதை இலக்கியமூலம் 1977இல் அறிமுகமானவர். 2008 இல் இவரால் வெளியீடு செய்யப்பட்ட 'மீறல்கள்' என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் இலக்கியப் பரப்பில் தன்னை நிரந்தரமாகப் பதிவு செய்து கொண்டவர். இவரது கன்னிமுயற்சியான 'மீறல்கள்' கவிதைத்தொகுதி வாசகர்கள் மத்தியிலும், கவிதைப் புலமைமிக்கவர்கள் மத்தயிலும் செழுமையான வரவேற்பைப் பெற்றதென்பதை இங்கு பதிவு செய்வது பொருத்தமானதாகும்.

இப்போது 'முரண்பாடுகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு மூலம் தன்னை ஒரு சிறுகதைப் படைப்பாளியாகவும் இனங்காட்டிக் கொள்கின்றார். இதயராசனின் 'முரண்பாடுகள்' என்ற இச் சிறுகதைத் தொகுப்பிலுள்ள கதைகளுக்குள் நுழைவதற்குமுன், எழுத்தளர் இதயராசன் பற்றிய முக்கிய வாழ்க்கைக் குறிப்புக்களை முன்வைப்பது இவரைப்பற்றிய புரிதலுக்குத் துணைபோகுமென நினைக்கிறேன்.

www.padippakam.com

இதயராசன் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தென்மராட்சிப் பிரிவில் மட்டுவில் கிழக்கு மானாவளைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது தந்தையார் அமரர் வே. சின்னத்தம்பி ஆவார். பக்குவப்பட்டதொரு விவசாயியான சின்னத்தம்பி அவர்கள் மட்டுவில் கிழக்கு மானாவளைக் கிராமத்தில் அதன் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களில் முதன்மையானவராவார்.

சின்னத்தம்பி ஒரு மாக்ஸிஸவாதி என்பது இங்கு கூறப்பட வேண்டியதொரு முக்கிய செய்தியாகும். பேச்சில் - நடத்தையில் -தொழிலில் - சமூகத்தில் - தனது அரசியற் கோட்பாட்டில் இவர் காட்டிய நேர்மைத்தன்மைகளால், அக்கிராமத்து மக்களால் இவர் தலைவராக்கபட்டு ‘தலைவர் சின்னத்தம்பி’ என்றே அழைக்கப்பட்டார்.

பின்தங்கிய மானாவளை கிராமத்தின் வளர்ச்சிக்கு ஒரு சனசமூகநிலையம் அவசியமென உணரப்பட்டபோது அதைப் பொறுப்பேற்று நடைமுறை யாக்கியவர்களில் தலைவர் சின்னத்தம்பி முக்கியமானவர். ஆறுகப்புகளில் கொட்டிலாக உருவாகி, வளர்ச்சியடைந்த மோகனதாஸ் சனசமூக நிலையம் இனப்பிரச்சினையால் ஏற்பட்ட யுத்தத்தால் அழிவுகளுக்குள்ளாகித் தரைமட்டமாகி, இன்று மீண்டும் உருப்பெற்று நிமிர்ந்து நிற்கின்றது.

சின்னத்தம்பி என்ற மனித விருட்சத்தின் விழுதுகளில் ஒன்றுதான் எழுத்தாளர் இதயராசன். ஏறத்தாள தந்தையின் உருவச் சாயலைக் கொண்டுள்ள இதயராசன் தந்தையின் உளச்சாயலையும் கொண்டுள்ளார் என்பது முக்கியமானதொரு செய்தியாகும். ஆசிரியராகவும், ஆசிரியகல்லூரி விரிவுரையாளராகவும், கடமையாற்றிய இவர் தற்போது கல்வி அமைச்சில் தமிழ் மொழிப் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றுகிறார்.

‘முரண்பாடுகள்’ என்ற இவரது சிறுகதைத் தொகுப்பில் பதினைந்து சிறுகதைகள் உள்ளடங்கியுள்ளன. அனைத்துக் கதைகளும் வன்னிப்பிரதேசத்தைவைத்து எழுதப்பட்ட கதைகள் என்பதை கதைகளை வாசிக்கும்போது இலகுவாகப் புரிந்துகொள்ளலாம். அதேவேளை கதைத் தளங்களுக்கான கால இடைவெளிகள் நீண்டிருப்பதையும் கதைகளுக்கூடாக உணரமுடிகின்றது.

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்ற களியாட்டு விழாவில் பொதுமக்களுக்கும் பொலிசாருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்புச் சம்பவம் இனக்கலவரமாக்கப்பட்ட காலமும் கூறப்பட்டுள்ளது. இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்ட காலமும் கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு புதுமாத்தளனில் நடந்த இறுதி யுத்தத்தில் ஏற்பட்ட பொதுமக்களின் அழிவுபற்றிய சம்பவவங்களும் கூறப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் அனைத்துக் கதைகளும் 2009ஆம் ஆண்டுகாலப் பகுதியிலேயே பிரசுரமானதற்கான பதிவுகளும் காணப்படுகின்றன. எனவே, நீண்டகாலமாக எழுத்தாளரின் மனதில் சிறுகச் சிறுக ஒட்டிக் குவிந்துபோன சம்பவங்களுக்கு இப்போது இலக்கிய வடிவம் கொடுத்து, தனது நீண்டகால மனச் சுமையை இறக்கியுள்ளார் என்ற முடிவுக்கு வரலாம். இதுவரை வெளிவந்த சிறுகதைத் தொகுதிகளில் பிரதேசத்தை மையமாகக் கொண்டமைந்த சிறுகதைகள் உள்ளடங்கிய சிறுகதைத் தொகுதி வெளிவந்ததாக எனத்குத் தெரியவில்லை.

வன்னிப்பிரதேசத்தின் புவியியல் அமைவுகளையும் வன்னிப் பிரதேசத்திற்குட்பட்ட சமூகங்களின் வித்தியாசமான இயங்கியல் வெளிப்பாடுகளையும், வன்னிப்பிரதேச அரச ஊழியர்களின் பணிநிறை வேற்றத்திலுள்ள செளுமை, அசமந்தப்போக்கு எதிர்வினைக்குரிய தீர்க்கதரிசனங்கள் போன்ற விடயங்களையும் வன்னிப்பிரதேசத்திலுள்ள சுரண்டல் பற்றிய பதிவையும் இனப்பிரச்சினையை எப்படி இனங்காண வேண்டும் என்ற செய்திகளுமாக வன்னிப்பிரதேசம் பலநிலைகளில் நின்று நோக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளதாக அமைந்துள்ளன. இச்சிறுகதைத் தொகுதியானது வன்னிப்பிரதேசத்தின் வரலாற்றுப் பதிவு நூலாகவே இனங்காண முடிகின்றது.

எழுத்தாளர் இதயராசன் வன்னிப்பிரதேசத்தில் வாழ்ந்து அப்பிரதேசத்து மண்ணோடும் மக்களோடும் இரண்டறக் கலந்த அனுபவ உணர்வுகளை இக்கதைகள் அனைத்துமே வெளிப்படுத்துகின்றன.

ஓர் எழுத்தாளன் தனது படைப்பில் நடமாடவிடுகின்ற பாத்திரங்களையும் பிற்புலங்களையும் செய்திகளையும் தீர்மானிக்கும் போது, மேற்கூறப்பட்ட கூறுகளுக்கும் தனக்குமுள்ள தொடர்புகளையும் மேற்கூறப்பட்ட கூறுகளுக்கும் சமூகத்திற்குமுள்ள தொடர்புகளையும் தெளிவுபடுத்தி உறுதிசெய்து கொள்வது மிக அவசியமானதாகும். இவ்விடயத்தில் எழுத்தாளர் இதயராசன் அவர்கள் மிகவும் நிதானமாகவே நின்றுள்ளார் என்பதை அவரது படைப்புகள் உணர்த்துகின்றன.

சிறுகதைப் படைப்புகள் என்பன உளவியலோடும் உணர்வியலோடும், மொழியியலோடும் பெரிதும் தொடர்புபடுவதால் உளவியல் மொழியியல் போன்ற கூறுகளுக்கும் எழுத்தாளருக்கு மிடையில் உள்ள உறவானது 'தொப்புள்கொடி' உறவுக்கு சமாந்தரமான உறவாகப் பேணப்படுதல் வேண்டும் என்பதும் கவனிக்கப்படவேண்டும் ஏனெனில் எழுத்தாளனானவன் தன்னால் உணரப்படும் உணர்வுகளையும் அந்த உணர்வுகள் கற்பிக்கின்ற செய்திகளையும் தனது மொழிவாண்மைக்கூடாக பாத்திரம் என்ற வாகனத்தினூடாகவே சமூகத்திற்குள் அனுப்புகிறான். எனவே வரலாற்றுப்பார்வையும் யதார்த்தநிலை உணர்வுத் தெளிவுமுள்ள இலக்கிய வாகனத்தால் மட்டுந்தான் சமூகத்தில் வலம்வரமுடியுமென்பதை படைப்பாளியானவன் உணர்ந்து கொள்ளவேண்டும்.



படிப்பகம்

இத்தொகுப்பிலுள்ள 'வெள்ளைச்சி' என்ற சிறுகதையானது வெள்ளைச்சி என்ற ஒரு பசு காணாமல் போகின்றது. அந்தப் பசுவை ஒரு சிறுவன் தேடிக் கண்டுபிடிக்கின்றான். கதையின் உள்ளடக்கம் இவ்வளவுதான். பேசமுடியாத பசுவினையும் பேசக்கூடிய ஆனால் பக்குவமற்ற சிறுவனையும் பிரதான பாத்திரங்களாக்கி சிறுவனின் உள்ளத்தையும் சூழலையும் பேசவைத்து இக்கதையை நகர்த்தியிருக்கும் முறைமை அற்புதமாகவே உள்ளது. ஒரு இலக்கியப்படைப்பில் அவதானிக்கபடவேண்டிய அகநிலைக்காரணிகளும் புறநிலைக் காரணிகளும் எப்படி அவதானிக்கப்படவேண்டும் என்பதற்கு இக்கதை முன்மாதிரியாக அமைகின்றது எனக்கூறலாம். இக்கதைக்கூடாக எழுத்தாளர் இதயராசனின் 'அகநிலை முதிர்வை' இனங்காணமுடிகின்றது.

இதே போன்று 'விஷகடிவைத்தியம்' என்ற கதையும் அமைந்துள்ளது. ராசன் என்ற பாத்திரத்தின் சகோதரிக்குப் பாம்பு கடிக்கிறது. ராசனும் அவனது சித்தப்பாவும் பாம்பு கடிக்கு உள்ளான தங்கையடன் உழவு இயந்திரத்தில் விஷகடிவைத்தியரிடம் செல்கின்றனர். தங்கை காப்பாற்றப் படுகின்றாள். இவ்வளவுதான் கதையின் உள்ளடக்கம். பாம்புகள்பற்றியும் பாம்புக்கடியின் வகைகள்பற்றியும் பாம்புக்கடிவைத்தியம் பற்றியும் விஷகடி வைத்தியத்தோடு தொடர்புபட்ட மூலிகைகள் பற்றியும் விஷகடிவைத்தியரின் நடவடிக்கைள்பற்றியும் எழுத்தாளர் விபரித்துள்ள முறைமையானது எழுத்தாளரை ஒரு விஷகடிவைத்தியனாகவே படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது. இங்கு எழுத்தாளர் விஷகடிரவத்தியனாக மாறியுள்ளார் என்ற கூற்றினுள் உள்ளடங்கியிருக்கும் எழுத்தாளரின் சமூக ஆளுமையை பாராட்டாமல் இருக்கமுடியாது.

இலக்கியப் படைப்புகள் அந்த இலக்கியப்படைப்பாளியின் இருப்பை மட்டும் உறுதிப்படுத்துவதல்ல அன்றைய சமூகத்தையும் அச்சமூகமாந்தர்களின் பண்புகளையும் அவர்களின் பலம், பலவீனங்களையும் காலம்கடந்து தெரிவிக்கின்ற மிக உயர்ந்ததொரு ஊடகமாகும். எனவே எழுத்தாளனின் 'இலக்கிய இருப்பும்' அவன் படைக்கின்ற இலக்கியங்களின் நோக்கங்களிலும்; அந்நோக்கங்கள் ஊடறுத்துச் செல்லும் சமூகத்தளங்களிலும் அந்த இலக்கியங்களால் சமூகத்தளத்தில் ஏற்படுகின்ற விளைவுகளிலுமே தங்கியுள்ளன.

'ஜெயா' என்ற கதை தேசியத்தளத்தில் பயிலவேண்டிய மனிதத்தை அடிப்படையாகக் கொண்ட உறவுத்தளத்தையும் 'முரண்பாடு' என்ற கதை மனிதத்தை அடிப்படையாகக் கொண்ட உறவுத்தளம் மீறப்பட்டதால் எற்பட்ட மனித அவலங்களையும் அழிவுகளையும், 'நம்பிக்கை' என்ற கதை நமது நம்பிக்கைகளும் உறவுகளும் குவிநிலை அடையவேண்டிய தளத்தையும் புலப்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

www.padippakam.com

இச் சிறுகதைத் தொகுப்பிலுள்ள கதைகளில் 'வெள்ளைச்சி', 'விஷகடிவைத்தியம்' ஆகிய கதைகள் உச்சமான இலக்கியச் செழுமையைப் பெற்றிருப்பதுபோல் 'ஜெயா', 'முரண்பாடுகள்', 'நம்மிக்கை' ஆகிய கதைகள் உச்சமான கோட்பாட்டுச் செழுமையைப் பெற்றிருக்கின்றன. நமது மண்ணில் நடக்கின்ற இனப்பிரச்சினைக்கு ஏற்றதாக அரைநூற்றாண்டுக்கு மேற்பட்டகால வரலாறுண்டு. எனவே இந்த இனப்பிரச்சினையை சாதாரண ஒரு பிரச்சினையாக நாம் பார்த்துவிடமுடியாது. ஜெயா, முரண்பாடுகள், நம்பிக்கை ஆகிய மூன்று கதைகளிலும் இனப்பிரச்சினையின் அணுகுமுறைகளில் 'கைநழுவிப்போனதை' முக்கிய சமூகப்பண்புகளாக எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளனர். அதிலும், 'நம்பிக்கை' என்ற கதை 'மனித விடிவின்' மையப்புள்ளியை கோடிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமென நினைக்கின்றேன்.

' தர்மபுரம்' என்ற கதை கிராமப்புறத்தில் நிலவுகின்ற 'சுரண்டலின்' வடிவத்தை வெளிப்படுத்துகின்றது. இத்தொகுப்பிலுள்ள கதைகளை இறங்கு நிலையில் ஒழுங்கு படுத்தினால் தியாகம், மரங்கொத்தி, மைதானம் போன்ற கதைகள் கீழ் நோக்கி நகர்வதைக்காணலாம் இக்கதைகளிலுள்ள கருத்துக்கள் எழுத்தாளரைப் பொறுத்து நிதர்சனமானவைகளாக இருக்கலாம், ஆனால் இக்கதைகளை சமூகத்திற்குள் அனுப்பும்போது கருத்து நிலையில் சில முரணிய தோற்றங்கள் ஏற்படுபதைத் தவிர்க்க முடியாததாகின்றது.

மொத்தத்தில் இதயராசனின் 'முரண்பாடுகள்' என்ற இச்சிறுகதைத் தெகுதியானது வன்னிப்பிரதேசத்தின் இரத்தம் கசிகின்ற 'வெட்டுமுகத்தோற்றம்' என்பதையும் எழுத்தாளர் இதயராசன் 'தூக்கத்திலும் விழித்திருப்பவர்' என்பதையும் நிதானமாகக் கூறமுடியும். இதயராசனிடமிருந்து இன்னும் பல வளமான படைப்புக்கள் வாசகர்களுக்குக் கிடைக்குமென நம்புகிறேன்.

**கே.ஆர்.டேவிட்**
**(ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்)**

'மிதிலை'
பிடாரி கோவிலடி
ஆனைக்கோட்டை,
06.01.2010.



படிப்பகம்

www.padippakam.com

# நுழைவாயில்

முப்பது வருடமாக எழுதிவைத்திருந்த கவிதைகளைத் தயங்கித் தயங்கி 'மீறல்கள்' தொகுதியாக 2008 இல் வெளியிட்டேன். அத்தொகுதிக்கு நண்பர்களிடமும், வாசகர்களிடமும் கிடைத்த வரவேற்பு என்னைப் பிரமிக்க வைக்கின்றது. என்னளவில் நான்பட்ட அவஸ்தைகளை வடித்துவைத்தேன். அந்த அளவில் திருப்திப்பட்டுக் கொண்டேன். இது பேசமுடியாத குழந்தை, தாயிடம் பேசும் மொழி போன்றதுதான். இருப்பினும் அம்மொழி வாசகர்க்கும் புரிந்திருப்பது ஆச்சரியமானதுதான். அந்த அனுபவப் பகிர்வு, எனது பலத்தினையும் பலவீனத்தினையும் எனக்கு இனம் காட்டியது என்றால் மிகையாகாது.

மீறல்கள் கவிதைத் தொகுதியை அடுத்து எழுதப்பட்ட கவிதைகளில் 2008 புதுவசந்தத்தில் 'தண்ணீர்ப்பங்கு' என்று ஒரு நீண்ட கவிதையை எழுதியிருந்தேன். அது வன்னியில் சிறுபோக வேளாண்மையின் போது எதிர்நோக்கும் தண்ணீர்ப்பிரச்சினையை மையமாகக் கொண்டிருந்தது. அக்கவிதைக்கு முன்வைக்கப்பட்ட விமர்சனங்களில் ''இது ஒரு சிறுகதைக்கான கருவைக் கொண்டுள்ளது'' என்பதாகும். இதனைச் சிறுகதையாக எழுதியிருப்பின் சொல்ல வந்த அனுபவங்களை மேலும் செழுமையுடனும் தெளிவாகவும் சொல்லியிருக்கலாம் என்பதாகவே அமைந்திருந்தது. இக்கருத்து என்னைச் சிறுகதை எழுதுவது பற்றிச் சிந்திக்கத்தூண்டியது.

எனது வாசக அனுபவத்தில் சிறுகதையில் கைவைப்பது விபரீத விளையாட்டாகவே பட்டது. இருப்பினும் மீறல்கள் கவிதைத் தொகுதியில் முப்பது வருடங்களாக எழுதியமை போன்று, இங்கும் எனது ஆழ்மனதில் வடுவாக உறைந்துகிடக்கும் விடயங்களுக்கு உயிர் கொடுத்தால் என்ன? என்ற கேள்வி அடிக்கடி எழுந்து கொண்டே இருந்தது. மனம் அடிக்கடி மறுத்த போதிலும் ஆழ்மனம் எழுது, எழுது என்றே சொல்லிக் கொண்டிருந்தது. இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து சமரசம் செய்ய முடியாத நிலைமையிலேயே துணிந்து 'பத்துச்சதம்' கதையினை ஒரே மூச்சில் எழுதிமுடித்தேன்.

எனக்கோ தலைப் பிரசவவலியும் அதையும் மீறிய புழகாகிதமும். தான்பெற்ற குழந்தை கறுப்போ, சிகப்போ ஏதாவது குறையோ ஆயினும் அதனை உச்சிமுகர்ந்த தாய், இன்னொரு தாயிடம் குழந்தைபற்றிய பாராட்டினை எதிர்பார்ப்பது போலவே, எனது கதையினையும் காட்ட ஆவலுற்று, எழுத்தாள நண்பர் கே.ஆர்.டேவிட் அவர்களிடம் தொலைபேசியில் வாசித்துக்காட்டினேன். எனது உணர்வினைப் புரிந்துகொண்டு, பொறுமையுடன் கேட்டு உச்சிமுகர்ந்து பாராட்டினார். அந்த உத்வேகம் தொடர்ந்து எழுதத் தூண்டியது. இருப்பினும் இவை பிரசுரத்துக்குத் தகுதியானதா என்ற ஐயம் எழுந்துகொண்டே இருந்தது.

'பத்துச்சதம்' கதையினை தாயகத்தில் பிரசுரத்திற்குக் கொடுத்தபோது அதனைப் பிரசுரித்து, பேராசிரியர் சி.சிவசேகரமும், தேசிய கலை இலக்கியப்பேரவைப் பொதுச்செயலாளர் திரு.சோ.தேவராஜாவும் என்னை



படிப்பகம்

www.padippakam.com

உற்சாகப்படுத்தித் தொடர்ந்து எழுதும்படி ஊக்கிவித்தனர். இதில் ஒரு சிறப்பம்சம் என்றவென்றால் 1977இல் தாயகத்தில்தான் எனது முதல் கவிதை வெளிவந்தது. அவ்விதமே 2009 இல் எனது முதல் சிறுகதையும் வெளிவந்தது. தாயகத்துடன் எனக்குள்ள உறவினை மேலும் இறுக்கமாக்கியுள்ளது. தொடர்ந்து 'செங்கதிர்' ஆசிரியர் திரு.கோபாலகிருஸ்ணன் தனது சஞ்சிகையில் 'வெள்ளைச்சி', 'நம்பிக்கை' என்ற கதைகளைப் பிரசுரித்து ஊக்குவித்தார். அவ்விதமே தமிழ்ச்சங்க வெளியீடான ஓலை சஞ்சிகை கனகலிங்கம், செய்வினை என்ற இரண்டு கதைகளையும் பிரசுரித்து உற்சாகப்படுத்தியது. இச்சஞ்சிகைகளிற்கு எனது இதயபூர்வமான நன்றிகள் என்றென்றும்.

நான் முதலில் குறிப்பிட்டது போலவே, எனது ஆழ்மனதில் உறங்கிக் கிடந்தவற்றுக்கே உயிர் கொடுக்க முற்பட்டேன். அவை எனது சின்னவயசு அனுபவங்களாகவே இருந்தன. அத்தோடு வன்னிப் பிரதேசத்தினையே தளமாகவும் கொண்டிருந்தன. எனவே தொடர்ந்து வன்னிப்பிரதேசத்தினைத் தளமாகக் கொண்டு எழுபதுகளில் இருந்து அண்மைய நந்திக்கடல் வரையான சம்பவங்களைப் பதிவாக்கியுள்ளேன். ஆரம்பத்தில் 'முறுகண்டியிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை' என்றே தலைப்பிட்டேன். அதனைவிட எல்லாக் கதைகளினதும் கருவினையும் மையப்படுத்தியே 'முரண்பாடுகள்' என்று தலைப்பிட்டுள்ளேன்.

குறிப்பாக நல்லதொரு அணிந்துரை தந்த பேராசிரியர் சி.சிவசேகரத்திற்கும், சிறப்பான முன்னுரை தந்த எழுத்தாள நண்பர் கே.ஆர்.டேவிட்டிற்கும், பதிப்புரை நல்கிய சோ.தேவராஜாவுக்கும், எனது நன்றிகள் என்றென்றும். மேற்குறிப்பிட்டவற்றுக்கு நிகராக எனது சிறுகதைப் பிரதிகளை வாசித்து, உற்சாகமூட்டித் தொடர்ந்து எழுதவைத்த நண்பர்கள் கலாநிதி ந.இரவீந்திரன், திரு.லெனின் மதிவானம், திரு .ஜெ.சற்குருநாதன் அவர்களுக்கு எனது நன்றிகள். மேலும்பிரதியை வாசித்து வேண்டிய திருத்தங்களையும் ஆலோசனைகளையும் வழங்கிய நண்பரகளான நோபேட் வரதராஜா, வி.வரதராஜா, மைத்துனரும் சகோதரியுமான திரு, திருமதி, அருந்தவராஜா, அன்பரசி திருமதி. சடகோபன், சிறந்தமுறையில் எழுத்தமைப்புச் செய்து ஆலோசனைகளும் வழங்கிய நண்பர் திரு.எஸ்.சற்குணராஜாவுக்கும், அழகிய அட்டை வடிவமைத்த திரு இ.இலங்கன் அவர்களுக்கும், நேர்த்தியாக அச்சிட்டு வழங்கிய எஸ் பிறின்ட் நிறுவனத்திற்கும் எனது நன்றிகள்.மேலே குறிப்பிட்ட வேலைகள் யாவும் நடைபெறுவதற்கு, எனக்குப் பக்கத்துணையாக இருந்து உதவியும் ஒத்தாசையும் வழங்கிய அன்பு மகளுக்கும், மனைவிக்கும், புத்தகவடிவம் பெற உற்சாகமூட்டி உங்கள் கரங்களில் தவழ உதவிபுரிந்த தங்கை றஜனிக்கும், எனது உற்ற நண்பன் பாலச்சந்திரனுக்கும் எனது நன்றிகள் என்றென்றும். எல்லாவற்றுக்கும் மேலாக இப்புத்தகத்தை நீங்கள் வாசிப்பதற்கும் நன்றி தெரிவிப்பதோடு, உங்கள் மேலான கருத்துக்களையும் ஆவலுடன் எதிர்பார்த்தவாறே நன்றி கூறுகின்றேன்.

**இதயராசன்,**
41/1 ஸ்ரீ சரணங்கர வீதி,
தெஹிவளை- இலங்கை
2010.03.01

**தொலைபேசி :0714419204, 0777908029**
**மின்னஞ்சல் : ithayarasan@gmail.com**



படிப்பகம்

www.padippakam.com

# இறக்கைகள்


| | | | |
|---|---|---|---|
| 01. | பத்துச்சதம் | - | 001 |
| 02. | ஜெயா | - | 006 |
| 03. | நம்பிக்கை | - | 012 |
| 04. | செய்வினை | - | 020 |
| 05. | முரண்பாடுகள் | - | 028 |
| 06. | கனகலிங்கம் | - | 036 |
| 07. | தபால் | - | 043 |
| 08. | தர்மபுரம் | - | 049 |
| 09. | மரங்கொத்தி | - | 056 |
| 10. | வெள்ளைச்சி | - | 064 |
| 11. | விஷகடி வைத்தியம் | - | 070 |
| 12. | தியாகம் | - | 081 |
| 13. | வைரவி ஆச்சி | - | 086 |
| 14. | மைதானம் | - | 094 |
| 15. | விதைப்பு | - | 104 |




படிப்பகம்

www.padippakam.com

# பத்துச்சதம்

பாலைமர நிழலில் உருட்டிவந்த சைக்கிளை நிறுத்திப் பூட்டிவிட்டு, நிமிர்ந்து பார்க்கிறேன். வழமையைவிட கியூ நீண்டு, மழைக்கு முன் கொடிவிட்டு நீளும் எறும்புக் கூட்டம் போல் கண்ணில் பட்டது.

சாதாரணமாக மேல்வலிதான் ஆரம்பத்தில் தெரிந்தது. பின்னேரம் குலைப்பனோடு காய்ச்சல் வந்து உலுப்பி எடுத்து விட்டது. வீட்டில் யாரும் இல்லை. மூன்று நாளாய் மாமாதான் மரமஞ்சள், கொத்தமல்லி எனக் குடிநீர் அவித்துத் தந்தார் குறைவதாக இல்லை. காலமை எழும்பும்போது வழமையைவிட உடம்பில் தெம்பு வந்தது போல் இருந்தது.

"ராசன் இனியும் குடிநீர் சரிவராது, சைக்கிளை எடுத்திட்டு, நவஜீவனம் ஆசுப்பத்திரியிலை மருந்து எடுத்திட்டுவா" என்று மாமா சொன்னார். கலவை மருந்துக்குப் போத்தல் ஒன்று தேடியெடுத்துக் கழுவி, ஓலை பாக்கில் வைத்துக் கவனம் சொல்லி வழியனுப்பி வைத்தார்.

குன்றும் குழியுமாய் நீர்நிரம்பிய றோட்டால் உருட்டியும் உழக்கியும் வந்துசேர எட்டு மணிக்குப் பிந்திவிட்டது. மார்கழிமாத மழைக்குளிரும் நுளம்புக்கடியும் வழமையைவிட இம்முறை அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும். அதுதான் எல்லாருக்கும் வருத்தம் போல சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. மெல்ல மெல்ல நடந்து கியூவின் வால்பகுதியில் ஒட்டிக் கொண்டேன்.

ஆமை வேகத்தில் கியூ நகர்ந்து கொண்டு இருந்தது. என்னைப்போல் சிறுவர்கள் சிலர் தனித்தும் பெரும்பாலானோர் யாரோ ஒரு பெரியவருடனும் வந்திருந்தனர். அம்மா ஊரிலை தங்கச்சிக்குச் சுகமில்லை என்று போனவர் இன்னமும் வரவில்லை. நானும் ஐயாவும்தான் வீட்டில். முந்தநாள் இருக்கும், யாரோ மூன்றுபேர் வந்து ஏதோ கதைத்தார்கள். காணிப்பிரச்சனையாம். உடனே ஐயா வெளிக்கிட்டுவிட்டார். அதன்பின் மாமாவுக்குச் சொல்லி அனுப்பி அவர்தான் என்னுடன். போன ஐயா வீட்டுக்குத் திரும்பவில்லை. டி.எல்.ஓவைத்தேடி யாழ்ப்பாணம் போனதாக மாமா சொன்னார்.

எனக்கு முன்னுக்கு நின்ற பெரியவருக்கு என்மேல் பரிதாபம் வந்ததோ என்னவோ? "தம்பி முன்னுக்கு வாரும் " என்று இடம் தந்தார். பெரியவர்தான் என்னுடன் பேச்சுக் கொடுத்தார். வேண்டா வெறுப்பாய் அவரது கேள்வி களுக்குப் பதில் சொன்னேன். "தம்பி உனது காய்ச்சல் சாதாரண காய்ச்சல் இல்லை, பின்னேரம் வாறதெண்டால் அதுவும் குலைப்பனோட, கட்டாயம் மலேரியாதான். வீட்டிலை சொல்லி வேப்பம் பட்டை அவிச்சுக் குடியும்" என்று கைவைத்தியத்தினை மிகுந்த பரிவோடும் பக்குவமாகவும் எடுத்துச்



படிப்பகம்

சொன்னார். நான் ஏனோதானோ என்று ஊம்.... கொட்டினேன்.

நம்பர் துண்டு பதியும் கவுண்டர் சிறிது தூரத்தில். கண்ணுக்கு அங்கு நடப்பன எல்லாம் தெளிவாகத் தெரிந்தன. எல்லோர் கையிலும் முத்திரை வைத்திருப்பது அப்போதுதான் எனக்குப்பட்டது.

நெஞ்சு திக்கென்றது, தலை சுற்றுவது போல் வந்தது. தலையைப் பிடித்துக் கொண்டு இருந்து விட்டேன். பெரியவர் பயந்து பதட்டத்துடன் "தம்பி! தம்பி! என்ன செய்யுது" என்று என்னைப் பிடித்துக்கொண்டார்.

சிறிது நேரத்தில் என்னைச் சுதாகரித்துக் கொண்டேன். காசு ஒரு சதமும் கொண்டுவரவில்லை. மருந்து எடுக்கப் பத்துச்சத முத்திரை ஒட்டவேண்டும் என்ற புதிய விதிமுறை எனக்குத் தெரியாது. போன மாதம் தங்கச்சிக்கு மருந்தெடுக்க அம்மாவோடு வந்தனான். அப்பிடி ஒருசத முத்திரையும் அம்மா ஒட்டியதாக ஞாபகம் இல்லை. முத்திரை பற்றிச் சொல்லாமல் விட்ட மாமா மீதே முதலில் கோபம் வந்தது.

எனக்குள்ள பிரச்சனை மருந்து எடுப்பதாயின் பத்துச்சதம் வேணும். அது எப்பிடிக் கிடைக்கும். ஒரு நப்பாசையில் சேட் பொக்கற், காற்சட்டைப் பொக்கற் எல்லாம் துளாவிப் பார்த்தாயிற்று.

இனி என்ன செய்வது? எனக்குத் தெரிந்தவர் யாராவது கியூவில் நிற்கிறார்களா? என்று தலையை முன்னும் பின்னும் திருப்பி நோட்டம் விட்டேன். யாரும் கண்ணில் படவில்லை. றோட்டால் போவோர் வருவோரையும் பார்த்தேன் யாரும் தெரிந்தவர்கள் இல்லை.

ஐயாவோடை கடை தெருவுக்கு எப்போதாவது வருவதுண்டு அப்போ தெல்லாம் ஐயா, வருவோர் போவோருடன் சுகம் கேட்பார். என்ன காணும் கனநாளாய்க் கண்ணில படேல்லை. சிலபேருடன் மிகுந்த உரிமையோட எங்கடையப்பா தலைமறைவாயிட்டியோ எண்டு நினைச்சன் என்பார். சிலபேரைக் கண்டால் மரியாதையுடன் சயிக்கிளை நிப்பாட்டிக் கீழே இறங்கி நின்று கதைப்பார். அதேபோல்தான் ஐயாவைக் காண்பவர்களும் தலைவர் எப்பிடிச் சுகம்? என்று விசாரிப்பார்கள். சிலர் அண்ணை எண்டும் சிலர் ஐயா எண்டும் விசாரிப்புப் படலம் நீண்டுகொண்டே போகும்.

எனக்கெண்டால் எரிச்சல் எரிச்சலாக வரும். வாங்கப்போன சேட் மீதோ, அல்லது எனக்கு மிகவும் பிடித்தமான பணியாரம் சூசியத்தின் மீதோ மனம் லயித்திருக்கும். ஐயா, அதை வாங்காமல் தேவையில்லாமல் போவோர் வருவோருடன் கதைத்து நேரத்தை மினக்கெடுத்துவதாகவே எனக்குப் பட்டது.

மனதில் நினைத்ததை ஐயாவிடம் சொல்ல நினைத்தாலும் அக்காளவையும் தங்கச்சியும் அண்டிக் கொடுத்து அடிவாங்கிய துவரம் கம்புதான் கண்ணுக்கு முன்பு நிழலாடும். அப்படியே அடங்கி விடுவேன். அம்மாவிடம்தான் எனது நடப்பு எல்லாம். ஒருக்கால் தலைமுடிவெட்ட ஐயாவுடன் சலூனுக்குப் போகும்படி ஏற்பாடு, அம்மாவிடம் துணிந்து சொல்லி விட்டேன் "ஆரோடை எண்டாலும் போவன், ஐயாவோட மாட்டன்" எண்டு.

"அப்ப நில்" எண்டு ஐயா போய்விட்டார்.

பிறர்மீது அக்கறைப்படாமல் அவர்களது சுகதுக்கம் விசாரிக்காமல் நான் எனது என்று நடந்து கொள்வது எவ்வளவு மோசமானது என்பதை இப்போதுதான் முதன் முறையாக உணர்ந்து கொள்கின்றேன். ஐயாவுடன் சைக்கிளில் வரும்போது அப்பாடா எத்தனைபேரை வழியில் தெருவில் காண்பேன். அவ்வளவு பேரும் ஐயாவுடன் ஏதோ ஒரு வகையில் நெருக்கமானவர்கள் அல்லது தொடர்பு பட்டவர்கள். வீட்டில் உள்ள பிரச்சனைகள் வேலைகளை விட மற்றவர்களின் பொது விடயத்திற்குத்தான் ஐயா முதலிடம் கொடுப்பார். அப்படித்தான் இப்போதும் ஐயா யாழ்ப் பாணம் சென்று விட்டார்.

ஐயாவோடு கதைப்பவர்களது முகத்தைப் பார்த்து ஒரு புன்சிரிப்பாவது பரிமாறி இருந்திருந்தால் அவர்களது முகங்களும் ஞாபகத்திற்கு வந்திருக்கும், அவர்களுக்கும் என்னைத் தெரிந்திருக்கும். நான் செய்தது என்ன முகத்தைக் கடுப்பாக்கி, தலையைத் தொங்கப் போட்டபடி அல்லவா இருந்தேன். இப்போதைய இக்கட்டான வேளையில் எத்தனைபேர் என்முன்னே ஆனால் யாரையும் தெரியவில்லை. ஏன், கொஞ்ச நேரத்திற்கு முன்பு என்மீது பரிவு காட்டிய பெரியவர் மீதுகூட நான் அக்கறை செலுத்தாமல் என்பாட்டில் அல்லவா நின்று கொண்டிருக்கிறேன். என்பற்றிய நினைப்புகள் எல்லாம் என்னையே எனக்கு வெறுப்பூட்டுவதாகவே இருந்தது.

"என்ன தம்பி கடுமையான யோசனை" என்று கேட்ட பெரியவர் கியூவின் நகர்வுக்கு ஏற்ப என்னையும் பிடித்துக்கொண்டு நகர்ந்தார்.

மீண்டும் எனது யோசனை எல்லாம் பத்துச்சதம் மீதுதான். இப்ப என்ன செய்வது. பேசாமல் வீட்ட போறதா? மீண்டும் தலை சுற்றுவது போல் இருந்தது.

செல்லையா கடைக்குப் போனால் பத்துச்சதம் பெரிய பிரச்சனை இல்லை. முதலாளி நல்லவர்... என்மீதும் நல்ல அபிப்பிராயம் உள்ளவர். சில வேளைகளில் கடனுக்கும் சாமான் வாங்கியதுண்டு, புத்தகத்தில் எழுதி

வைத்து ஐயாவிடம் மாதம்முடிய வாங்கிக் கொள்வார். இது நல்ல யோசனையாகப்பட்டது. ஆனால் எப்படியும் ஒரு கட்டை தூரம் வரும். போய்வந்தால் மீண்டும் கியூவின் வாலில் இருந்து மீண்டும் கால்கடுக்க நிற்கவேண்டும். அதோட நேரமும் பத்து மணியைத் தாண்டிவிட்டது. பிறகு சாப்பாட்டு நேரம், இரண்டு மணிக்குப் பிறகுதான் மருந்தெடுக்கமுடியும். மேல் குளிர்வது போல் இருக்கிறது. பின்னேரம் மீண்டும் காய்ச்சல் வந்திடும். அதுக்குமுன் வீட்டை போகவேண்டும்.

யாரிட்டையாவது உள்ளதைச் சொல்லி பத்துச்சதம் கேட்டுப் பார்த்தால் என்ன? இல்லாமையும் சூழ்நிலையும் அப்படிச் சிந்திக்க வைத்தது. என்மீது எனக்கே வெறுப்பாக வந்தது. சீ.... என்ன நினைப்பு.

பஸ்ஸிலும் சந்தையிலும் ஐந்துசதத்துக்கும் பத்துச்சதத்துக்கும் பிச்சை எடுக்கும் சிறுவர்கள்தான் முதலில் என் கண்முன்னே வந்தனர். சிலபேர்மீது பரிதாபப்பட்டு நான் சில்லறையைப் போட்டதுண்டு, ஆனால் பெரும் பாலானோர் மீது வெறுப்பே கொண்டிருக்கின்றேன். ஏன் உழைத்துப் பிழைக்க வேண்டியதுதானே. என்ன இது பிச்சை எடுப்பது. இதுவும் ஒரு வாழ்க்கையா, அப்படி ஒரு நிலைவந்தால் செத்துத்தொலைக்க வேண்டியதுதானே. இப்படி எல்லாம் நினைத்த நான் பத்துச்சதம் பிச்சை கேட்பதா? நிலமையைச் சொல்லி கடனாகக் கேட்பது பிச்சை இல்லைத்தானே! எனக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டேன். ஆனாலும் மனம் எதுக்கும் இசைவதாக இல்லை.

நம்பர்த்துண்டு எடுக்கும் கவுண்டர் அண்மித்தபடி. எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

"கிணற்றுத் தவளையாய் இருக்கக் கூடாது. அயலிலும் நாட்டிலும் உலகத்திலும் நடப்பவைகளை அறிந்து இருக்க வேண்டும்." என்று நாலாம் வகுப்பு ரீச்சர் கடல் தவளையும் கிணற்றுத் தவளையும் பாடம் முடியும் போது கூறியது இப்போதுதான் உறைக்கின்றது.

றேடியோவில் செய்தி கேட்கும் பழக்கம் அல்லது ஐயா வாங்கிவாசிக்கும் பேப்பரையாவது வாசிக்கும் பழக்கம் இருந்திருந்தால் தானே நாட்டில் நடப்பது தெரியும். ஏன் இப்போது புதிதாக ஆசுபத்திரியில் பத்துச்சத முத்திரை ஒட்டவேண்டும் என்ற விடயமாவது தெரிந்திருக்கும்.

நம்பர் துண்டு வாங்கும் கவுண்டரை நெருங்கிவிட்டேன். என்னால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை.

"பெரியவர் நீங்கள் நம்பர் துண்டை வாங்குங்கோ" நான் வழிவிட்டு ஓரமாக ஒதுங்குகின்றேன்.

www.padippakam.com

அவர் என்னை வியப்புடன் பார்க்கிறார். "என்ன தம்பி மலேரியாக் காய்ச்சல் இவ்வளவு நேரமும் நிண்டிட்டு, மருந்தெடுக்காமல் ஏன்? ஊசி போடுவாங்கள் எண்டு பயமோ? " என்னைப் பார்க்கிறார்.

எனக்கு நாக்குழறுகிறது. சொல்ல நினைக்கிறேன் வார்த்தைகள் வெளிவரவில்லை. கண்ணில் இருந்து நீர் வழிகிறது. அதைத்தவிர எனக்கு வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

மீண்டும் பெரியவர் என்னைப் பிடித்து உலுக்கி "தம்பி என்னெண்டாலும் சொல்லடா? எனக்கும் உன்னைப்போல் ஒரு பேரன் இருக்கிறான். அவனைப்போல உன்னையும் கேட்கிறன்."

பெரியவர் மீது பாசமும் நம்பிக்கையும் அபரிமிதமாக வந்துவிட்டதோ! அல்லது வேறு வழியில்லாமலோ? தடுமாறித் தடுமாறி நிலமையைச் சொல்கிறேன்.

பெருமிதத்தோடு என் தோளைத்தட்டி "நீ என் பேராண்டிதான்ரா" என்று புன்முறுவலித்தபடி கூறுகின்றார்.

பத்துச்சதத்தினை எடுத்து என்னிடம் நீட்டுகிறார். நான் வாங்குவதற்குத் தயங்குகின்றேன். அவர் மீண்டும் மீண்டும் வற்புறுத்துகின்றார்.

"ஐயா! நீங்கள் இதைக் கடனாய் தந்தால் வாங்குகிறேன்" வார்த்தை தடுமாறக் கூறுகின்றேன். அவர் மீண்டும் புன்முறுவல் தவழ மிக்க உறுதியோடு கூறுகிறார்.

"மோனை உனக்கு இது கடன்தான். உனக்கு இயலுமான பொழுதெல்லாம் இக்கட்டான சந்தர்ப்பத்தில் உதவுறதுக்குப் பின் நிற்காதே. பத்துச்சதமாகவும் இருக்கலாம் பத்துரூபாவாகவும் இருக்கலாம். அப்ப எல்லாம் இந்தப் பத்துச்சதத்தை நினைத்துக்கொள்"

அந்தப் பெரியவரை மானசீகமாக ஆரத்தழுவிக் கொள்கின்றேன். அந்த வார்த்தைகள் இன்றும் என் மனச்சிறையில் ரீங்கரித்தபடி.

***தாயகம் - 2009. (ஜூலை - செப்ரெம்பர்)***
***( கதைக்கான களம் - 1971 )***



படிப்பகம்

www.padippakam.com

# ஜெயா

"டேய் வெளியால விடுங்கோடா. பாதுகாப்புக் குடுத்து வைச்சிருக்கிறியளோ?. கொழும்பிலை தமிழரைக் கொல்லுறாங்கள் இங்கை சிங்களவனுக்கு அடைக்கலமோ! தமிழ்த் துரோகியள்.................."

பொழுது மைம்மலுக்கை போகேக்கை சுமார் ஆறு முப்பதைத் தாண்டியிருக்க வேண்டும். முப்பது நாப்பது பேர் எமது வீட்டைச் சுற்றி வளைத்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

யாருடைய முகமும் இருட்டுக்கை தெளிவாகத் தெரியவில்லை. ஒன்று இரண்டு பேர் அடிக்கடி பார்த்த முகங்கள் மங்கலாகத் தெரிந்தன. அவர்கள் ஆளோடு ஆளாக மறைந்து நின்றனர்.

கூச்சலைக் கேட்டு தங்கச்சியவை இருவரும் அம்மாவின் சேலையைப் பிடித்தபடி மலங்க மலங்க முழித்துக் கொண்டிருந்தனர். அக்காளவை திகைத்து நின்றனர்.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஒரு வாட்டசாட்டமான பேர்வழி முன்னுக்கு வந்தான். அவனை ஐயாவுக்கு நன்கு தெரிந்திருக்க வேணும். "அண்ணை உங்கட வீடா, எனக்குத் தெரியாது. எல்லாரும் கூடி இந்தவீட்டிலை சிங்களவனை வைச்சிருக்கிறாங்கள் எண்டு குமுறிக்கொண்டு நிண்டாங்கள். ஆக்களை அடக்கிறது முடியாத வேலை. அதுதான் என்ன ஏது எண்டு பாப்பம் எண்டு வந்தனான்." முன்னுக்கு வந்த ஆசாமி ஐயாவிடம் ஓரளவு மரியாதையுடனும் மிரட்டுகின்ற தொனியிலும் கதைத்தான்.

"தம்பி எங்கட வீட்டிலை மட்டுமல்ல வேற ஆக்களின்ர வீட்டிலும் வேலைக்கு நிண்டவைதான். பிரச்சனை எண்டு தெரிஞ்ச உடன நாங்கள் அனுப்பிப் போட்டம். வேணுமெண்டால் வீட்டுக்கை போய்ப் பாரும்." ஐயா மிகவும் உறுதியோடு கூறினார்.

வந்த ஆசாமிக்கு ஐயாவின் வார்த்தையில் நம்பிக்கை வந்திருக்க வேணும். ஒப்புக்காக வாசற்படி மட்டும் வந்து எட்டிப்பார்த்து விட்டு. "வீட்டிலை அவன் இல்லையடா வாங்கோ போவம்." என்று வந்தவர்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றான்.

கூட்டத்திருந்து ஒரு கீச்சுக்குரல் ஓங்கி ஒலித்தது. "பொய் சொல்லி சிங்களவனை வைச்சிருந்தால் வீட்டோடை கொழுத்துவம்." வன்முறை ஒன்றுக்கு ஆர்வத்தோடு வந்த கூட்டம், அது ஈடேறாமற் போன ஏமாற்றத்தின் பிரதிபலிப்பாய் கீச்சுக்குரல் வெளிப்பட்டது. பொறுத்த நேரத்தில்



படிப்பகம்

www.padippakam.com

குறிதவறவிட்ட ஒற்றைப் பன்றிக்காக காலை ஓங்கி உதைக்கும் வேட்டைக் காரன் செயலை ஒத்ததாகவே எனக்குப் பட்டது.

எங்களின் வீடு, வயல்வெளியின் நடுவே திடலாகக் காணப்பட்ட பிட்டித்தரையில், கழிவாற்றங் கரையை ஒட்டிக் கட்டப்பட்டிருந்தது. இரண்டறையும், டானாப்பட விறாந்தையும், ஒரு போட்டிக்கோவுமாக இருந்தது. வீட்டு முற்றத்திற்குக் கிழக்கால தரைக்குச் சீமெந்து போட்டு, கிடுகு ஓலையால் வேய்ந்த குசினியும் இருந்தது. வீட்டுக்குத் தென்கிழக்குத் திசையில் உள்ள சிறிய மேட்டுநிலத் துண்டில் மிளகாய்க்கன்றுப் பாத்திக்குத் தண்ணிமாறிக் கொண்டிருந்த போது, நடந்த களோபரத்திலை எனக்குக் கையும் ஓடேல்ல காலும் ஓடேல்ல சிலையாக நின்று விட்டேன்.

இப்ப வீடுகட்டியிருக்கிற புற்றுப்பிட்டியை இருட்டினபிறகும் நிலவு வெளிசத்திலை, ஐயா வெட்டினதும். அதில இருந்து பாம்பு ஒன்று படமெடுத்துக்கொண்டு வெளியிலை வந்ததும், நான் பயந்துகொண்டு ஓடியதும், ஐயா மண்வெட்டிப் புடங்கால அடித்து நெருப்பில போட்டுக் கொழுத்தியதும் இன்னும் மறக்க முடியாது. அப்பதான் பெரியண்ணாவுடன், நெருப்பு வெளிச்சத்தில் பளிச்சென்று பற்கள் தெரியும் சிரிப்புடன், கட்டையான சுருட்டை முடியுடைய கறுத்த உருவமாக அறிமுகமானார்.

ஐயாவுக்கு முன்பே தெரிந்திருக்க வேண்டும். "ஆர் ஜெயாவோ வாடாப்பா வா. இஞ்ச வேலை முடியேல்ல செய்த வேலையை அரையும் குறையுமாய் விட்டிட்டு ஊரில திருவிழா எண்டு போயிட்டாங்கள்" என்று குறைபட்டுக் கொண்டார். அன்று தொடக்கம் ஜெயா எங்களது வீட்டில் ஓர் உறுப்பினராகி விட்டார்.

அடுத்த இரண்டுமாதத்தில் தரை எல்லாம் சமன் செய்யப்பட்டு வீட்டுக்கான அத்திபாரமும் வெட்டப் பட்டிருந்தது. குசினியிலை அம்மாவுக்கு உதவுறதிலை இருந்து வயல் வேலை, தோட்ட வேலை, இடையிலை மாடுகளை அவிழ்த்துக்கட்டுதல், கடைக்குப் போதல் என்று எல்லா வேலைகளையும் இழுத்துப்போட்டுச் செய்வதில் ஜெயாவுக்கு நிகர் ஜெயாதான்.

ஜெயா பேசும் போது மிகவும் நிதானமாகவும் ஆறுதலாகவும் அழுத்தந் திருத்தமாகத் தூயதமிழில் பேசுவார். மிகவும் மென்மையாகவும் தேவைக்கு ஏற்ற அளவு தொனியும் கொண்டிருக்கும்.

ஒரு முறை ஜெயாவுடன் எனக்கு ஏதோ ஒரு விடயமாக சண்டை வந்துவிட்டது. மரியாதைக் குறைவாகத் திட்டிவிட்டதாக ஞாபகம். அம்மா என்னை அழைத்து அதற்காகக் கடிந்துகொண்டார்.



படிப்பகம்

"நீ சிறியவன், அவர் பெரியவர், அப்படி நடந்தது தவறு " என்றும் பாவம் அவர் தூரத்தில் இருந்து அப்பா அம்மாவை விட்டு இங்கைவந்து கஷ்டப்படுகிறார்." என்று பலவாறு எடுத்துக் கூறியதோடு அவர் சிங்கள மொழி பேசுபவர் என்ற விடயத்தையும் அப்போதுதான் சொன்னார்.

எனக்கு ஒரே வியப்பு. ஜெயா சிங்களவரா! சொல்ல முடியாதே! பேக்கறியில் உள்ள குணசேனவும் காடுவெட்ட வந்த நந்தசேனாவும் தமிழ் சரியாகக் கதைத்தாலும் அவர்களின் உச்சரிப்பு புறம்பாகத் தெரியுமே! ஜெயா அசல் யாழ்ப்பாணத் தமிழ் உச்சரிப்பல்லவா? அம்மா சொல்லிற வரைக்கும் எனக்குக் கண்டுபிடிக்க முடியவில்லையே! ஒரே ஆச்சரியமாக இருந்தது. வெட்கத்தால் கூனிக்குறுகி ஜெயாவிடம் சென்றேன். அவர் அதே புன்னகை, எவ்வித கோபமோ குரோதமோ இல்லாமல் என்னை அணைத்துக் கொண்டார். எனக்குச் சொல்வதற்கு வார்த்தைகள் வரவில்லை. ஜெயா அம்மாவிடம் கோபித்துக் கொண்டார். சின்னவன்தானே, அவனுக்கு என்ன தெரியும் என்று முதுகில் தட்டிக் கொடுத்தார். அன்றிலிருந்து அவரின் சீடராகி விட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

நாங்கள் எல்லோரும் ஜெயா என்று அழைப்பது அவரது பெயரின் முற்பகுதி மட்டுமே. ஜெயரட்ணா தான் உண்மையான பெயர். நாவலப்பிட்டியில் உள்ள சோளங்கந்த தோட்டம் சொந்த ஊர். சின்ன வயசிலேயே கிளிநொச்சிப்பக்கம் யாருடனோ வந்து பல இடங்களில் வேலை செய்து, கடைசியாக ஒரு முதலாளியிடம் இரண்டு வருடமாக வேலை பார்த்தபின், ஊருக்குப் போகப் பணம் கேட்ட பொழுது, சாப்பாட்டிற்கும் உடுதுணிக்கும் சரியாய்ப் போச்சுதென்று கணக்குக் காட்டி விட்டாராம்.

அப்பொழுதுதான் என்ன செய்வதென்று தெரியாமல் கிளிநொச்சி நகரத்தில் அலைந்து கொண்டிருந்த போது, டிராக்டர் திருத்த வேலை செய்யப் போன அண்ணரிடம் எப்படியோ பழக்கமாகி, உடையார்கட்டுத் தோட்டத்தில் ஒருமாதம் வேலை செய்தபின், அண்ணாவின் உபயத்தில் ஊருக்குப் போய் விசுவாசத்துடன் மீண்டும் வந்து எங்களுடன் ஒருவராகி விட்டார் ஜெயா என்னும் ஜெயரட்ணா.

ஜெயாவுக்கு அம்மாவும் ஒரு தங்கையும் இருப்பதாகக் கூறுவார். தங்கையிடமிருந்து, ஆங்கிலத்தில் முகவரி எழுதப்பட்ட கடிதம் மாதம் ஒரு முறையாவது வரும். ஆசையுடன் அம்மாவிடம் காட்டிக் கதைத்துக் கொள்வார். மற்றவர்களது கடிதத்தைப் பார்க்கக் கூடாது என்று ஐயா சொன்னது ஞாபகம் இருந்தபோதிலும் சிங்கள எழுத்து எப்படியிருக்கும் என்று அறியும் ஆவலில் எட்டிப் பார்ப்பதுண்டு. முத்து முத்தாக உருட்டி உருட்டி அழகாக எழுதப்பட்டிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்ற களியாட்ட விழாவின்போது பொலிசாருடன் ஏற்பட்ட கைகலப்பினைத் தொடர்ந்து, அது தென்னிலங்கையில் இனக்கலவரமாக வெடித்ததை றேடியோ வாயிலாகக் கேட்டபொழுது ஜெயாவின் முகத்தினைப் பார்க்க ஏலாது. புன்முறுவல் தவழும் முகமா அது, பேயறைந்தவர் போல் இருந்தார். அம்மா ஆறுதல் சொன்னார். "உனக்கு ஒண்டும் நடக்காது, அப்பிடி நடக்க நாங்கள் விட்டிடுவமோ? நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை" என்று தைரியம் ஊட்டினார்.

நேற்று இரவு பதட்டத்துடன் ஓடிவந்த சித்தப்பாதான் பிரசச்சினையின் விஸ்வரூபத்தினை எடுத்துச் சொன்னார். கொழும்பிலை தமிழர்களின் வீடுகளும் கடைகளும் எரிக்கப்பட்டாச்செண்டும், அதில பல தமிழர் கொல்லப்பட்டதாகவும், அனேகமாக எல்லாத் தமிழரும் பொலிஸ் பாதுகாப்புடன் அகதி முகாமில் இருக்கினம், கப்பலில காங்கேசன்துறைக்கு மிக விரைவில அனுப்பிறதா அரசாங்கம் சொல்லியிருக்கெண்டும் சொன்னார்.

வெளிக்கண்டல் சந்தியில இருந்த சிங்கள முதலாளிக்குச் சொந்தமான ஓட்டுத் தொழிற்சாலையைப் பின்னேரம் எரிச்சாச்சு காவலுக்கு இருந்த சிங்களக் காவலாளியையும் அடிச்சுக் குறையுயிராப் போட்டிருக்கெண்டும், நடக்க இருக்கும் ஆபத்தினையும் எடுத்துச் சொன்னார்.

நிலைமையினைப் புரிந்துகொண்ட ஐயா, இனியும் ஜெயாவை எங்களுடன் வைத்திருப்பது புத்திசாலித்தனம் அல்ல, அது எல்லோருக்கும் ஆபத்தாக முடியும், இனவெறிகொண்ட கூட்டம் அங்க மட்டுமல்ல இங்கேயும் தனது கோரப்பற்களைக் காட்டத்தொடங்கி விட்டது என்பதைக்கூறி, இரவோடு இரவாக குறுக்குப் பாதையால் - அதுவும் காட்டு வழியால் ஜெயாவை உடையார்கட்டிற்கு கூட்டிக்கொண்டு போகும்படி பெரியண்ணாவிடம் கூறினார்.

இரவு பத்துமணியளவில் டிராக்டரில் பெரியண்ணாவுடன் ஜெயாவை வழியனுப்பி வைத்த காட்சி இன்னமும் மனக்கண்ணில் நிழலாடுகின்றது. எமக்கிடையேயான பாசப்பிணைப்பிற்கு வார்த்தைகள் போதுமானதல்ல. முகபாவமும் கண்ணீருமே துணை புரிந்தன.

தேராவிற் குளத்திற்கும் உடையார்கட்டுக் குளத்திற்கும் இடைப்பட்ட மேட்டு நிலத்தில் எங்களது தோட்டம் அமைந்துள்ளது. அது உண்மையில் காடுசூழ்ந்த பகுதி. பத்துப் பதினைந்து தோட்டத்துடன் சேர்ந்த வாடிகளைத்தவிர வேறு ஒன்றும் அயல் அட்டையில் இல்லை என்றே சொல்லலாம். எம்மைப் பொறுத்தவரையில் அவ்விடம் மிகவும் பாதுகாப்பான

இடம். அதுதான் ஐயா அவ்விடத்தினைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டுமென நினைக்கின்றேன்.

சிங்களம் மட்டும் சட்டம், ஸ்ரீக் குழப்பம் வந்தபோதெல்லாம் தென்னிலங்கையில் தமிழர் கொல்லப்பட்டதையும், தாக்கப்பட்டதையும் கதைகள் மூலம் வாசித்திருக்கிறேன். அப்பொழுது என்னிடம் ஒரு கேள்வி எழுவதுண்டு, ஏன் அங்குள்ள சிங்கள மக்கள் எல்லோரும் கெட்டவர்களா? நல்லவர்கள் இல்லையா? அப்படி இருந்தால் ஏன் கெட்ட இனத்துவேஷிகளை அடித்து விரட்ட வேண்டியதுதானே, ஏன்? மௌனிகளாக கையாலாகாதவர்களாக ஒளிச்சு ஒளிச்சுத் தமது நண்பர்களை அகதிமுகாமில் ஒப்படைக்க வேண்டும் என்று. எனக்குச் சரியான விடை கிடைக்கவில்லை.

எமது வீட்டில் நடந்த நிகழ்வு எல்லாவற்றுக்கும் பதிலைச் சொல்லி நின்றது. இனத்துவேஷம் என்பது தலைவிரித்தாடும் போது சாமானியர்கள் அதில் கையாலாகாதவர்களாக நிற்கவேண்டியதுதான். ஒரு கொலைகாரக் கூட்டம் வெறிநாய்கள் போல் குலைத்துக்கொண்டு வரும்போது, அதை எதிர்பார்க்காத அப்பாவிகள் எதிர்த்தால், தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கும் குழுவன் கூட்டத்தில் அகப்பட்ட ஆட்டுமந்தைகளாக நசுங்கிப்போக வேண்டியதுதான். புத்திசாலித்தனமாக ஜெயாவை அனுப்பாமல் இருந்திருந்தால், ஜெயாவின் முடிவு! நினைக்கவே பயங்கரமாக இருந்தது.

மழைக்காலத்தில் வயல்வெளிகளில் எல்லாம் வெள்ளம் மூடிக்கிடக்கும். வெள்ளம் வடிய மூன்று நாட்களாவது எடுக்கும். மழைவிட்ட நேரத்தில் வேட்டைக்காரர்கள் நாய்களுடன் முயல் வேட்டைக்குப் புறப்பட்டு விடுவார்கள்.

வெள்ளம் ஏறாத பிட்டிகளில் தஞ்சம் அடைந்திருக்கும் முயல்கள் மழை விட்டு வெய்யில் எறிக்கும்போது, துளிர்விட்ட புற்களைக் கடிப்பதற்கு ஒளிந்திருந்த இடங்களிலிருந்து வெளிவந்திருக்கும். அப்போது வேட்டை நாய்கள் விரட்டும். ஓடுவதற்கு தரை இருக்காது. எல்லா இடங்களிலும் வெள்ளம் மூடியிருக்கும். அது முயல்கள் தவிக்கும் தருணம். அப்போதுதான் தவிச்ச முயல் அடிப்பார்கள் வேட்டைக்காரர்கள்.

ஜெயா போன்று தனித்துப் போக்கிடம் இன்றி இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை தாக்குவோருக்கும் தவிச்ச முயல் அடிக்கும் வேட்டைக்காரர்களுக்கும் ஒரு வித்தியாசமும் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை. இப்போது ஜெயா எமது பாதுகாப்புத்தேடி இருக்கும் தவிச்சமுயல். எமது உயிரைக் கொடுத்தும் அவரைக் காப்பது எமது கடன் என்பதில் எமது குடும்பம் மிக உறுதியாகவே இருக்கிறது. அதை நினைக்கும் போது, மற்றவர்கள் துரோகி காட்டிக் கொடுப்பவன் என்றெல்லாம் எப்படி

அழைத்தாலும் நான் எமது குடும்பத்தின் செயலுக்காக இன்றும் பெருமைப்படுகின்றேன்.

ஒரு மாதத்தின் பின் நிலைமை ஓரளவு வழமைக்கு வந்துவிட்டது. கொழும்பு யாழ்தேவி ஓடுவதாக ஐயா வந்து சொன்னார். ஜெயாவை என்ன செய்வது. ஜெயா ஊருக்குப் போகவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார்.

ஜெயாவுக்கு வரும் கடிதம் ஆங்கிலத்தில் முகவரி எழுதப்பட்டு ஐயாவின் பெயருக்கே அனுப்பப்படுவதால் யாரும் கடிதத்தின் மீது சந்தேகப்படவில்லை. அதனால் கடிதப் போக்குவரத்து தொடர்ந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் மாங்குளம் புகையிரத நிலையத்தில் வைத்து, ஜெயாவை அண்ணா வழியனுப்பினார். பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்ததாகவும் ஜெயாவின் அம்மாவும் தங்கையும் நன்றி தெரிவித்து, தோட்டத்தில் உள்ள தமிழ் தெரிந்தவர்கள் மூலம் எழுதப்பட்ட கடிதம் அனுப்பி இருந்தார்கள். அப்படி மூன்று நான்கு கடிதங்கள் வந்தன, பின்னர் கடிதங்கள் வருவதே இல்லை.

கால ஓட்டத்தில் நாட்டின் இன உறவுகள் தலைகீழாக மாறிவிட்டன. போராட்டம் உடமை இழப்பு, அநியாயச்சாவென அவலங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஜெயாவுக்கு நாங்கள் உதவியது போல எத்தனையோ பேர் தனித் தனித் தீவாக உதவியிருக்கலாம். இச்செயலால் இன உறவைப் பேணமுடியுமா? அநியாயத்தினை ஒழிக்க முடியுமா? அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. இப்போதுள்ள பிரச்சினை பூனைக்கு மணிகட்டுவது யார் என்பதுவேயாம்.

***( கதைக்கான களம் - 1977 )***

# நம்பிக்கை

அந்தக் குளத்தினில் தாமரை இலைகளும் பூக்களும் இடையிடையே அல்லித்தாமரைப் பூக்களும் நீலவர்ணமாய் எழில் காட்டுகின்றன. இலேசான காற்றின் அசைவினில் நீரலைகள் இலைகளில் இருக்கும் வாத்துக் குஞ்சுகளைத் தாலாட்டிக் கொண்டிருக்கின்றன. துள்ளி விளையாடும் பனைத்தொத்தி மீன்குஞ்சுகள் அவற்றினைத் தூக்கத்தால் எழுப்புகின்றன. சில்வண்டினங்களின் மென்மையான இன்னிசைக்கு, இடையிடையே தவளைகள் மத்தளம் கொட்டுகின்றன. பூரண சந்திரன் தனது கள்ளமில்லா முகத்தினைக் காட்டிச் சிரிக்கின்றான். தனது தங்கைகளுடன் குளிகரையில் நீரைக் குடைந்து குடைந்து குளித்துக் கொண்டிருக்கின்றாள் பானுமதி.

மாங்குளம் துணுக்காய் வீதியில் மல்லாவிச் சந்தியால் வடக்குப்பக்கம் திரும்பி கிரவல்வீதியில் ஆறு கிலோமீற்றர் சென்றால் தென்படுவதுதான் பாண்டியன்குளம். அக்குளத்திற்குக் கீழ்கரையில் வயல்வெளிகளைத்தாண்டி உள்ள காடுகளுக்குள் நுழைந்து மூன்று கிலோமீற்றர்வரை நடந்தால் அழகிய ஒரு தாமரைக்குளம் தெரியும் அதுதான் சின்னப் பாண்டியன்குளம். அந்தக் குளத்தினைச் சுற்றிவர உள்ள பிரதேசமே சின்னப் பாண்டியன்குளம் எனும் சிறிய விவசாயக் கிராமம். சுற்றிவரக் காடுகள் சூழ்ந்த முன்னூறு ஏக்கருக்கு மேற்படாத நிலப்பரப்பு, அதில்தான் குடியிருப்புக்களும் வயலும் உள்ளன.

மாரிகாலத்தில் மழையை நம்பியே நெல்விதைப்பார்கள், கோடைகாலத்தில் குளத்து நீரை நம்பி தோட்டம் செய்வார்கள். வெங்காயம், மரக்கறிப்பயிர்கள், மிளகாய், பயறு, உழுந்து, குரக்கன், சாமை, மொட்டைக் கறுப்பன் எனப்பயிரிடுவார்கள். குளத்திற்கு எட்ட உள்ளவர்கள் கிணற்றின் மூலம் ஏற்று நீர்ப்பாசனம் செய்வார்கள். அந்தக்கிராமத்தில் இருபது குடும்பங்கள் வரையிலேயே வாழ்கின்றனர். எல்லோரும் ஏதோ ஒரு வகையில் உறவுமுறையினர். ஆனால் இரண்டு குலங்கள் திருமண பந்தத்தினால் இப்போது உறவினராகி விட்டனர். இன்னொரு சிறப்பு இக் கிராமத்திற்கு உண்டு, இக்கிராமத்தில் எந்தவிதமான நவீனவசதிகளும் இல்லை. பாரம்பரிய முறையிலேயே விவசாயம் செய்கிறார்கள். ஆனால் அவர்களது தேவைகளுக்குப் போதுமானதாகவே உள்ளது. விவசாயத்தினைவிட தமது தேவைகளுக்காக மீன்பிடித்தல், வேட்டையாடுதல், தேன் எடுத்தல் என்பன நடைபெறுகின்றன. எனவே தான் இக் கிராமத்தில் பாலும் தேனும் மீனும் இறைச்சியும் மலிந்துகிடக்கின்றன.

சின்னப்பாண்டியன் கிராமத்தின் சிறப்புக்கு முக்கிய காரணம் இங்குள்ள மக்கள் கடினமான உழைப்பாளிகள். உழைக்காது ஒருவரும் இருக்கவும் முடியாது, அப்படி இருக்கவும்மாட்டார்கள். காரணம் அவர்களது வாழ்க்கையே உழைத்தல்தான். அவர்களிடம் மேலதிகமாக இருப்பவற்றினை விற்பதற்குப் பாண்டியன்குளம், மல்லாவிச் சந்தைக்கே செல்லவேண்டும். பள்ளிக்கூடத்திற்கும் பாண்டியன் குளமே போக வேண்டும். குளத்துக்குப் பணிய, காட்டுக்கரையில் கிடுகினால் வேயப் பட்ட நாற்சார வீடுதான் கிராமத்துக்கே தலையாரி வீடு. அது வேறு யாருடையதும் அல்ல பரியாரியார் கணபதியருடையதுதான். விஷகடி யிலிருந்து அனைத்து நோய்களும் நீக்கும் சர்வ வல்லமை உள்ள கைராசிக்காரர் என்று பெயரெடுத்தவர். விஷேடமாக விஷகடிக்கு அந்த வட்டாரத்திலேயே அவருக்கு நிகர் அவரேதான். அவரது மூத்த மகள்தான் பானுமதி.

இருபதாம் நூற்றாண்டும் கடந்து இருபத்தோராம் நூற்றாண்டில் அடியெடுத்து, வாயு வேகத்தில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வளர்ந்து கொண்டிருக்கும் பொழுது, அதுவும் உலக மயமாதலில் எங்குமே நுகர்வுக் கலாசாரமாகிப் பொலித்தீன், பிளாஸ்ரிக் என சுற்றாடல் அசுத்தமாகி மூக்கைப் பிடிக்க நாற்றமடிக்கும் வேளையில் சுற்றிவரக் காடுகள் அரண்செய்து, காற்றினை வடிகட்ட மின்சாரம், இயந்திரங்கள் இல்லாமல் மாட்டு வண்டிலும் உழவு மாடுகளும் கொண்டு, இயற்கைப் பசளைகளைப் பாவித்து, ஊழைச்சதை வைக்காமல் கள்ளமில்லாமல் உழைத்து, தேவைக்கு மட்டுமே பொருட்களை வாங்கி அளவுக்கு அதிகமாக ஆசைப்படாமல் இயற்கை யோடு இயற்கையாக வாழுகின்ற இம்மக்களைப் பார்ப்போர் உண்மையில் பொறாமைப்படவே செய்வார்கள்.

மன்னன் ஆண்டானோ, அந்நியராண்டாரோ, இல்லைச் சுதந்திரம் அடைந்ததோ! என்பது பற்றி அவர்களுக்குத் தெரியாது. தெரிந்தவர்களுக்கும் அது பெரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதாக இல்லை. இனம், மொழிச் சுரண்டல் பற்றியும் அவர்களுக்குத் தெரியாது. இனத்தின் பேரால் மொழியின் பேரால், ஆட்சிமன்றம் போனவர்களோ அதிகாரிகளோ யாரும் இந்தக் கிராமம் இருப்பதே தெரியாமல் இருக்கின்றார்கள். ஆனால் யுத்தம் எனும் கருமேகம் சூழத்தொடங்கியதும் சின்னப் பாண்டியன்குளம் அசுத்தக் காற்றினைச் சுவாசிக்கத் தொடங்கிவிட்டது. மாட்டு வண்டிமட்டும் உருண்ட மண் வீதியில் 'பஜரோ' புழுதியைக் கிளப்பிக்கொண்டு கண்மண் தெரியாமல் பறக்கின்றது.

கிராமம் பற்றியோ மக்கள் பற்றியோ அக்கறைப் படாதவர்கள் தமது தேவைக்காக இப் பாமரமக்களையும் உரமாக்கிக் கொள்கின்றனர். கடந்த முப்பது வருடமாக உள்நாட்டு யுத்தம் தொடர்ந்து கொண்டிருந்தாலும் சின்னப் பாண்டியன்குளம் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை. நவீன உபகரணங்கள் மின்சாரம் என்பவற்றின் பாவனை ஒரு சில வீடுகளில் பாவனைக்கு வந்துவிட்டன. பரியாரியார் கணபதியார் வீட்டில் யாரும் கைவைக்கவில்லை. ஆனால் அவரால் தானும் தன்பாடும் என்று இருக்கமுடியாமையால் பல பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டே வாழ்கின்றார்.

பரியாரி கணபதியருக்கு ஆண்வாரிசு இல்லாத படியால் மூத்தமகள் பானுமதிக்கே தமது பரம்பரை வைத்தியத்தினைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். அவளும் மிகுந்த விருப்புடனும் திறமையுடனும் கற்றுக்கொள்கின்றாள். கணபதியாருக்கு அறுபதைத் தாண்டி விட்டதாலும் மகளுக்கும் வயது வந்தமையாலும் முறை மாப்பிளைக்கே திருமணம் முடித்து வீட்டோடு வைத்துக் கொண்டார். ஆனால் காலச்சக்கரம் யுத்தம் என்னும் முள்ச்சில்லாய்ச் சின்னப் பாண்டியன்குளத்தையும் நசிக்கத்தொடங்கி விட்டது. கோழிக்குஞ்சை இறாஞ்ச வட்டமிடும் பிராந்தாட்டம் உளவு விமானம் ஒன்று சுற்றிவந்ததை பரியாரியார் கணபதியாரும் அவதானிக்கத்தான் செய்தார். ஆனால் அதன் ஆபத்து அவருக்குப் புரியவில்லை. அன்று மாலை நேரம், மூன்று நான்கு கிபீர் விமானங்கள் வந்து, இரும்பு முட்டைகள் இட்டன. அதன் விளைவு, கிராமமே அழிந்தது.

சுத்தமான காற்றே வீசிய சின்னப் பாண்டியன்குளம் சின்னாபின்னமாகியது. ஆனால் அதிஷ்டவசமாக பரியாரியாரின் வீட்டுக்கு ஒன்றுமே நடக்கவில்லை. சதைப்பிண்டங்களாக இருந்த உடலங்களைச் சேகரித்து, பெரிய குழியில் மூடிவிட்டனர். காயப் பட்டவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ் வண்டிகள் மல்லாவி வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்றன.

இனிமேலும் அங்கிருக்க முடியாது, என்ற உண்மையினைப் புரிந்துகொண்ட சின்னப் பாண்டியன்குள மக்கள் முச்சை அறுந்த பட்டம்போல் தள்ளாடிப்போயினர். அவர்களுக்கு நம்பிக்கையும் ஆறுதலும் அளித்தவள் பானுமதிதான். சிறு சிறு காயங்களுக்கு மூலிகை மருந்துகளைக்கட்டி, குடிநீரும் அவித்துக் கொடுத்து, எல்லாவற்றுக்கும் மேலாக மீண்டும் வாழ்வேன் என்ற நம்பிக்கை விதைகளை விதைத்தாள் பானுமதியும் அவளது சகோதரிகளும். வயதான போதிலும் கணபதியார்

உற்சாகத்தோடு இருந்து, தனது மருத்துவ ஆலோசனைகளை மகளுக்கு வழங்கிக்கொண்டே இருந்தார். ஊர்கூடி எடுத்தமுடிவின்படி வண்டிகட்டித் தமது சாமான் சட்டுக்களை ஏற்றிக்கொண்டு அக்கராயன் குளத்தினை நோக்கி இடம் பெயர்ந்தனர்.

அக்கராயன் குளம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பத்தில் தங்கிய மக்கள் படிப்படியாக சிறுகுடிசைகள் போட்டு, அப் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டனர். அரச அதிபரும் சிறிதளவு உதவிகளைச் செய்துவந்தார். ஆனால் யுத்தமுழக்கம் அப்பகுதியினையும் நெருங்கவே செய்தது. பானுமதியால் முன்புபோல் ஓடியாடி வேலைசெய்ய முடியவில்லை. அவள் ஆறுமாதச் சிசுவை வயிற்றிலே சுமந்து கொண்டிருக்கின்றாள்.

அக்கராயன் குளத்திற்கும் அதிர்வேட்டுக்கள் கேட்கத் தொடங்கியபோது, அங்கிருந்து வன்னேரிக்குளம், கரியால நாகபடுவான், பூநகரி என இடம்பெயர்ந்து கொண்டனர். பானுமதிக்கு அவள் அன்புடன் வளர்த்த செங்காரி வெள்ளையனின் ஒற்றைத்திருக்கல் வண்டி உதவியாக இருந்தது. பூநகரியிலும் வெடிச்சத்தம் கேட்கத் தொடங்கியபோது, பரந்தன், விஸ்வமடு, புதுக்குடியிருப்பு, தேவிபுரம் என்று இடம்பெயர்வே வாழ்க்கையாகிவிட்டது. ஒருவாரம்கூட ஓரிடத்தில் தங்கமுடியாது. தங்குமிடத்திலும் பங்கரில் ஒரு மூலையில் மூச்சும் விடமுடியாமல் விடியவிடியக் குந்தியிருக்க வேண்டியதுதான். அதுவும் ஆறுமாதச் சிசுவை வயிற்றில் சுமந்துகொண்டு, சத்து இல்லை, பசிக்கே உண்ணமுடியாமல் எப்படி வாழமுடியும். பாலும் தேனும் ஓடிய ஊரில் வாழ்ந்தவர்கள் பாண்துண்டும் இல்லாமல், புழுத்துச் சக்குப்பிடித்த வெள்ளை அரிசியைத் தண்ணியில் கழுவி வேகவைத்து அதன் கஞ்சியை அமுதமெனப் பருகினர். சிலர் அதுவும் கிடைக்காமல் காட்டில் உள்ள காய்களைப் பறித்துத் தின்று, சருகு ஊறிய சாயநிறமான அழுக்குத் தண்ணீரைக் குடித்தனர். இப்படியான உணவுமுறையால் பலபேர் தொற்றுநோய்க்கும் உள்ளாகினர். யுத்தத்தின் தாக்கம் உள்ளும் புறமும் இருந்து மக்களைப் பல ரூபங்களில் வதைத்துக்கொண்டே இருந்தது. ஆனால் அவர்கள் நம்பிக்கையுடன் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எதனையும் தாங்கும் வலிமை பெற்று விட்டனர். நம்பிக்கையோடு சளைக்காமல் நகர்ந்து கொண்டே இருந்தனர். பானுமதியும் அவள் குடும்பமும் என்ன அதற்கு விதிவிலக்கா.

தேவிபுரத்திலும் இருக்கமுடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது.

www.padippakam.com

பானுமதியின் பயணத்துச் செங்காரி வெள்ளையனும் ஒற்றைத் திருக்கலும் இப்போது இல்லை. உடையார்யார்கட்டில் தங்கியிருந்த போது ஷெல்லடியில் அதுவும் இறந்துவிட்டது. தனது தாயை இழந்தபோது கூட கதறியழாத பானுமதி அதன் மரணத்திற்காக ஓ.. வென்று கதறி அழுது புரண்டாள். அங்கே குழுமியிருந்த, யாழ்ப் பாணத்திலிருந்து இடம்பெயர்ந்தோர் அவளை விநோதமாகப் பார்த்தனர். விவசாயிகளின் வாழ்முறையும் வளர்ப்பு மிருகங்கள் மீது அவர்களின் உண்மையான நேசத்தினையும் இயந்திர வாழ்க்கை வாழ்பவர்களுக்கு எப்படிப் புரியும்? அவர்கள் பார்வையில் பானுமதி விநோதப் பிறவியாக இருப்பதில் வியப்பில்லைத்தானே.

பானுமதியும் குடும்பத்தவரையும் விட அனேகமாக எல்லோரும் இடம்பெயர்ந்து விட்டனர். மேற்கொண்டும் தாங்கமுடியாது எறிகணை வீச்சுக்கள் இலக்கின்றி நடந்து கொண்டிருந்தன. இதன் அர்த்தம் மக்களுக்குப் புரியும் மிகவிரைவாக இடத்தினைக் காலிபண்ணுங்கள் என்பதே அதன் அர்த்தமாகும். அதனைப் புரிந்த மக்கள் நகர்ந்து விட்டனர். பானுமதி முதல்நாளில் இருந்து பலவீனப்பட்டு விட்டாள். ஒற்றைத்திருக்கலும் இல்லாமல் வாயும்வயிறுமாக நடப்பது என்ன இலேசுப்பட்ட காரியமா?

வானம் இருண்டு மின்னல் மின்னியது, சூறைக்காற்று தென்னை மரங்களை சிப்பிலியாட்டிது. காற்றின் அகோரத்தில் பெரியமரங்கள் முறிந்து விழுந்தன. மழை இலேசாகத் தூறிக்கொண்டிருந்தது. இப்போது புயல் ஓய்ந்துவிட்டது. பானுமதியைத்தவிர அனைவரும் வெளியே வந்துவிட்டனர். இனியும் தாமதிக்க முடியாதென, அடுத்த கட்ட நகர்வுக்காக எல்லோரும் தயார்நிலையில் எங்கிருந்தோ விண்கூவிக்கொண்டுவந்த ஷெல் ஒன்று அந்த மணல்வெளியில் வெடித்துச் சிதறியது. எல்லோரும் மணலில் விழுந்துபுரண்டனர். அதனைத் தொடர்ந்து கிபீர் ஒன்று மேலே வட்டமிட்டது. சிறிது நேரத்தில் அவ்விடத்தில் ஒரு தென்னை மரங்களும் இல்லை. அதனை அடுத்து துப்பாக்கி வேட்டுக்கள் சடசடத்தன. பங்கருக்குள் இருந்த பானுமதிக்கு நிலைமை விளங்கியது ஆனாலும் என்ன? அடுத்துவந்த எறிகணை சரியாக பங்கருக்குமேல் விழுந்து வெடித்தது. பானுமதி தன்நிலை கெட்டாள்.

தென்னஞ் சோலையை நெருங்கிய அரசபடையினர் ஒவ்வொரு அங்குலமாக சோதனை செய்துகொண்டே முன்னேறினர். அவர்களில் ஒரு இளைஞன் கண்களில் சேதமான பங்கர் பட்டுவிட்டது. ஒரு பங்கரைப் பார்த்தபோதே அது மக்கள் பதுங்குவதற்ககாக அமைக்கப்



படிப்பகம்

பட்டதா? அல்லது தாக்குதலுக்குப் பயன்பட்டதா என்பதை கண்டுகொள்ள முடியும். தூரத்தில்வைத்தே மக்களின் உடலங்கள் சிதறிக்கிடப்பதை வைத்து, அந்தச் சிப்பாய் இளைஞன் நிலைமையினை அனுமானித்துவிட்டான். அவனுக்கும் இதயம் இருக்கத்தானே செய்கிறது. ஆனால் யுத்தம் என்று வந்துவிட்டால் சுடவேண்டும். சுடாவிட்டால் நிச்சயம் அவன் சுடப்படுவான். அதனால் அவன் சுட்டுக் கொண்டே வந்தான்.

எறிகணை பங்கருக்குப் பக்கத்தில் விழுந்ததால் பங்கரின்மேல் உள்ள மரங்களும் மண்மூடைகளும் தூக்கி வீசப்பட்டிருந்தன. கிடங்கில் முனகிக்கொண்டிருந்த பானுமதி அவனின் கண்களில். அடுத்துவந்த படையினரின் உதவியுடன் பானுமதி பங்கரிலிருந்து மீட்கப்பட்டு, அரசபடையினரின் மீட்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டாள்.

வானத்திலிருந்தும் தரையிலிருந்தும் கருக்கொண்ட சூறா வழிகள் ஓய்ந்துவிட்டன. குண்டுவீச்சு விமானங்கள் பறப்பதை நிறுத்தி விட்டன. எறிகணைகள் வீசப்படுவதில்லை. துப்பாக்கிகளும் மௌனித்துவிட்டன. நிலக்கண்ணிகள் மட்டும் இரையினை எதிர் பார்த்துக் காத்துக் கிடக்கின்றன. இப்பொழுது புதைபொருள் ஆய்வுகள் நடக்கின்றன. தொலைந்துவிட்ட மனிதங்கள் கிடைத்தாலும் கிடைக் கலாம்.

கொழும்பு போதனா வைத்தியசாலையில் விபத்துப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட பானுமதியின் இரண்டுகரங்களும் அகற்றப்பட்டு விட்டன. தொடையில் ஒரு ஷெல்துண்டு இருப்பதாகவும் அதனை அகற்றுவதுபற்றி வைத்தியர் குழு ஆலோசனை நடாத்திக் கொண்டிருக் கின்றனர். ஏனென்றால் இப்பொழுது எட்டுமாதச் சிசு பானுமதியின் வயிற்றில், அத்தோடு மிகவும் போஷாக்கில்லாமல் பெலவீனப்பட்டுப் போய் இருக்கின்றாள். இந்த நிலையில் அம்முயற்றி ஆபத்தாகவும் முடியலாம் அல்லவா?

பானுமதிக்கு இப்பொழுது நினைவு திரும்பி விட்டது. ஏற்றப் பட்ட சேலைன் மருந்துகள் மூலம் தெம்பினைப் பெற்றுவிட்டாள். வன்னியில் மயங்கிய பானுமதி, இப்பொழுதுதான் முழுமையான சுயநினைவிற்கு வந்துள்ளாள். கண்களைத் திறந்து பார்க்கின்றாள் வெள்ளைக் கோட்போட்ட வைத்தியரின் கனிவான பார்வை அவளுக்கு ஒத்தடம் கொடுக்கின்றது. கால்களை அசைக்கின்றாள் அசைகின்றது. அடுத்து கரங்களினை அசைக்கின்றாள் முழங்கைக்குக் கீழ் அசைய வில்லை. அங்கே கரம் இருந்தால்தானே அசையமுடியும். நிலமை

யினைப் புரிந்துகொண்ட பானுமதியின் கண்களில் இருந்து ஆறெனக் கண்ணீர் பெருக்கெடுக்கின்றது. அவளுக்கு எப்படித்தான் ஆறுதல் சொல்லமுடியும். பனித்த கண்களைக் கண்ணாடிக்குள்ளால் துடைத்துக் கொள்கின்றார் அந்த வைத்தியர். அவள் அழுது அழுதே ஆறுதல் பெறட்டும் என்று, அவ்விடத்தைவிட்டு நகர்கின்றார் வைத்தியர்.

பானுமதிக்கு நினைவு திரும்பி இரண்டு வாரங்களாகிவிட்டன. யார் யாரோ? எல்லாம் வந்து பார்த்து ஆறுதல் சொல்லிச் செல்கின்றார்கள் அதைக் கேட்டுக் கேட்டே அவளுக்கு அலுத்து விட்டது.

"டொக்டர்....."

முதன்முறையாக பானுமதி வாயைத்திறந்து பேசுகின்றாள். எங்கோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தவள். தம்மை அழைப்பது டொக்டருக்கு ஆச்சரியத்தினை ஏற்படுத்துகின்றது. பானுமதிக்கு அருகில் செல்கின்றார். அவள் அவரைக் கனிவுடன் பார்க்கின்றார். இத்தனை நாளும் டொக்டர் அந்தக்கனிவான பார்வையினைத்தானே அவளுக்கு ஆறுதலாக வழங்கிக்கொண்டிருந்தார். அதன் பலன் இன்று பானுமதிமூலம் திருப்பிக் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

"மிஸ் என்னெண்டாலும் தயங்காமல் சொல்லுங்கோ"

அவளது தயக்கத்தினைப் போக்கி தைரியமளிக்கின்றார்..

"டொக்டர்... என்னை யாரும் அனுதாபத்தோட ஒருமாதிரிப் பார்ப்பதையும், கதைப்பதையும் நான் வெறுக்கிறேன். அப்படியான வர்களை என்னைப் பார்க்க அனுமதிக்க வேண்டாம் டொக்டர்..."

பானுமதி டொக்டரிடம் மிகுந்த நிதானத்துடன், ஆழமான நம்பிக்கையுடன் சொல்கின்றாள். டொக்டர் ஆச்சரியத்துடன் அவளைப் பார்க்கின்றார். அவரது வைத்திய அனுபவத்தில் இப்படியான சூழ்நிலையிலும் தன்னம்பிக்கை இழக்காத தைரியசாலிப் பெண்ணைக் கண்டதே இல்லை. இவ்வளவு நாளும் இந்தப்பெண் எப்படித்தான் வாழப்போகின்றாள். நாம் உடலுக்கு வைத்தியம் பார்த்துவிட்டேன் உள்ளத்தை வெல்வது எப்படி என்றே சிந்தித்துக் கொண்டிருந்தார். அவளின் வார்த்தைகள் அவரது கவலையை சுடரில் மறைந்த இருள் போலாக்கியது.

பானுமதி இரண்டு கைகளை இழந்துவிட்ட போதிலும் தனது நம்பிக்கையினை இழக்கவில்லை. அவளுக்கென்று இருந்த கணவன்,

www.padippakam.com

அப்பா, சகோதரிகள் யாவரையும் இழந்துவிட்டாள். ஆனால் தனது கிராமத்து மக்களை இழக்கவில்லைத்தானே. சின்னப் பாண்டியன் குளத்தில் இருந்து தேவிபுரம் வரை இடம் பெயரும் போதெல்லாம் பரியாரி அம்மா பரியாரி அம்மா என்று, தமக்கில்லாவிட்டாலும் அவளுக்கும் குடும்பத்திற்கும் செய்த உதவிகள் ஒன்றா இரண்டா? திருக்கல்வண்டில் பயணம் இல்லாமல் போனபோதெல்லாம் கதிரையில் உட்காரவைத்து அம் மக்கள் தூக்கி வந்தது எல்லாம் பானுமதியின் மனக் கண்களில் நிழலாக ஓடிக்கொண்டே இருந்தன.

பானுமதிக்கென்று இரத்த உறவு வயிற்றில் உள்ள குழந்தை மட்டுமே. அதனைப் பெற்றெடுக்க வேண்டும். அதனை அணைக்கப் பாலூட்ட எப்படி அவளால் முடியும்? ஆனால் எப்படியோ அவள் அதனைச் செய்யத்தான் போகின்றாள். பரியாரி கணபதியரின் பேரனோ, பேத்தியோ மீண்டும் அந்த மண்ணில் துள்ளி விளையாடத்தான் போகின்றது. அக் குழந்தையின் துள்ளலில்தான் அவளது வாழ்க்கையே அமையப் போகின்றது. நகரத்தில் உள்ளவர்கள் வேண்டுமானால் பொருளாதாரக் கணக்குப்போட்டு அவளது எதிர்காலத்திற்கு யார் உதவமுடியும் என்று கேட்கலாம். அம் மக்களை சின்னப் பாண்டியன் குளத்தில் வசிப்பதற்கு விட்டால் மட்டும் போதும். அவர்கள் உழைப்பை நம்புபவர்கள். தமது அடிப்படைத் தேவைக்கு மேலதிகமாக எதனையும் ஆசைப்படாதவர்கள். அடுத்தவர்க்கு உதவும் கூட்டு உழைப்பினை நம்புபவர்கள் அல்லவா. அந்த மண்ணின் முளைதானே பானுமதியும். அவள் மற்றவர்களைப் போல் ஏன் பேதலிக்க வேண்டும். பானுமதி தனது கருவிலிருக்கும் குழந்தையின் வருகைக்காக காத்திருக்கின்றாள். இரண்டு கரங்கள்தானே இல்லை. சின்னப் பாண்டியன்குள மக்களின் கரங்கள் ஒன்றா இரண்டா?

**2009.10.20.**



படிப்பகம்

# 'செய்வினை'

தீச்சுவாலை கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. பக்கத்திருந்த நெடிய மரங்களும் சேர்ந்து பற்றி எரிந்தன. தூரத்தில் நின்று பார்ப்பதற்கு என்ன நடக்கிறது என்பது விளங்கவில்லை. ஏதோ ஒரு விபரீதம் நடந்துவிட்டது. யாருடைய வீடோ, வைக்கோற் போரோ எரிவதாக அனுமானிக்க முடிந்தது. ஆறுமுகம் சற்றுமுன்தான் வீட்டிற்கு வந்து, நன்றாகக் குறட்டைவிட்டு நித்திரையில் மூழ்கியிருந்தான்.

“டேய் தம்பி எழும்படா, கொம்மான் வீட்டுப்பக்கமாய் வானம் முட்ட நெருப்பெரியுது”,

ஆறுமுகத்தின் தாய்க்கிழவி, அவனது தோள்களை உலுப்பி எழுப்புகின்றாள். திடுக்கிட்டு எழும்பிய ஆறுமுகம்

“என்னணை இப்பதானை கொஞ்சம் கண்ணயர்ந்தனான். அதுக்குள்ள என்ன அவசரம்”

என்று கண்களைக் கசக்கியபடி எழுந்த ஆறுமுகம் கிழக்குப்பக்கம் தீச்சுவாலை உயர்ந்து, உயர்ந்து தாழ்வதைப் பார்த்துவிட்டான். துடித்துப் பதைத்து மாமன் வீட்டை நோக்கி ஓடத்தொடங்கினான்.

வீதியின் இருமருங்கும் கிழடுகளும், குமரிகளும், சிறுவர்களும் கூடி நின்று தமக்குள் குசுகுசுத்துக் கொண்டிருந்தனர். அவற்றினை எல்லாம் பார்க்கும் அவகாசம் ஆறுமுகத்திற்கு இல்லை. அவனுடைய மாமன் தம்பர் வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான்.

நேற்றுக் காலையில் மாமன் வீட்டை போனபோதுதான்

“இரவைக்கு மட்டக்களப்பு மாந்திரீகர்மார் வருகினம் ஒரு கழிப்பு கழித்துப் பாப்பம், நீ மறந்திடாமல் பொழுதுபடேக்க வந்திடு”

என்று மாமன்காரர் சொன்னவர். அதில இருந்து, ஆறுமுகம் அங்கதான் நின்று எல்லா வேலைகளையும் ஓடியாடிப் பார்த்துக் கொண்டிருந்தான். விடிவெள்ளி எழுந்து, கோழியும் கூவியபிறகுதான் வீட்டுக்கு வந்தவன். எல்லாம் நல்லாத்தானே இருந்தது. என்ன நடந்தது என்று, அவனது மனம் அன்று காலையிலிருந்து நடந்த சம்பவங்களை மீட்டுப் பார்த்தது.

கழிப்புக்கு வேண்டிய சாமன்கள் எல்லாம் ஏற்கனவே வாங்கியாயிற்று. ஆனால் வெள்ளைச் சேவலும், சிகப்புச் சேவலும்தான் வாங்கவில்லை.

அவர்கள் அலையாத இடம் இல்லை. அப்படி இருந்தாலும் இடையில் வேறு நிறச் செட்டைகள் கலந்திருப்பது, பெரிய பிரச்சனையாக இருந்தது. கண்டிப்பாகச் சொல்லிவிட்டாராம் மாந்திரீகர், சுத்தமான வெள்ளை, சிகப்புச் சேவல்கள்தான் இருக்க வேண்டும் இல்லாவிட்டால் பூசை பலிக்காமல் போய்விடும் என்று. ஆறுமுகத்திடம் இவ் வேலை ஒப்படைக்கப்பட்டது.

சைக்கிளை எடுத்துக்கொண்டு தெல்லி தெல்லியாகச் சுற்றி, வட்டக்கச்சி சந்தியில் இருந்து உள்ளுக்குள்ள முஸ்லீம் வீடொன்றில் வெள்ளைச் சேவலும் அங்காலே கட்சன் வீதியில் உள்ள கட்டைப்பரியாரியார் வீட்டிலை சிகப்புச் சேவலும் கிடைத்தது. ஆனால் தேடிவந்ததால அறா விலைக்கே கிடைத்தது. இரண்டும் வாங்கிமுடிய பின்னேரம் 5 மணிக்குப் பிந்திவிட்டது.

காலையிற் புறப்பட்ட ஆறுமுகம் சற்றும் தளராத விக்கிரமாதித்த னாய் இரண்டு சேவலுடனும் வெற்றிப் பெருமிதத்துடன் மாமன் வீட்டுக்குச் சென்றான். இவனுக்குக் கிடைத்த வரவேற்புக்கு மட்டில்லை, மாலை ஆறுமணியளவில் மட்டக்களப்பு மாந்திரீகர்கள் இருவரும் சீடர்கள் நால்வரும் உள்ளூர்ப் பூசாரி ஒருவருமாய் ஏழுபேர் கொண்ட குழுவொன்று ஏபோட்டிக் காரில் வந்து இறங்கினர்.

முற்றத்தில் நின்ற மாமரத்துக்குக் கீழே உள்ள வண்டிற் கொட்டில் துப்பரவு செய்யப்பட்டு, சாணிகொண்டு மெழுகப்பட்டிருந்தது. அதுதான் பூசை நடத்துவதற்கான இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவேண்டும், பாய் விரிக்கப்பட்டு, பூசைச் சாமான்கள் எல்லாம் பரப்பி வைக்கப் பட்டிருந்தன. பூசைக்கான ஏற்பாடுகளில் சீடர்கள் நால்வரும் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். மாந்திரீகர் இருவருக்கும் வைக்கோற் போருக்குப் பக்கத்தில் மறைவாக நின்ற வேப்பமரத்தின் கீழ் 'ஈசிச்சேர்' போடப்பட்டு, ஊர்வழக்கப்படி ஒன்றும் பிசகாமல் அனைத்து வகையறாக் களுடனும் கவனிக்கப்பட்டனர்.

இரவு எட்டுமணியளவில் தொடங்கியது பூசை. பூசனிக்காய்கள் வெட்டப்பட்டு குங்குமம் பூசப்பட்டிருந்தது. அதைப்பார்க்கும் போது இரத்தம் வழிவதுபோல் இருந்தது. தேசிக்காய்கள் வெட்டப்பட்டு அதுவும் குங்குமத்துள் சங்கமித்தன. மாந்திரீகர் இருவரும் மந்திர உச்சாடனத்தில் ஈடுபட்டனர். உடுக்கின் நாதம் சும்மாய் நிற்போரையும் ஆடவைக்கும் சக்திவாய்ந்ததாய் இருந்தது. சிறிது நேரத்தில் மாந்திரீகரில் ஒருவர் உருவேறி ஆடத்தொடங்கி விட்டார். அவரது வாயிலிருந்து மலையாளம் பிரவாக மெடுத்தது. அந்த மொழியில் குரலை தணித்தும் ஏதோ ஏதோ எல்லாம் உளறிக் கொட்டிக் கொண்டே இருந்தார். ஆட்டத்தின் உச்சத்தில் ஆடாமல்

நின்ற மாந்திரீகர் தனது வெலிற்றினை எடுத்து ஓங்கி அடித்து,

"நீ யார்? என்ன வேணும்? "

என்று தமிழிலும் மலையாளத்திலும் கேட்டார்.

"நான்தாண்டா காட்டுக்கறுப்பன், இந்த வீட்டையே சங்காரம் பண்ண வந்தனான். கிழக்கு மூலையிலை செய்வினை செஞ்சு ஏவப்பட்டனான். என்னை யாராலும் ஒண்டும் பண்ண முடியாதடா."

என்று மிக உறுதியோடு கூறியது. எல்லோர் முகங்களிலும் மரணப் பீதி, அசைவற்று நின்றனர்.

"டேய் உனக்கு என்னடா வேணும், நீ கேக்கிறதெல்லாம் தாறம் இந்த வீட்டைவிட்டுப் போயிடு"

மறுபடியும் தனது வெலிற்றினால் அடித்து, அதட்டுகிறான் மாந்திரீகன். சற்றுநேரம் ஆடிவிட்டு,

"எனக்கு இரத்தப்பலியும் மடையும் வையுங்கோ நான் போறன்."

உடுக்கடியின் வேகம் அதிகரித்தது. அப்படியே பூஜைக்குப் படைக்கப்பட்டவற்றோடு, மறக்காமல் சேவல்களையும் கொண்டு போனார்கள். சுடலைக்கு வேறுயாரும் போகக்கூடாது என்பதால் ஆறுமுகம் போகவில்லை. அப்படியே வீட்டுக்குச் சென்று படுத்துவிட்டான்.

ஆறுமுகம் தம்பர்மாமன் வீட்டை நெருங்கிவிட்டான். மாமனின் நாற்சார வீடு, கொட்டில், வைக்கோற்போர் என எல்லாமே பற்றி எரிந்து கொண்டிருந்தது. ஊரவர்கள் கூடி எடுத்த முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப்போய், ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு நின்றனர். அவர்களை விலக்கிக் கொண்டு சென்ற ஆறுமுகம் திகைத்துப் போய் நின்றான்.

மாமன் தம்பர், மாமி மரகதம், மச்சாளவை எல்லோரும் பேயறைந்தது போல் நின்றனர். அவர்களோடு மூன்று மாதத்துக்கு முன்பு வந்து ஒட்டிக்கொண்ட கோமளா மட்டும் எரிகின்ற நெருப்பினை வெறித்துப் பார்ப்பதும், தனக்குள்ளே சிரிப்பதுமாக நின்றாள். அவளைப் பார்த்த ஆறுமுகத்தின் மூளையில் மின்னலென ஒரு பொறிதட்டி மறைந்தது.

நீளமான முகத்திற்கு ஏற்ப அமைந்த கிளிமூக்கு, சுருட்டைத் தலைமுடி அக்கறையின்றிப் பின்னி விடப்பட்டிருந்தது. கையில்லாத கவுண் முழங்காலுக்குச் சற்றுக் கீழ் வரை நீண்டிருந்தது. உருண்டை விழிகள் எதிலுமே பிடிப்பின்றிச் சுழன்றுகொண்டிருந்தன. சற்றுப் பருமனான

உடல்வாகு. ஆனாலும் பருமனுக்கு ஏற்ற உயரத்தினால் பார்வைக்குப் பருமனாகத் தெரியவில்லை. இத்தனை இலட்சணங்களுக்கும் சொந்தக்காரி தான் கோமளா. அவள், மரகதம் மாமியின் தங்கையின் மகள். யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யமான பெண்கள் பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் உயர்தரம் படிக்கின்றாள். பரீட்சை எழுதிவிட்டு, மாமிவீட்டில் நிற்கின்றாள். இவ்வளவு தகவலுமே ஆறுமுகத்துக்குத் தெரியும்.

ஆறுமுகம் மச்சாள் மாருடன் கதைத்துச் சிரிக்கும் போதெல்லாம் முகத்தை உம்மென்று வைத்துக்கொள்வதும், ஆறுமுகத்தைக் காணும் போதெல்லாம் ஒருவிதமான அலட்சியப் போக்குடன் ஒரு வெட்டு வெட்டிப் போவதும் அவனுக்குப் புரியவில்லை. சிலவேளை யாழ்ப்பாணத்துப் பொட்டையள் பட்டிக்காட்டாரோடை இப்படித்தான் பழகுவார்களோ என்று சிந்தித்ததும் உண்டு. ஆனால் அதற்குமேல் பெரிதாக அலட்டிக் கொள்ள வில்லை ஆறுமுகம். அவனுக்கென்று பல சோலிகள் இருந்தன அவற்றோடு அவன் பொழுது சரியாகிவிடும்.

போனகிழமை கல்மடு பத்தேக்கர் காணிக்குள் இருந்த வாடிவீட்டில் ஆறுமுகத்தின் மச்சாளவையும் கோமளாவும் தங்கிவிட்டு வந்தபோது, வாடிவீடு எரிந்ததையும் இப்பொழுது வீடு எரிவதையும் பொருத்திப் பார்த்தான் ஆறுமுகம். வீடு எரிகின்ற சோகத்தில் மாமன், மாமி, மச்சாளவை நிற்க கோமளா மட்டும் திருவிழாவில் வேடிக்கைபார்ப்பது போல் நிற்பதுவே, அவனுக்குச் சந்தேகம் எழக்காரணமாயிற்று.

மாமன் தம்பருக்கு அருகிற் சென்ற ஆறுமுகம் எதுவும் பேசாமல் அவரது கரங்களைப் பற்றிக்கொண்டான். ஒரு சாவீட்டில் துக்கம் பகிர்வது போல் அது இருந்தது.

"தம்பி நீ போனாப்பிறகு கழிப்பு முடிஞ்சு வந்தவையையும் அனுப்பீட்டு, கொஞ்சநேரம் கண்மூடியிருப்பன் சட சட என்று சத்தம்கேட்டு எழும்பிறன், வீட்டுமுகடு பற்றி எரியுது...."

அதுக்குமேல் தம்பருக்கு வார்த்தைகள் வரவில்லை. சிறுபிள்ளை போல் மூக்கைச்சீறி தேம்பிக்கொண்டிருந்தார். அவரை அமைதிப்படுத்துவது ஆறுமுகத்திற்குப் பெரும்பாடாகிப் போய்விட்டது. போட்டிருந்த உடுப்போடு ஆட்கள் மட்டுமே மிஞ்சி நின்றனர். இத்தனை காலமும் சேர்த்து வைத்திருந்த அத்தனையும் நெருப்பினிலே ஆகுதியாகிக் கொண்டிருந்தன.

ஆறுமுகம் பத்தாம் வகுப்புடன் படிப்பு ஏறாது என்று, பாடசாலைக்குப் போவதை நிறுத்திக் கொண்டான். ஆனாலும் எதனையும் காரண காரியத்துடன் ஆராயும் விஞ்ஞானப் பார்வை கொண்டவன்.

அத்தோடு பகுத்தறிவுவாதியான சின்னத்தம்பியருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தான். போன வருடம் பிலிங்கதேவன் முறிப்பில் ஒரு வீட்டில் பல அற்புதங்கள் அடுக்கடுக்காய் நடப்பதாகக் கேள்விப்பட்டதும், பேய் பிசாசு என்ற கதையெல்லாவற்றினையும் பொய்யாக்கியமையையும் நினைத்துப் பார்க்கின்றான்.

சம்பவம் நடந்தவீட்டில், இளம் தம்பதிகள் கைக்குழந்தையுடன் சுமுகமாகவே வாழ்க்கையினை ஓட்டிக்கொண்டிருந்தனர். ஆனால் குடும்பத்தலைவியின் தங்கை ஒருத்தி வந்து சேர்ந்ததில் இருந்து, வீட்டிற் குறளிவித்தைகள் நடக்கத் தொடங்கிவிட்டன. சமைத்த கறிச்சட்டியில் செங்கட்டி கிடக்கும், வீட்டிற்குமேல் கற்கள் வந்து மழைபோற் பொழியும் இப்படிப் பல அதிசயங்கள் அடுக்கடுக்காக நடந்தபோது, மாந்திரீகரைக் கூட்டிவந்து காட்டிச் சாந்திபூஜையும் நடத்திப் பார்த்தனர் அன்றுமட்டும் ஒன்றும் நடக்காது. மறுநாள் பழைய குருடி கதவைத்திறவடி என்ற கதையாகவே இருந்தது.

ஒருநாள் பிள்ளைக்குப் பால்மா கரைக்கும்போது, சூடாக இருக்குதென்று பாலை ஆற்றும்படி கூறியபோது, இவள் தண்ணிர்ச் சட்டியில் வைத்துப்பிடித்தாள். அப்படிச்செய்ய வேண்டாம் தண்ணீர் கலக்கும் என்று எவ்வளவோ சொன்னபோதும் கேட்கவில்லை. இறுதியில் பாலில் தண்ணீர் கலந்தேவிட்டது. இப்படி ஒரு சந்தர்ப்பத்தினை எதிர்பார்த்திருந்த குடும்பத்தலைவன் மனைவியின் தங்கையைப் பிடித்து நாலு சாத்துச் சாத்தி,

"நீ தானடி கல்லெறிஞ்சனி, பிசுங்கான் போட்டனி......."

என்று அடுக்கடுக்காகக் கேட்டதற்கு ஓம் என்று பதிலளித்தாள். அத்துடன் அடிப்பதை நிறுத்திவிட்டான். மீதியை அக்காள் தொடர்ந்தாள். அன்றுடன் குறளிவித்தையும் நின்றது. ஆனால் ஏன் அப்படி நடந்தது என்பதைச் சின்னத்தம்பியர்தான் உளவியல் அடிப்படையில் அணுகியபோது, திருமணவயதான போதிலும் ஆகாமல் ஆசைகளை அடக்கிவைத்திருந்ததும் அவளுக்கு இரண்டு வயது மூத்த தமக்கை தனது கணவருடனும் பிள்ளையுடனும் சந்தோசமாக வாழ்வதும் ஏக்கத்தினையும் பொறாமையையும் ஏற்படுத்திவிட்டது. அதன் பேறாக உளப்பிளவு (Schizophrenia) எனும் மனநோய்க்கு உள்ளாகி இருந்தது தெரியவந்தது. உரிய வைத்தியரிடம் சிகிச்சைபெற ஆலோசனையும் வழிகாட்டலும் செய்தமை நினைவுத் திரையில் ஓடி மறைந்தது.

கல்லெறிவிழுந்த கதைபோல இச் சம்பவமும் ஏதாவது சம்பந்தம் உள்ளது போலவே ஆறுமுகத்தின் எண்ணத் திரையில் தோன்றியது. கோமளத்தின் பூர்வீகம் பற்றி அறிந்தால் மட்டுமே இதற்குத் தீர்வுகாண

முடியும். யாரிடம் விசாரிப்பது, மாமா மாமி அவர்கள் சரிவராது பழைய பஞ்சாங்கம் எனது பகுத்தறிவு வாதத்திற்குத் துணைபோக மாட்டார்கள். சின்ன மச்சாள்தான் பொருத்தமான ஆள், எப்படியும் பட்டர்பண்ணி கதைவிட்டுக் கதைகேட்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான் ஆறுமுகம்.

மாமன் தம்பர் வீட்டில் அடுக்கடுக்காய் பல சம்பவங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. போன மாதம் நித்திரைப்பாய் தீப்பிடித்து எரிந்தது, இன்னொருநாள் வீட்டில் உள்ள உடுப்புகள் எல்லாம் எரிந்தது, வாடிவீடு தீப்பிடித்து எரிந்தது, வெங்காயக் கொட்டில் தீப்பிடித்தது, நெல்லுப்போர் எரிந்தது என அடுக்கிக்கொண்டே போகலாம். அதிலும் அதிசயம் என்னவென்றால் வெங்காயக் கொட்டில் எரியுது என்று அதை அணைத்துக்கொண்டிருக்கத் தூரத்தில் இருந்த நெற்போர் தீப்பிடித்து எரிந்ததுதான். இதுவெல்லாம் கொள்ளிவால் பேயின் வேலையென்று பார்க்காத மாந்தரீகர் இல்லை. பூசை வழிபாடென்று எல்லாம்பார்த்து, இறுதியாகத்தான் மட்டக்களப்பில் உள்ள மலையாள மாந்திரீகர்களை அழைத்து ஒரு குறையும் இல்லாமல் பேயோட்டிய பின்புதான் வீடே பற்றியெரிந்து கொண்டிருக்கின்றது.

அடுத்தநாள் காலையில் ஆறுமுகம் சின்னமச்சாளிடம் மெல்லக் கதைவிட்டுப் பார்த்தான். அவன் கஷ்டமாக நினைத்த விடயம் மிக இலகுவாகியது. சின்னமச்சாள் கோமளத்தின் பூர்வீக முடிச்சினை அவிழ்த்தாள்.

“மச்சான் கோமளம் ஆரோ ஒரு பொடியனைக் காதலித்தவளாம். அவனைக் கலியாணம் கட்டப்போறாள் எண்டுதான் இங்கை ஒளிச்சுக் கொண்டுவந்து வைச்சிருக்கினம். அவள் எப்படியும் அவனைத்தான் கட்டுவாளாம். இல்லாட்டில் நஞ்சு குடிப்பன் என்று அடிக்கடி சொல்லிக் கொள்வாள்.”என்று சொல்லி முடித்தாள் சின்னமச்சாள்.

ஆறுமுகத்திற்குக் கதை எப்படிப் போகிறது என்று விளங்கிவிட்டது. ஆனால் கையும் மெய்யுமாகப் பிடிபடும் மட்டும் யாரும் நம்பமாட்டார்கள் என்பதும் தெரிந்ததால் பொறுமையுடன் அவதானித்துக் கொண்டிருந்தான். ஒருநாள் கோமளத்தின் கவுணில் தீப்பிடித்தது, அவள் கத்திக்கொண்டு வீட்டுக்கு வெளியில் ஓடிவந்ததும். பின்பு தீ அணைக்கப்பட்டதும் சின்ன மச்சாள் மூலம் கிடைத்த தகவல். அவனது சந்தேகத்தினை உறுதிப்படுத்துவ தாகவே அமைந்திருந்தது.

ஆறுமுகம் தனது பகுத்தறிவு வழிகாட்டியான சின்னத் தம்பியரைச் சந்தித்து, நடந்தவற்றினைக் கூறிக் கலந்துரையாடிய பொழுது பல விதமான சந்தேகங்கள் எழுந்தன. கோமளம் விஞ்ஞானக் கல்வி உயர்தரத்தில்

பயின்றபடியால் எதாவது இரசாயனங்களைத் தூவி ஒட்சிசனுடன் கலக்கும் போது நெருப்பு எரியவைத்திருக்கலாம் என்ற சந்தேகமும் வலுத்திருந்தது.

ஆறுமுகத்தின் மாமன் வீட்டில் நடக்கும் அவலங்களைக் கேள்விப்பட்ட கோமளத்தின் சித்தப்பா யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து நிலைமையினைக் கண்டு திடுக்குற்றார். அவரிடம் ஆறுமுகம் மெல்ல மெல்ல நடப்பவற்றினையும், அவை கோமளத்தின் நடமாட்டப் பிரதேசத்திலேயே நடப்பதன் ஒற்றுமையினையும் எடுத்து விளக்கினான். ஆனால் அவர் அதனை முழுமையாக நம்பியதாகத் தெரியவில்லை. இருப்பினும் அவள்மீது ஒருகண் வைத்திருக்க வேண்டும் என்பதை மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.

தம்பர் மாமனின் வீடு எரிந்தபின் தோட்டத்தில் போட்டிருந்த காவல் கொட்டிலில் எல்லோரும் தங்கினார்கள். எல்லோருக்கும் அது போதுமான வசதியில்லாவிட்டாலும் பக்கத்தில் ஒரு ஒத்தாப்புப் போட்டுக்கொண்டு தங்கியிருந்தனர். அங்கேயும் சிறு சிறு நெருப்பு எரிப்புச் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தன. கோமளம் அதில் சம்பந்தப்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஒருநாள் இரவு எல்லோரும் கதைத்துக் கொண்டிருக்கும் வேளையில் விளக்கு நூர்ந்துவிட்டது. தீப்பெட்டியைத் தேடிக்கிடைக்காத சந்தர்ப்பத்தில், கோமளம் தனது ரவிக்கைச் சட்டையிலிருந்து தீப்பெட்டியை எடுத்துக் கொடுத்தாள். கோமளத்தின் சித்தப்பாவிற்கு அவள்மீதுள்ள சந்தேகம் உறுதியான நிலையில், அவளது பின்னலைப்பிடித்து அதட்டி விசாரித்தபொழுது, அவள்கூறிய செய்தி எல்லோரையும் திகைப்பில் ஆழ்த்தியது.

நெருப்பினைத் தான்தான் வைத்ததாகவும், வைக்கும் பொழுது தனக்கு சுயநினைவு இல்லை என்றும், நெருப்பு எரியும்போது அழவேண்டும் போல் இருக்கும் என்றும் கூறினாள். அவளை மேற்கொண்டு அடிப்பதில் பயனில்லை என்று விட்டுவிட்டனர்.

தகவல் அறிந்த ஆறுமுகம் தனது பகுத்தறிவுத் தந்தை சின்னத் தம்பியருடன் சென்றான். சின்னத்தம்பியர் தனக்கே உரிய ஆழ்ந்த புலமையுடன் மிக அமைதியாகவும் தெளிவாகவும் கோமளத்திற்கு ஏற்பட்ட நிலைமையினை எடுத்து விளக்கினார்.

"கோமளத்தின் ஆழமான காதலைப் பிரிச்சு, எதுவுமே செய்ய முடியாமல் காவலில் வைத்ததின் மூலம் அவளது ஆழ்மனதில் பெரிய வடுவினை ஏற்படுத்திவிட்டீர்கள். உண்மையில் வீட்டுக்காவலில் இருந்து விடுதலை பெறுவதற்கான உபாயமாகவே இத்தனையும் செய்தாள். அப்படிச் செய்வது அவளுக்குத் தெரியாது. இது மேலும் தொடர்ந்தால் தன்னையே

www.padippakam.com

எரித்துக்கொள்வாள். உடனடியாக ஒரு உளவள ஆலோசகரை நாடுவதே சிறந்த வழி."

என்று ஒரு குட்டிப்பிரசங்கமே நிகழ்த்தினார் சின்னத்தம்பியார். மேற்கொண்டு கோமளத்தினை விட்டுவைப்பது ஆபத்தானது என்பதைப் புரிந்துகொண்ட அவளது சித்தப்பா, மறுநாள் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்வதாக முடிவெடுத்தார்.

உளநலமுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவந்த கோமளத்தின் காதல் வாழ்க்கையைப் பலவந்தமாகப் பறித்தெடுத்து, அவளை மனநோயாளியாக்கிப் பில்லி சூனியம், செய்வினை என்று பல ஆயிரங்கள் இலட்சங்களை இழந்து எதிர்கால சந்ததியினரையும் பார்வைக்குருடாக்கும் சமூகநோய்க்கு மருந்தென்ன?

தமது குல மேம்பாட்டிற்காகவும், அந்தஸ்திற்காகவும், அயலவர்களின் போலிப் புகழாரங்களுக்காகவும் தமது பிள்ளைகளின் நியாயமான ஆசைகளை, அவர்களின் வாழும் உரிமையினைப் பறித்தெடுக்கும் வரட்டுத்தனத்தால் எல்லாமே இழந்து நிற்கும் மனிதர்களை நினைத்து, வேதனைப்படுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்யமுடியாத கையறுநிலையில் நின்றான் ஆறுமுகம்.

***( கதைக்கான களம் - 1978 )***



படிப்பகம்

www.padippakam.com

## முரண்பாடுகள்

"பத்மினி கெதியா வாருமப்பா, எல்லாச்சனமும் தூரப் போயிட்டினம் இன்னும் என்னப்பா செய்யிறா.."

கைக்குழந்தையை ஒரு கையிலும் மறுகையில் பழைய சூட்கேசுப் பெட்டியையும் தூக்கிக்கொண்டு நின்ற வசந்தன், தனது மனைவியை விரைவுபடுத்தினான்.

"கொஞ்சம் பொறுங்கோ அப்பா, பிள்ளையின்ர பால்மாவை வைச்சனான் எதுக்கை கிடக்கு எண்டு தெரியேல்ல..."

"அது இல்லாட்டிப் பறுவாயில்லை, வெளியிலை வாரும் சனத்தோட சனமாகப் போகவேணும் இல்லாட்டி, சண்டையில மாட்டுப்பட வேண்டி..."

வசந்தன் கூறிமுடிக்கவில்லை. தூரத்திலிருந்து விண்கூவிக் கொண்டு வந்த ஷெல் ஒன்று பங்கருக்குமேல் விழுந்து வெடித்துச் சிதறியது. பங்கருக்குமேல் தீச்சுவாலை கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

குழந்தையுடன் மண்ணில் புரண்ட வசந்தன், என்ன ஏது நடந்தது என்று பார்ப்பதற்கிடையில் அடுத்த ஷெல் முன்னரைவிட பலமான சத்தத்துடன் வெடித்துச்சிதறியது.

ஷெல்லடியைத் தொடர்ந்து துப்பாக்கிச்சத்தம் தூரத்தில் சடசடக்கத் தொடங்கியது. டும்.. டும்.. டப் டப் எனப் பெரிதும் சிறிதுமாக அண்மித்துக் கொண்டிருந்தது.

நிலைமையினை வசந்தன் ஊகித்துவிட்டான். யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே. பழமொழியாக மட்டுமே படித்தபாடம். இப்பொழுது ஷெல்லடி வரும் முன்னே துப்பாக்கி வெடியுடன் படைவரும் பின்னே என்ற புதுமொழி யதார்த்தமாகிக் கொண்டிருக்கும் யுத்தகாலத்திலல்லவா இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இல்லை இல்லை செத்துக்கொண்டிருக் கின்றார்கள்.



படிப்பகம்

வசந்தன் குழந்தையைக் கட்டிப்பிடித்தபடி மணலில் உருண்டு புரண்டு, மரங்கள் நிறைந்த காட்டுக்கரையினை அடைகின்றான். அவனது அதிர்ஷ்டம் அந்த மணல்மேடு காட்டுக்கரையை நோக்கிச் சரிந்திருந்தது. அதனால் வேகமாக காட்டுக்கரையை அடைய முடிந்தது. அங்கிருந்து சதுப்பு நிலத்தினைத்தாண்டி தலைதெறிக்க ஓடிக்கொண்டே இருக்கின்றான். சனங்கள் போய்க்கொண்டிருக்கும் இடத்தினை அண்மித்தபோது அப்பிடியே மயங்கிவிட்டான். அதனைக்கண்ட சிலர் ஓடிவந்து அவனையும் குழந்தையையும் தூக்கிக்கொண்டு, தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கின்றனர்.

அன்று அதிகாலையில் தொடங்கிய மக்களின் ஓட்டம் நண்பகலையும் தாண்டியபின்பு, அரசு அறிவித்த பாதுகாப்பு வலயத்துள் காலடிவைத்தபோதே ஓய்ந்தது.

வசந்தனின் தோளிலும், குழந்தையின் கையிலும் சிறிய சிராயல் காயம் மட்டுமே. ஆனால் அவனின் மனைவி, குழந்தையின் அம்மா எங்கே, என்ன ஆனார் என்பதுபற்றி யாருக்குத்தான் என்ன தெரியும்? அவ்விடத்தை நெருங்கத்தான் முடியுமா? இப்பொழுது அப் பிரதேசம் அரச கட்டுப்பாட்டுக்குள். பத்மினி உயிரோடு இருந்தால் காப்பாற்றப்பட்டிருப்பாள். இல்லாவிட்டால் ஏற்கனவே யுத்தத்தில் பலியான ஆயிரக்கணக்கானவர்களின் பட்டியலில் சேர்க்க வேண்டியதுதான். செத்தவர்களையும் அகதியானவர்களையும் வைத்து, உள்ளூரிலும் வெளியூரிலும் பிழைப்பு நடாத்தும் வியாபாரத்திற்குக் குறைவில்லையே! ஆனால் அவலத்தினையும் மரணத்தினையும் எதிர்கொள்வது அப்பாவிப் பொதுமக்களே என்பதை யாரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

முப்பது வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் உள்ள குக்கிராமத்தில் வறுமையில் வாடிய குடும்பம்தான் வசந்தனுடையது. தாய் தந்தையருடன் அண்ணன், தங்கை என அளவான குடும்பமான போதிலும் நிலபுலமின்மை, தொழில் வாய்ப்பின்மை காரணமாக அங்கிருந்து, முறிகண்டி விவசாயக் கிராமத்திற்கு இடம் பெயர்ந்தனர். அது சமாதான காலம் என்றும் சொல்லமுடியாத சுமுகமான காலத்தில், வறுமை காரணமாக இடம் பெற்ற முதலாவது இடப்பெயர்வு. வசந்தனின் பெரியப்பாவுக்கு ஏற்கனவே அங்கு நான்கு ஏக்கர் வயற்காணி இருந்தமையால், அக் காணிக்குப் பக்கத்தில் உரிமைகோராமல் காடுமண்டிக்கிடந்த நான்கு ஏக்கர் காணியை அந்த நாளில் சொல்வது

www.padippakam.com

போல் 'வைபோஸாகப்பிடித்து' விவசாயம் செய்யத் தொடங்கினார்கள்.

ஆரம்பத்தில் விதானையார், டீ.எல்.ஓ. என்று பல பிரச்சினைகள் வந்த பொழுதிலும் பெரியப்பாவின் உதவிமூலம் கொழுவல் ஆறுமுகத்தின் அறிமுகம் கிடைத்தது. கொழுவல் ஆறுமுகம் முறிகண்டிக்கு வந்து காணியைப்பார்த்து, அதன் உண்மை நிலைமையினைத் தேடியபொழுது, அக்காணியின் பூர்வீகம் தெரியவந்தது. உண்மையில் அக் காணிக்குரியவர்கள் நீண்டகாலமாக அக்காணியில் விவசாயம் செய்யவோ, வசிக்கவோ இல்லாமையால் அக் காணிக்குரிய 'போமிற்' காலாவதியாகி விட்டது. அப்போது அது அரச காணியாகவே இருக்கிறது. காணி அதிகாரி செய்திருக்க வேண்டியது அக் காணியை இன்னொரு நிலமில்லாத விவசாயிக்குக் கொடுத்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாமல் காடுபத்த விட்டு, அதன்மூலம் காட்டுமிருகங்கள் வந்து விவசாயத்தினை நாசம்பண்ணுவதற்கு வழிசெய்துகொண்டிருக்கிறார்கள். இவற்றினை அறிந்த ஆறுமுகம் வசந்தன் குடும்பத்திற்கு உதவ முன்வந்தார்.

கொழுவல் ஆறுமுகம் என்பது ஆறுமுகத்தின் பட்டப் பெயராகும். இதனைச் சூட்டியவர்கள் கிளிநொச்சிக் காணிக்கந்தோரில் உள்ள அதிகாரிகளே. அவர்கள் செய்யும் தில்லுமுல்லுகளை எப்படியோ மோப்பம் பிடித்து, 'பெட்டிசம்' எழுதுவதில் ஆறுமுகத்திற்கு நிகர் ஆறுமுகம்தான். ஆறுமுகம் ஓ.எல். வரைதான் படித்தபோதிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த புலமை உள்ளவன். அத்துடன் சிறிதுகாலம் பிரக்கிராசி ஒருவரிடம் கிளாக்கர் வேலையும் பார்த்த அனுபவம் உண்டு, காணிக்கந்தோரின் கிளாக்கர் வேலைக்கு மனுப்போட்டு ஏமாந்துபோனவன். ஆறுமுகத்தினைவிட ஆற்றல் குறைந்தவர்களுக்கு எல்லாம் மேலிடத்துச் சிபார்சுடன் வேலை கிடைத்தது. சாதாரண ஏழைவிவசாயக் குடும்பத்தில் பிறந்த ஆறுமுகத்திற்கு யார்தான் சிபார்சு செய்வார்கள். இறுதியில் அங்கு வேலை செய்யாவிட்டாலும் அங்கு வேலை செய்யும் மேலிடத்திருந்து, அடிமட்டம் வரை தனக்கு அடிபணிய வைத்துவிட்டான் ஆறுமுகம். அது எப்படிக்கை வந்தது என்பது ஆறுமுகத்தின் தொழில் ரகசியம். ஆனால் ஆறுமுகத்திடம் நியாயம் இருந்தது. அந்த நியாயத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்காக முறைப்பாட்டுக்காரரிடம் சிறுகட்டணம் அறவிடுகின்றான். பெரிய பெரிய வேலையைச் செய்வான் அதற்காக அதிகம் ஆசைப்படமாட்டான் அது அவனுடைய தொழில்தர்மம்.



படிப்பகம்

வசந்தனுடைய அப்பாவும் அக் காணியினைப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர். ஆனால் நேர்முகப்பரீட்சைக்கே அழைக்கவில்லை. அந்தத்தகவலை வைத்து, கொழுவல் ஆறுமுகம் அந்த விண்ணப் பத்தினை ஆளைவைத்துத் தேடியெடுத்து அதன் பிரதியுடன் ஒரு கருணை முறையீட்டுக் கடிதம் எழுதி எப்படியோ வசந்தன் அப்பாவுக்கு, அந்தக் காணியை சொந்தமாக்கிவிட்டான். அப்படிக் கொழுவல் ஆறுமுகம் செய்தவேலைகள் பல. அதிகார துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரியையும் வேறு இடத்திற்கு மாற்றுகின்ற மந்திரமும் அறிந்தவன் என்ற வகையில் காணிக்கந்தோரில் ஆறுமுகத்திடம் பெரியவர்கள் தம்பி என்றும், சிறியவர்கள் அண்ணை என்றும் பயம்கலந்த மரியாதை யுடனேயே பழகுவார்கள்.

கொழுவல் ஆறுமுகத்தின் உதவியால் நான்கு ஏக்கர் காணியும் கிடைத்த நாளிலிருந்து இரவு பகல் பாராமல் மாடாய் உழைத்தார்கள். அதன் பயனாக மேலும் பல வயல் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து விதைத்து, பழைய உழவு மெசின் ஒன்றுவாங்கிப் படிப்படியாக விவசாயத்தில் சாதனைபுரிந்தனர். அதின் அச்சாணியாக இருந்தது வசந்தன்தான். புதிய உழவுமெசின் வாங்கி மேலும் வயல்களைக் குத்தகைக்கு எடுத்து விதைத்ததன்மூலம் சொந்தமாகப் பல ஏக்கர் நிலங்களை வாங்கும் வல்லமை பெற்று, கிராமத்தில் உழைப்பால் உயர்ந்தவர்களில் வசந்தன் குடும்பமும் ஒன்றாகிவிட்டது. அண்ணன் தங்கை திருமணம் செய்து, தனியாகப் போனபின்பு வசந்தன் தாய்தகப்பனுடன் வாழ்கின்றான். மனைவி பத்மினி, மூத்த பையன் ஏ.எல். படிக்கின்றான். அடுத்த பெண்பிள்ளை ஓ.எல். படிக்கிறாள். கடைக்குட்டிதான் இப்பொழுது அவனது கரங்களில் அழுதபடி. தங்கை முதல்நாள் முள்ளிவாய்க்காலுக்குப் புறப்பட்டபோது மகளை அனுப்பிவிட்டான். எதுக்கும் பார்த்துப்போவம் என்று நின்றுதான் இன்று மனைவியைத் தொலைத்துவிட்டு ஏம்பலித்துக் கொண்டு நிற்கின்றான். மாமியாருடன் போன மகளுக்கு அம்மா எங்கே என்று சொல்வது, எப்படிச் சொல்வது என்று குழம்பிப்போய் இருந்தான் வசந்தன்.

வசந்தன் சின்ன வயசிலிருந்து அளவுக்கு அதிகமாக ஆசைப் படாதவன். எதனையும் நேர்மையாக உழைத்து சாப்பிட வேண்டும் என்று நினைப்பவன். அதனால் தகப்பனை வற்புறுத்தி முறிகண்டிக்கு வந்து உழைத்து வாழ்கின்றான். மண்ணையும் உழைப்பையும் அபாரமாக நம்புபவன். இன்று எல்லாமே பொய்யாகி, எங்கிருந்தோ உருவேற்று

கின்ற மந்திரவாதிகளின் உச்சாடனத்திற்கு, எல்லாமே ஆடிக் கொண் டிருக்கின்றன.

சின்ன வயதிலிருந்து, வறுமை எனும் கஷ்டத்தினை அனுப வித்த வசந்தன் அதனை நீக்குகின்ற சந்தர்ப்பம் கிடைத்தபோது, அதனைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவே விரும்பினான். கடுமையான உழைப்பின் மூலம் நல்ல வளங்களைப் பெறவேண்டும். தன்னால் பெற முடியாமல் போன கல்வியினைத் தனதும் சகோதரர் களினதும் பிள்ளைகள், பெறவேண்டும் என்பதுவே அவனது இலட்சிய மாக இருந்தது. இது ஒரு சராசரி மனிதனுக்குரிய அபிலாஷைதானே! ஆனால் வசந்தனின் கனவில் முதலாவது ஷெல்விழுந்தது ஏ.எல். படித்துக்கொண்டிருந்த மகன் குமரனைப் போராட்டத்தில் இணைக்கும் படி கட்டளை வந்தபோதுதான்.

உள்நாட்டு யுத்தம் உக்கிரம் அடைந்தபோது, வன்னியில் ஆளணிப்பற்றாக்குறை ஏற்பட்டமையால் கட்டாய ஆட்சேர்ப்பு அமுல்படுத்தப்படுகின்றது. அதில் வசந்தனதும் தங்கையின் மகனும் பெயர்ப்பட்டியலில் சேர்க்கப்பட்டபின் என்ன செய்வது. கஷ்டப்பட்டு உழைத்ததில் முடிந்தளவு தாராளமாகவே வழங்கியிருக்கின்றான். அது அவனால் முடிந்தது. ஆனால் அவனுக்கு என்று உள்ள மூத்தமகனைப் பலிகொடுக்கப் பெற்றமனம் ஒப்புமா? அதுவும் அவனால் படிக்கமுடியாத நிலைமையினை மகன் மூலம் ஈடேற்றக் கனவுகண்டு கொண்டிருக்கின்றான். அவை எல்லாவற்றிலும் மண்விழுந்து, கண்ணீரும் கம்பலையுமாகவே குடும்பம் இருந்தது. வீட்டுக்குத் தேடி வந்த நாளிலிருந்து மச்சானும் மச்சானும் ஒளியத் தொடங்கி விட்டார்கள். விஷஜந்துக்கள் நிறைந்த காட்டிலும் கரம்பையிலும் பகல் இரவாகப் பதுங்கியிருந்தது, இரவில் வீட்டிற்குவந்து, அவர்கள் அவக் அவக்கென்று விழுங்கிவிட்டு, தண்ணீர் குடிக்கவும் நேரம் இல்லாமல் ஓடிக்கொண்டிருந்தனர். ஒரு நாள் 'பஜ்ரோ' வீட்டுவாசலில் நின்றது. வசந்தன் இழுத்துச் செல்லப்பட்டான். பிள்ளையை நாட்டுக்காக் கொடுக்காத அப்பாவுக்கு பாடம்படிப்பிக்க வேண்டியிருந்தது. சுமார் மூன்றுமாதம் சீர்திருத்தப் பள்ளியில் மும்முரமாகப் பாடம் நடாத்தப் பட்டது. ஆற்றங்கரையிலும் பற்றைகளிலும் ஒளித்திருந்த இருவரும் பிடிபட்டபின்பே வசந்தனின் படிப்பும் முடிவுற்றது.

சிறையிருந்தும் மகனைக் காப்பாற்ற முடியாத வேதனையுடன் வீடுமீண்ட வசந்தனுக்கு, சனீஸ்வர அனுக்கிரகம் பரிபூரணமாக

ஏற்படத் தொடங்கிவிட்டது. அன்றுமாலை அந்தச்சம்பவம் நடந்தது. அண்ணன் செல்வனின் வீட்டிற்குமேல் கிபீர் போட்டகுண்டுக்கு சிதறிய உடலங்கள் சதைப் பிண்டங்களாயின. அந்தக் கோரக் காட்சி இன்னமும் அவனது மனக்கண்ணில் நிழலாடி சோகத்தினை நிரந்தரமாக்கிக் கொண்டிருக்கின்றது.

மகனையும் மருமகனையும் பிடித்துக்கொண்டுபோய் நாற்பந்தைந்து நாட்களில் மண்மீட்புக்கு பலிகொடுத்து விட்டார்கள். தமிழர் பண்பாடு, சமயாசாரம் எனும் வரன்முறையில் அந்திமக் கிரியை செய்யும் உரிமைகூட மறுக்கப்பட்டு, எங்கோ ஒரு குழியில் போட்டு மூடப்பட்டது. மையம் இல்லாமல் மையவீடு நடந்து முடிந்தது. அந்தச் சம்பவம் நடந்து, அடுத்த வாரமே இராணுவ நகர்வு கிளிநொச்சியை நோக்கி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு அறிகுறியாக எறிகணை வீச்சுக்களும் போர் விமானங்களின் குண்டுமழையும் தாராளமாக இடம் பெற்றன.

மேற்கொண்டு இருக்கமுடியாது என்ற நிலைமை ஏற்பட்டபோதே வசந்தனும் அண்ணன், தங்கை குடும்பமுமாக முறிகண்டிப் பிள்ளையார்மீது பாரத்தைப் போட்டுவிட்டு குமார புரத்தினை நோக்கி வன்னியில் முதலாவது இடப்பெயர்வினை ஆரம்பித்தனர். வீட்டில் இருந்த உழவு மெசினில் முக்கியமான சாமான் சட்டுக்களை ஏற்றிக்கொண்டு சென்றனர்.

அங்கு ஏற்கனவே சனம் நிரம்பி வழிந்தது. சுமாரான ஒரு இடத்தில் குடிசைபோட்டு சமையல்வேலைகளை ஆரம்பிக்கும் பொழுது, வேவு விமானம் மேலால் வட்டமிட்டது. எப்படியும் அங்கு குண்டு போடுவதற்குச் சந்தர்ப்பம் உண்டு என்பதால் முதல்வேலையாக பங்கர் வெட்டி, கொண்டுவந்த மரங்களை மேலே போட்டு, மண்மூடைகளை அடுக்கி மேலும் பாதுகாப்பினைச் செய்தனர். மரநிழலில் பகலில் இருப்பதும், இரவில் வங்கரில் முடங்கிப் படுப்பதுமாக ஒருவாரம் போனது.

குமாரபுரத்தினை நோக்கி எறிகணை வீச்சுக்கள் மீண்டும் தலை யெடுத்தன. அங்கிருந்து அடுத்த இடப்பெயர்வு முரசு மோட்டையை நோக்கியே இருந்தது. அதுவும் உழவு மெசினில் என்பதால் அவ்வளவு கஷ்டமாக இல்லை. ஆனால் போன இடத்தில் மலசலகூடம் அமைத்தல், வங்கர் வெட்டுதல் என வேலைகள் இருந்தன. அங்கும்

சுமுகமான நிலை இல்லை. எப்பொழுது ஷெல்விழும் என்ற பயமே மேலோங்கி இருந்தது.

ரேடியோவில் செய்திகேட்கும் பொழுது, மக்களில் சிலர் அரசபடைகளிடம் சரணடைந்ததாகவும் அவர்கள் மிகுந்த மனிதாபிமானத்துடன் மக்களை நடாத்துவதாகவும் தெரிவித்தது. ஆனால் வசந்தனுடன் இருந்தவர்களில் யாரும் அதனை நம்பத்தயாராக இல்லை. அதற்கிடையில் உமையாள்புரத்தில் அரசபடையிடம் சரணடையச் சென்ற மக்கள்மீது சரமாரியான துப்பாக்கிச் சூடுகள் நடாத்தப்பட்டன. அதற்குப் பொறுப்பானவர்கள் பற்றி வானொலி ஒரு விதமாகவும் மக்கள் வேறுவிதமாகவும் கதைத்துக் கொண்டனர். வசந்தன் எதனையும் நூறுவீதம் நம்பும் மனநிலையில் இல்லை.. அண்ணன் உடல்சிதறியதே மனக்கண்ணில் நின்றது.

முறிகண்டியில் இருந்து இடம் பெயரும் போது சாப்பாட்டிற்குத் தேவையான அளவு அரிசி.பருப்பு போன்ற உணவுப் பொருட்களுடனும் பணத்துடனுமே புறப்பட்டனர். ஆனால் இப் பொழுது முள்ளிவாய்க்காலுக்கு வரும்பொழுது பழைய சூட்கேசுடனே புறப்பட்டவன் அதனையும் மனைவியையும் தொலைத்துவிட்டு குழந்தையுடன் மட்டுமே வந்து நிற்கின்றான்.

முப்பதுவருடக் கனவுகள் எல்லாம் சுக்குநூறாக, வெறும் சக்கைகளாக மணல் வெளியில் மேய்ப்பரில்லா மந்தைகளாகச் சனக்கூட்டம் எந்தப்பக்கம் போவது என்று தெரியாமல் முன்னுக்குப் போபவர் வழியில் நகர்ந்து கொண்டு இருக்கின்றனர். குறுக்கே நந்திக்கடல் அதனைத்தாண்ட முடியாமல் முள்வேலி, கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. இன்னொருபுறம் மண்மேடு போடப்பட்டு பட்டி அடைக்கப்பட்ட விலங்குகளிலும் கேவலமாய் சாப்பாட்டிற்கும் வழியின்றி, கிடைக்கின்ற அரிசியை ஆக்கி, புளியம் இலையுடன் பருப்பினை அவித்து எத்தனை நாட்களுக்கு வயிற்றினை அணாப்புவது.

தமது உயிரைப் பணயம் வைத்து இளைஞர்கள் கைவிடப்பட்ட உணவுக் களஞ்சியங்களில் புகுந்து, ஆப்பிட்டவற்றைத் தூக்கிவந்து பணத்திற்கு விற்பதன் மூலம் ஓரளவு சாப்பாடுகிடைத்தது. அந்த ஏழை இளைஞர்கள் ரேடியோ, ரீ.வி, ஆட்டோ என எதனையும் சொந்தமாக வாங்கும் அளவுக்குப் பணவசதிபடைத்தவர்கள் இல்லை. இப்போது அவற்றுக்குப் பெரிய மதிப்பு இல்லை. உணவுப் பொருட்களுக்கே

மதிப்பு அதிகம். எனவே ஒரு பால்மாப் பைக்கற்றுக்கு ரீ.வி. ஒன்றும், தேங்காய் மூன்றுக்கு ஒரு ஆட்டோவும் என்றவகையில் பண்டமாற்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு ஆசைப்பட்டுக் கைவிட்ட பிரதேசத்துக்குள்ளே இரவில் புகுந்து கண்ணிவெடியில் சிக்கியவர்களும் துப்பாக்கிச்சூட்டிற்கு ஆளானோரும் பரிதாபத்திலும் பரிதாபமே! இங்கு அனைத்து விதமான பிரச்சனையையும் விட வயிற்றுப் பிரச்சனையே பிரதானமாகப் பெரும்பாலான மக்களுக்கு இருக்கின்றது. அதனை யாரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

சீழ்பிடித்த புண்ணினைச் சுகமாக்க வேண்டுமாயின் குத்திய முள்ளினை முதலில் எடுக்கவேண்டும். அதுவே சீழ்பிடிக்கக் காரணம். ஆனால் அதனை விட்டுவிட்டு சீழைத்துடைத்து மணக்காமல் புனுகு பூசுபவர்கள் பற்றி என்னதான் சொல்வது. அப்படியே மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் எங்கோ இருக்க யார் யாருடையதோ கௌரவத்திற்கும் அதிகாரத்திற்குமாக மக்கள் பலியிடப்பட்டவாறே இன்றும் தொடர்கின்றது.

அரச படைகளிடம் போவதற்குத் தடையாக இருந்த மண் அணை தகர்க்கப்பட்டபோது, துப்பாக்கிச்சூடும் கோடரி வெட்டுக் களும் மக்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டன. யாரை இவ்வளவு காலமும் இரட்சகராகவும் மீட்பராகவும் நம்பினார்களோ அந்த இரட்சகர் அசரீரியால், அதிர்ந்து நிலைகுலைந்து போயினர்.

வயல் வரம்புகளிலும் தோட்டங்களிலும் ஊர்ந்து கொண் டிருக்கும் கடியெறும்புகள், வெள்ளப் பெருக்கு வரும்போது தம்மைக் காப்பாற்றிக் கொள்ள, அவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து பந்துபோலத்திரண்டு, நீரின்மேல் மிதந்து கரைசேர்ந்துவிடும். அந்த எறும்புகளின் முயற்சியினைப் பின்பற்றித் தம்மை மீட்டுக்கொள்ள, ஒன்றுபட்ட மக்களோடு மக்களாக வசந்தனும் தனது குழந்தையோடு நந்திக்கடலில் நீந்திக்கொண்டிருந்தான்.

***2009.10.18.***

# கனகலிங்கம்

பழைய கண்டி வீதியின் இருமருங்கும் வீரை, சமண்டலை, முதிரை, பாலை மரங்கள் நிரைகட்டி நின்று, நிழலாட்சி புரிந்துகொண்டிருந்தன. இராமநாதபுரம் பிரதான வீதியிலிருந்து பழைய கண்டி வீதியில் பத்துப் பதினைந்து நிமிட நடைதூரத்தில் உப தபாற்கந்தோருக்கு முன்னதாக இராமநாதபுரம் மகா வித்தியாலயம் எழிலுறக் கொலுவிருந்தது. பாடசாலை முன்றலில் முதிரை, வேம்பு, பலா மரங்கள் ஓங்கிவளர்ந்து ஆடிமாத வெய்யிலுக்குக் குடையாய் நின்றன. 'டானா' வடிவில் பாடசாலையின் பிரதான கட்டிடங்கள் அமைந்திருந்தன. முன்பக்கக் கேற்றினை அடுத்து அலுவலகமும் அதற்கடுத்து வகுப்பறைகளும், பலாமரத்துக்கு நேரே உள்ள கட்டிடத்தின் தொங்கற்பகுதியில் மேடை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. மேடைக்கும் ஓட்டுக்கூரைக்கும் கையால் எட்டித்தொடும் உயரமே இருந்தது. மேடையில் ஏழாம் வகுப்பு இருந்தது.

"சேர், அப்பிடியே கீழை இருங்கோ"

கனகலிங்கத்தின் குரல் ஓங்கி ஒலித்தது. நான் திகைத்துப்போனேன். மாணவர்களின் முகங்களைப் பார்த்தேன், எல்லோரும் திகைத்துப் போய், மீண்டும் கனகலிங்கத்தின் குரல் மிகக்கண்டிப்பாக கட்டளை இடுவதுபோல் இருந்தது. சிந்திக்க நேரமில்லை, உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தேன். மேசைக்கு மேலால் ஒரு மாணவன் தாவிப்பாய்ந்து வந்ததும், அதே வேகத்தில் தாவி ஓடியதும் மட்டும் கேட்கக்கூடியதாக இருந்தது.

சில வினாடிகளின்....... பின் குனிந்தபடி சற்றுத்தூரம் முன்னுக்கு வந்து நிமிர்ந்து பார்க்கின்றேன். எல்லா மாணவர்களும் வகுப்பறைக்கு வெளியே பாடசாலை முன்றலைப் பார்க்கின்றனர். கனகலிங்கம் மிகவேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றான். பக்கத்து வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் ஆச்சரியத்துடன் அவனைப் பார்க்கின்றனர்.

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. சில கணங்களில் என்னைச் சுதாகரித்துக் கொண்டு வகுப்பறைக்கு வெளியே ஓடிவருகின்றேன். என்ன ஆச்சரியம் கயிறுபோல் எதோ ஒன்றை மிகவேகமாகச் சுற்றி மேலே வீசுகின்றான். பலாமரத்தின் உச்சிக்கு மேலே போய், கீழே தொப்பென்று விழுகின்றது. சுமார் மூன்று அடிக்கு மேல் நீளமான செட்டிநாக பாம்பு ஒன்று மயங்கிக்கிடக்கிறது. தனது ஆசிரியரின் உயிரைக் காப்பாற்றி வீரச்சாகசம் புரிந்த கனகலிங்கம் மிகச்சாதாரணமாக என்னைப் பார்த்து அப்பாவித்

www.padippakam.com

தனமாய்ச் சிரித்துக்கொண்டு நிற்கின்றான்.

எனது உணர்ச்சிப் பெருக்கினை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. கனகலிங்கத்தினை ஆரத்தழுவி எனது நன்றியினையும் அன்பினையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நடந்தவை யாவும் சினிமாப்படங்களில் வரும் மயிர்க்கூச் செறியும் காட்சிபோல் இரண்டு மூன்று நிமிடங்களில் நடந்து முடிந்துவிட்டன. நினைக்கும் போது தலைசுற்றியது.

மேடையின் வடகிழக்கு மூலையில் கரும்பலகை வைக்கப் பட்டிருந்தது. அதில் எழுதிவிட்டுத் திரும்பி நின்று மாணவர்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் பொழுதுதான் சம்பவம் நடந்தது. மூலை ஓட்டுக்கால் வந்த பாம்பு, கரும்பலகை ஸ்ராண்டில் படமெடுத்தபடி எனது தலையைக் குறிபார்த்துக் கொண்டிருந்தது. அப்போதுதான் கனகலிங்கம் சமயோசிதமான வீரச்செயலை, தனது உயிரைப் பணயம் வைத்துச் செய்துவிட்டு, எதுவும் அறியாதவன் போல், எவ்வித கர்வமும் இல்லாமல் மிகச்சாதாரணமாக நின்றுகொண்டிருக்கின்றான்.

"சேர்! இவன்தான் வகுப்பறையைவிட்டுக் களவாய் ஓடினவன் சேர்."

நாலைந்து மாணவர்கள் ஒரு மாணவனை இழுத்துவந்து எனக்கு முன் நிறுத்தினர். பாடசாலை நண்பன் நவரத்தினம் ஜேர்மனியில் இருந்து அனுப்பிய கடிதத்தில் மூழ்கியிருந்த எனக்கு இவர்களின் செயல் எரிச்சலை ஊட்டியது. இருப்பினும் பாடசாலைச் சம்பிரதாயப்படி முதன்முதலாக எனக்கு வந்த வழக்கு இதுதான். இங்கே வரும் வழக்கினை விசாரிப்பதும் தண்டனை அல்லது மன்னிப்பு வழங்குவதும் ஆசிரியரையே சாரும். சற்றுச் சிக்கலானதை மட்டும் அதிபரிடம் அனுப்ப வேண்டும்.

ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு தமிழ், சமூகக்கல்வி, சுகாதாரம் என்று மூன்று பாடங்கள் எடுப்பதோடு, வகுப்பாசிரியரும் நான்தான். ஆசிரிய நியமனம் கிடைத்து முதலாவதாகச் சேவையாற்றும் பாடசாலையும் வகுப்பும் இதுதான். மாணவர்கள் புதுவாத்தியார் என்றுதான் அழைப்பார்கள். சிலர்மட்டும் பெயருடன் சேர் என்பதையும் சேர்த்துச் சொல்வதைக் கேட்டிருக்கின்றேன்.

கட்டையாக வெட்டப்பட்ட முடிகள் எண்ணையில் ஊறி ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கோரைப்புற்கள் போற்கிடந்தன. உருண்டைத் தலை. எதையும் அலட்சியமாகப் பார்க்கும், ஆனால் தீட்சண்யமான கண்கள். கருநீல விழிகளில்



படிப்பகம்

www.padippakam.com

ஒருவிதமான காந்தசக்தி ஒளிந்திருப்பது தெரிந்தது. வெள்ளைச் சேட் நீலக்காற்சட்டை போட்டிருந்தாலும் அவற்றின் நிறம் இப்போது அதுமாதிரி என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவுக்கு அழுக்கடைந்திருந்தன. கிரவல்புழுதி படிந்த வெறுங்கால்கள். மற்றைய மாணவர்களைவிட வயதில் கூடியவனாகவும் திடகாத்திரமானவனாயும் சற்று நெட்டையாகவும் இருந்தான்.

மிகவும் மரியாதையுடன் கைகட்டி அடக்க ஒடுக்கமாக நின்றிருப்பான் என்று நீங்கள் நினைத்தால் மிகமிகத்தவறு. கால்களை உறுதியுடன் மிதித்து நிமிர்ந்து கைகளைக் காற்சட்டைப் பொக்கற்றில் வைத்தபடி, என்ன செய்யப்போறீங்க என்றமாதிரி நின்றுகொண்டிருந்தான்.

“சேர் இவன் இப்பிடித்தான், யாருக்கும் அடங்கமாட்டான், நல்ல அடி குடுங்கோ சேர்.”

அவனை இழுத்துவந்த மாணவர்களே தீர்ப்பினையும் வழங்கி, தண்டனை மட்டும் வழங்கும் வேலையை எனக்கு உத்தரவிடுவது போல் இருந்தது. எனது எரிச்சல் இப்போது இம் மாணவர்கள் மேல் வந்தது.

“ நீ கனகலிங்கம்தானே? “ நான் அவனைப் பார்த்துக் கேட்கின்றேன். அவனுக்கு ஆச்சரியம்! அனேகமாக ஆசிரியர்கள் ‘தடியன்’ என்றுதான் அழைப்பார்கள். நான் அவனது பெயரைத் தெரிந்துவைத்திருப்பது, அதுவும் புதிதாக வந்து ஒரு வாரமும் ஆகாத வாத்தியார் தன்னைப் பெயர் சொல்லியது, அவனை வலுவாகத் தாக்கியிருக்கவேண்டும்.

“ஓம் சேர்”

காற்சட்டைப் பொக்கற்றில் இருந்து கைகள் தானாகவே வெளியில்வந்து பவ்வியமாக நின்றுகொண்டு ஒரு விதமான சினேகப் பார்வையினை என்மீது செலுத்தினான்.

அவனது பெயரைத் தெரிந்து வைத்திருந்து, சொன்ன ஒரே காரணத்திற்காக என்மீது மரியாதை செலுத்த அவன் முன்வந்திருப்பது என்னைச் சிந்திக்க வைத்தது. தண்டனை வழங்குவதைப் பார்த்து ரசிப்பதற்காகத் துடித்துக் கொண்டிருந்த மாணவர்களை அனுப்பிவிட்டு, கனகலிங்கத்தை நிமிர்ந்து பார்க்கின்றேன். அவனது பார்வை மேசைமீது வைத்திருந்த காட்டுநெல்லிப் பிரம்புகளின் மீதே பதிந்திருந்தது. அவற்றின்



படிப்பகம்

மூலம் விழும் அடிகளைத் தாங்குவதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தான்.

தண்டனை என்பது தவறினைத் திருத்திக்கொள்வதற்கு, அல்லது அதனை உணரச்செய்வதற்காகவே வழங்கப்படவேண்டும். அல்லாமல் அவை பழிதீர்ப்பதற்கோ வஞ்சம் கொள்வதற்கோ வழிகோலுவதாக இருக்கக்கூடாது என்பதில் நான் மிகக் கவனமாக இருந்தேன்.

"சரி நீர் போகலாம்."

எனது பதிலைக்கேட்டு, அவன் அதை நம்பமறுத்துத் தயங்கியபடி நின்றுகொண்டிருந்தான். இடைவேளை முடிந்ததிற்கான மணியும் ஒலித்துக் கொண்டிருந்தது. அடுத்தபாடத்திற்காக எட்டாம் வகுப்பு மொனிற்றர் என்னிடம் வந்துகொண்டிருந்தான்.

பாடசாலை முடிந்து கையொப்பம் இட்டபின் சைக்கிளை எடுப்பதற்காக செல்கின்றேன். எனது சைக்கிள் அருகில் கனகலிங்கம் நின்றுகொண்டிருந்தான். எனக்கு ஒரே வியப்பு. "என்ன கனகலிங்கம் யாராவது அடித்துவிட்டார்களா?" நான் வியப்புடன் வினவுகின்றேன். " இல்லை.... சேர்..." தயங்கித் தயங்கி வார்த்தைகள் பணிவுடன் வருகின்றன. அவனது நிற்கும் நிலை பணிவினை எனக்கு உணர்த்தியது. அவனே சொல்லட்டும் என்று பார்த்துக்கொண்டு நின்றேன்.

"சேர் நான் வகுப்பறையை விட்டுக் களவாய்ப் போனது, ஏன் என்று நீங்கள் கேட்கவில்லையே?"

கனகலிங்கம் வகுப்பறையை விட்டுப் போனதற்கான காரணத்தைச் சொல்ல முற்படுகின்றானோ? தனது தரப்பு நியாயத்தினை நான் கேட்கவில்லை என்று என்மீது குற்றம் சுமத்துகின்றானோ? அல்லது தனது நிலமையினை எனக்கு விளக்க முற்படுகின்றானோ? என்பது சற்றுக் குழப்பமாக இருந்தது. இருப்பினும் பொறுமையுடன் அவனைப் பார்க்கின்றேன்.

"சரி இப்ப சொல்லும்"

"சேர், நான் பாடசாலை விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள பற்றையில் முயலுக்கு தடம் வைக்கிறனான் சேர். இடைவேளை நேரத்திற்கு முன்னுக்குப் போறவை பிடிபட்ட முயலைத் திருடிப்போடுவாங்கள் சேர்.

அதுதான் நான் இடைவேளைக்கு முந்திப்போய்ப் பிடிபட்ட முயலை எடுத்துப் பக்கத்து வீட்டிலை வைச்சிட்டு வாறனான். அதை விற்றுத்தான் எங்கடை வீட்டிலை ஒருநேரச் சாப்பாடு கிடைக்கிது." தனது இயலாமை யினையும் குடும்பத்தின் வறுமை நிலையினையும் கண்ணீர்மல்கக் கூறி முடிக்கின்றான்.

காலையில் நிமிர்ந்து நின்றவன் இப்போது ஏதோ அவமானச் செயலைச் செய்ததுபோல் கூனிக்குறுகி நிற்கின்றான். எனது பார்வையில் அவன் உயர்ந்து நிற்கின்றான். இச்சின்ன வயதிலும் குடும்பப்பாரத்தினை ஏற்கமுன்வந்து விட்டானே என்று வியக்கச்செய்கிறது. அவனது முதுகினைத் தட்டிக்கொடுத்து, "இனிமேல் போகும்போது சேர் கூப்பிடுகிறார் என்று சொல்லிவிட்டுப் போ." என்று ஒரு சலுகையினை அவனுக்காக வழங்கிவிட்டு, ஒரு மாணவனது உள்ளத்தை வென்ற திருப்தியுடன் வீடு செல்கின்றேன்.

கனகலிங்கம் அந்தக் கிராமத்தின் வறுமைப்பட்ட கூலி விவசாயக் குடும்பத்தின் ஒரு உறுப்பினர். தகப்பன் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கயையாகிவிட்டார். இரண்டு அக்காமாரும் ஒரு தங்கையும் இரண்டு அண்ணன்மாரும் உண்டு. அம்மாதான் வயலில், தோட்டத்தில் கூலி வேலைசெய்து குடும்பச் சக்கரத்தை உருட்டிக்கொண்டு வருகின்றார் என்று சொல்ல வேண்டும். அண்ணன்மார் தமக்கு விருப்பமானவர்களைத் திருமணம்செய்து வீட்டைப்பார்க்காமற் போய்விட்டபின், குடும்பத்தின் நிலைமை மேலும் மோசமாகி விட்டது. அதனாற்தான் கனகலிங்கம் பாடசாலையில் முயலுக்குப் பொறிவைப்பதும் வேட்டைக்குப் போவதும் என்று தமது குடும்பத்திற்காக உழைத்துக்கொண்டிருக்கின்றான்.

தனது குடும்பநிலைகாரணமாக பாடசாலைக்கு ஒழுங்காக வருவதில்லை. பாடசாலையில் கொடுக்கும் வீட்டுவேலை, படிப்பு எல்லாவற்றிலும் ஒழுங்கில்லாமல் ஆசிரியர்களின் பிரம்படியைக் குத்தகைக்கு வாங்கிக்கொண்டிருந்தான். உளவியலடிப்படையில் மாணவர்களின் விருப்பு வெறுப்புக்கள், குடும்பப்பின்னணி என்பவற்றிற்கேற்பக் கற்றல் செயற்பாடு நடைபெறவேண்டும் என்று எவ்வளவோ படித்த போதிலும், பெரும்பாலான ஆசிரியர்களுக்குத் தெரிந்த ஒரே தாரகமந்திரம் 'அடியாத மாடு படியாது, அடி உதவுமாப் போல அண்ணன் தம்பி உதவாது' என்பதாகவே இருந்தது.

ஒருநாள் பாடசாலை விட்டபின்பு வீட்டுக்குப் போகும் வழியில் நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காக போய்க்கொண்டிருக்கும் போது, சையிக்கிள் செயின் கழன்றுவிட்டது. சைக்கிளை விட்டு இறங்கி செயினைச்

சரிசெய்வதற்காக அருகில் உள்ள பற்றையில் ஒரு தடியினை முறித்தெடுக்கின்றேன். அவ்விடம் ஒரு ஆற்றுப்பள்ளம். பற்றைக்குள் ஏதோ சரசரக்கும் சத்தம்கேட்டது. கூர்ந்து பார்த்தேன் இரண்டு வேட்டை நாய்கள் குரைத்துக் கொண்டுவந்தன. நாய்களைத் தனது கட்டுப்பாட்டில் நிறுத்தி ஒரு உருவம் வந்தது. என்னால் நம்ப முடியவில்லை. அது கனகலிங்கம்.

பெரிய உடும்பு ஒன்று வேட்டைக்கட்டுக் கட்டப்பட்டு கையில் தொங்கிக் கொண்டிருந்தது. எதிர்பாராமல் என்னைக் கண்ட அதிர்ச்சியில் "சேர்...." அதற்குமேல் வார்த்தை வராமல் திக்கிநின்றான். அவனது தர்மசங்கடமான நிலைமை எனக்குக் கவலை அளிப்பதாகவே இருந்தது.

" நீ எப்பிடி இந்த உடும்பைப் பிடித்தாய்? "

"பாடசாலைக்குக் கள்ளமடித்து வேட்டையா? நாளைக்கு வாரும் பார்க்கிறன்" என்ற ஆசிரியத்தனமான மிரட்டலை எதிர்பார்த்தவனுக்கு, எனது கேள்வி ஆச்சரியமளித்திருக்க வேண்டும், வியப்புடன் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். அன்றுதான் நான் கேளாமலே தனது குடும்ப நிலமைபற்றி என்னிடம் சொல்லி, "நான் வேறு என்னதான் சேர் செய்வது" என்று கண்ணீர் மல்க நின்றான்.

என்னால் சமாதானம் சொல்ல மட்டுமே அப்பொழுது முடிந்தது. அவன் கஷ்டப்பட்டு வேட்டையாடும் பிராணிகளை அறாவிலைக்கே விற்கின்றான் என்பதையும் அறிந்துகொண்டேன்.

பாடசாலை விடுதியில் எனது ஆசிரிய நண்பர்கள் தங்கி இருந்தமையால் மாலை நேரங்களில் சில தினங்கள் வந்துபோவதுண்டு. ஒரு நாள் கனகலிங்கத்தை அழைத்து மாலை நேரத்தில் நீ பாடசாலை விடுதியில் வந்து படிக்கின்றாயா? " என்று கேட்டேன். உடனே பதில் சொல்ல முடியாமல் தயங்கி நின்றான். அவனது தயக்கத்திற்கான காரணத்தினை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது."நீ காசு கொடுக்கத் தேவையில்லை, ஒரேயடியாக ரியூசன் எண்டும் நினைக்கவேண்டாம். உனது சந்தேகங்களைக் கேட்டுத் தீர்த்துக்கொண்டால் போதும்." என விளக்கம் அளித்தபோது, எவ்வித மறுப்பும் இன்றிச் சம்மதம் தெரிவித்துக் கொண்டான்.

மாலை நேரங்களில் தமிழ், சமூகக்கல்வி, பொது விடயங்கள் என்று கனகலிங்கம் கிரகிக்கும் அளவுக்கு கலந்துரையாடல்கள் அவ்வப்போது நடைபெற ஆரம்பித்து, எனது நண்பர்களின் பிரியத்திற்கும் உரியவனாகி

விட்ட கனகலிங்கம் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் எனப் பாடங்கள் விரிவடைந்தன. இப்பொழுது ஆசிரிய நண்பர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சிஷ்யனாகி அனேகமாக குருகுல வாசியாகிவிட்டான்.

இந்தப் பாடசாலைக்கு முதல் நியமனம் பெற்றுவந்து முதல் வாரத்திலேயே அறிமுகமான கனகலிங்கம் ஒரு வருடமாகிவிட்ட காலகட்டத்தில் எனது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய, ஆனால் பாடசாலையில் முரட்டுத்தனமான மாணவன்.

கனகலிங்கத்தைப் பொறுத்தவரை அவனையும் ஏனைய மாணவர்கள் போல் மதித்த முதல் ஆசிரியர், அடுத்து அவன் மீது அக்கறைகொண்ட ஆசிரியர், தனது கல்விப்புலத்தில் காலடி எடுத்துவைக்க வழிகாட்டிய ஆசிரியர் என்ற வகையில் மிகுந்த மரியாதையும் பக்தியும் கொண்டிருந்தான் என்றுதான் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் இன்று தனது உயிரைப் பணயம்வைத்து.... நினைக்கவே மீண்டும் நெஞ்சு பட படக்கத் தொடங்கிவிட்டது. ஆசிரிய நண்பன் மகேந்திரம்தான் என்னை ஆசுவாசுப்படுத்திச் சகசநிலைக்குக் கொண்டுவந்தான்.

மாணவர்கள் என்போர் பட்டை தீட்டப்படாத வைரங்கள். ஆசிரியர்கள் பட்டை தீட்டுபவர்கள். அவர்களின் அன்பும் பொறுமையும் தொடர்ச்சியான வழிகாட்டுதலுமே ஒளிவீச வைக்கின்றன என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்துகொண்டேன்.

கனகலிங்கம் தனது குருதட்சணையைக் கொடுத்துவிட்டான். ஆனால் குரு ஆகிய நான் அவனுக்குச் செய்தது என்ன? கனகலிங்கம் போன்ற எத்தனை மாணவர்கள் கண்டுகொள்ளப்படாமல் குப்பையில் குண்டுமணியாக ஒளிமங்கிக் கிடக்கலாம்! என் அடிமனதை வருடிக்கொண்டிருக்கும் கனகலிங்கம் எனக்கு என்றும் ' கனக லிங்கமே '.

ஓலை 2009

***( கதைக்கான களம் - 1979 )***

# தபால்

"தம்பி மோகன், உன்ரை பக்கத்தில நூறுவீதம் நியாயம் இருக்கு. ஆனால் தாங்கள் செய்தது பிழை எண்டு ஒத்துக்கொண்டு, மன்னிப்புக் கேட்கேக்க மன்னிக்கிறதுதானே மனிதப் பண்பில் உயர்ந்தது."

சந்திரமோகனின் தகப்பனார் மோகனிடம் இவ்வார்த்தைகளை மூச்சு விடமால் கூறிவிட்டு, மெல்ல மூச்சினை இழுத்து விட்டவாறு தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டார்.

தகப்பானார் எடுத்துரைத்த நியாயத்தின் தார்மீகத்தினை முற்று முழுதாக அவனால் புறம்தள்ள முடியவில்லை, இருப்பினும் அவர்கள் நாடகம் ஆடுகின்றார்கள் இப்படியே விட்டால் சரிவராது. ஒரு பாடம் படிப்பிக்கத்தான் வேண்டும் என மனதுக்குள் கறுவிக்கொள்கின்றான். ஆனால் எதனையும் வாய்திறந்து பேசாமல் வெறித்துப்பார்த்தபடி மௌனமாக நிற்கின்றான்.

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் நாலாம் கட்டைச் சந்தியில் இருந்து வடக்கே உள்ளுக்குள்ள கிரவல் வீதியில் மூன்று கிலோமீற்றர் தூரம் சென்றால் வரும் கிராமங்கள்தான் வெளிக்கண்டல், உடுப்பாற்றுக்கண்டல். இக் கிராமங்களின் பிரதான போக்குவரத்துக்கு ஏற்ற இடமாக இருப்பது முரசுமோட்டை. அங்குதான் பரந்தன், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போவதற்கு பஸ் ஏறச் செல்ல வேண்டும். அத்துடன் சந்தை, கடைச்சந்திக்கும் அங்குதான் போகவேண்டும். அங்கு ஒரு உப தபாலகமும் உண்டு. கிட்டத்தட்ட முரசுமோட்டைக்குச் செல்ல வேண்டிய தூரத்தில் கண்டாவளை இருக்கிறது. அது இக்கிராமங்களின் கிழக்குப் பக்கத்தில் இருக்கிறது. கண்டாவளையை அடைய வேண்டுமாயின் இரணைமடுக்குளத்தில் ஊற்றெடுக்கும் பேராறு ஓடிக் கொண்டிருக்கிறது. அதனைக் கடக்கவேண்டும். மாரிகாலத்தில் அனேகமாக இரண்டு மாதமும் ஆறு பெருக்கெடுத்தோடும். ஆற்றினைக் கடக்க முடியாது. குறுக்கே மரப்பாலம் கூட இல்லை. அத்துடன் வீதி என்பது பேருக்கே இருக்கிறது. அங்கு கிராம மக்கள் போவதும் அபூர்வம்.

இரண்டு கிராமங்களும் நெற்செய்கையை நம்பியே இருக்கின்றன. பத்து பதினைந்து வீதமான வயலிலேயே சிறுபோக நெற்செய்கையும், அதையும் விடக் குறைந்த நிலத்திலேயே தோட்டமும் செய்கை பண்ணப்படும். மாரிகாலத்தில் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படும். வீதியில் நாற்றுநடும் பருவத்தில் சேறாடப்பட்டிருக்கும். கோடைகாலத்தில்

மெசின்போன பாதைகள் பதிந்து பள்ளமும் மேடுமாக, வேறு வாகனம் போகமுடியாமல் இருக்கும். இத்தகைய நிலையில் கண்டாவளையில் உள்ள உப தபாற்கந்தோர் தான் இக் கிராமங்களுக்குரிய தபாலகமாக்கப் பட்டிருந்த தோடு, இரண்டு கிராமத்திற்குமென ஒரு தபாற்காரனும் நியமிக்கப்பட்டு, மாதா மாதம் ஊதியம் வழங்கப்படுகின்றது.

இரண்டு கிராமங்களையும் சேர்த்து நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்கள் முப்பதுக்கும் குறைவு என்றே சொல்ல வேண்டும். அதிகம் தபால் போக்குவரத்துள்ள வீடுகள் பத்துப் பதினைந்தே. அதிகபட்சமாக ஐந்து ஆறு வீடுகளுக்கே வாரத்துக்கு ஒருமுறையாவது தபால் வரும். பொருளாதார ரீதியிலும் படிப்பிலும் அக்கிராமங்கள் பின்தங்கி இருந்தமையைப் பயன்படுத்தி, உப தபாலகத்தில் நீண்ட நாட்களாகவே ஊழல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டு கிராமத்திற்கும் உரிய தபாற்காரன் வேலைக்குப் போவதில்லை. வயல், தோட்டவேலையில் ஈடுபடுகின்றான். ஆனால் மாதம் முடிய சம்பளத்துக்குச் சென்று, எல்லா நாட்களுக்கும் கையொப்பம் இட்டு, சம்பளத்தில் பாதியை உப தபாலதிபருக்குப் பங்காகக் கொடுப்பதே அதுவாகும். அன்றைய தினமே வந்திருக்கும் கடிதப்பொதிகள் எல்லா வற்றினையும் மொத்தமாக எடுத்துவரும் போதே கள்ளுத்தவறணை யில் மப்பேத்தியவாறே சயிக்கிளில் வருவான். வழியில் ஆப்பிடும் ஒருவரிடம் அவ்வளவையும் கொடுத்துவிட்டுப் போய்விடுவான். மேற்கொண்டு பொதியினைப் பெற்றவர் கருணை கூர்ந்தால்தான் உரியவர்களுக்குக் கிடைக்கும். அதிலும் ஏச்சுவேறு, ஊர்வேலை பார்ப்பதாகப் பீற்றிக் கொள்வர்.

தபால் விநியோகம் செய்வதில் மிகத்தாழ்நிலையில் உள்ள இக்கிராமத்தில் படித்து, கிளிநொச்சியில் உத்தியோகம் பார்ப்பவனே சந்திரமோகன். யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான பாடசாலையில் உயர்தரம் வரை கல்வி கற்றதோடு, அதிகம் நண்பர்களையும், இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டமையாலும் வாரம் முழுவதும் கடிதப் போக்குவரத்துத் தொடர்பாடல் அவனுக்கு உண்டு. அதிலும் விஷேடமாக வெளிவரும் இரண்டொரு சஞ்சிகைகளுக்கும் சந்தாப் பணம் கட்டி வருகின்றான். வெளிநாட்டுச் சஞ்சிகைகள் இரண்டும் கண்ணுக்குக் குளிர்ச்சியான வண்ணத்தில் நிறைய வர்ணப்படங்களும் இடம்பெறுவதால் தபாலகத்தில் அதனைக் கையாடுவதற்குப் போட்டி வேறு. அவை வரவில்லை என்று முறையிட்டால் அனுப்பாமல் விட்டதற்கு நாம் என்ன செய்ய என்று, காரமான எதிர்க்கேள்வி வேறு, ஒரு முறை இப்படி கடிதமும் சஞ்சிகையும் வரவில்லை என்று தபாலகத்தில் முறையிட்டு வரும் போது, தபாலதிபரின் சின்னமகனின் கரங்களில் அவனது சஞ்சிகையை முகவரி ஒட்டப்பட்ட

நிலையில் கண்டு விசாரித்த போது, ஒன்றும் செய்ய முடியாமல் ஒருவாறு மழுப்பி விட்டார்கள்.

அந்தக் கிராமத்தில் அவனைப்போல் இன்னும் சிலபேர் கடிதம் கிடைக்காமல் அவதிக்குள்ளான போதிலும் உரியவர்களிடம் சென்று முறையிடப் பயந்தே இருந்தனர். சிலர் இதனால் ஏன் சோலி என்று, பிரச்சனையைக்கண்டு ஒதுங்கிப்போகவே பழக்கப்பட்டவர்களாக இருந்தனர். இன்னும் ஒரு சிலர் முரசுமோட்டையில் உள்ள, தாம் சாமான்வாங்கும் கடை முகவரியைக் கொடுத்து, அதிலே கடிதத்தினைப் பெற்றுக் கொண்டனர். அந்த உத்தியையே சந்திரனுக்கும் ஊர்ப்பெரியவர் ஒருவர் போதனை செய்தார். அவர்மீது அனுதாபப்படுவதைத்தவிர அவனுக்கு வேறு என்ன செய்ய முடியும்.

நீண்ட நாட்கள் யோசனை செய்தபின் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். வவுனியாவில் உள்ள வலய தபால் அத்தியட்சருக்கு, தனது கிராமங்களின் தபால் சீர்கேட்டினை எடுத்துரைத்து, தபால் சேவையினை முரசுமோட்டை உப தபாலகத்திற்கு மாற்றித்தரும்படியும், அங்கிருந்து தபால் விநியோகிக்கப்படாவிட்டாலும் கிராமத்தவர்கள் ஒவ்வொருவரும் அங்கு செல்வதால் உப தபாலகத்திலே பெறமுடியும் எனவும் பணிவுடன் ஒரு விண்ணப்பத்தினை எழுதி, முதலில் கையொப்பம் இட்டு ஏனையோரிடமும் அதனைக் காட்டிக் கையொப்பம் கேட்ட பொழுது, 'பாம்பினை மிதித்தவர்கள் போல் ' குலை நடுங்கி நின்றனர்.

தங்களது இயலாமையையும், பாமரத்தனத்தினையும் தாழ்வு மனப்பான்மையாக்கி, மூட்டை மூட்டையாக் கட்டி முதுகு சுமக்க முடியாமல் தள்ளாடும் அவர்களை நினைக்கும்போது சந்திரனுக்குப் பரிதாபமே வந்தது. எழுதப்பட்டிருக்கும் முறையீட்டினால் கிடைக்கும் நன்மைபற்றி எடுத்துக் கூறியபோது, தம்மை முற்போக்குவாதிகளென்றும் துணிந்த வராகவும் காட்டிக் கொண்டவர்கள் பின்னடிக்க, சாதாரணமாகத் தம்மைப்பற்றிப் பெருமையடிக்காமல் இருந்தோர் தம்பி கொண்டுவாடா எங்கை கையெழுத்துப் போட வேணும் என்று கேட்டது ஆறுதல் அளிப்பதாகவே இருந்தது.

முறையீட்டு விண்ணப்பம் அனுப்பப்பட்டு இரண்டு மாதங்களில் அது வேலைசெய்யத் தொடங்கிவிட்டது என்பதை, தபாற்காரனின் பேச்சின் மூலம் புரிந்துகொண்டான். வவுனியா வலய அத்தியட்சகரின் விளக்கம் கோரலுக்கு மழுப்பலாகவே பதில் அனுப்பப்பட்டது. அதாவது

www.padippakam.com

முரசுமோட்டைக்கு மாற்ற அனுமதிக்க முடியாது எனவும் தம்மால் ஆற்றுப்பெருக்கு என்று ஒருபொழுதும் எழுதப்படவில்லை என்றும், சீராகத் தபால் விநியோகம் இடம் பெறுவதாகவும் பதில் இருந்தது. இதன் ஒரு பிரதி சந்திரனுக்கு அனுப்பப்பட்டிருந்தது. உடனடியாகவே ஆற்றுப்பெருக்கு என எழுதப்பட்ட கடித உறைகளை வீட்டிலும் மற்றையோர் வீடுகளிலும் தேடி எடுத்து, மேலும் அவர்கள் செய்யும் சீர்கேட்டினையும் எழுதி அனுப்பினான்.

அரச துறையில் மக்கள்பணியாற்றும் ஒரு சில அதிகாரிகள் இருக்கின்றார்கள் என்பதற்கு அந்த அதிகாரி நல்ல உதாரணமாகத் திகழ்ந்தார். அடுத்து உடனடியாகவே இரண்டு மூன்று பரீட்சார்த்த கடிதங்களை எவ்வித அதிகாரபூர்வமான இலச்சினையும் பொறிக்காமல் முத்திரை ஒட்டி அனுப்பி வைத்திருந்தார். முதல் கடிதத்துடன் சந்திரனுடைய முறைப்பாடு தூக்கி வீசப்பட்டு விட்டது என்ற துணிச்சலில் தபாற்காரன் தனது அடாவடித் தனத்தினை வெளிப்படையாகவே காட்டத் தொடங்கிவிட்டான். சந்திரன் வீட்டிற்கு 500 மீற்றர் தூரத்தில் உள்ள அவனது சித்தப்பா வீட்டில் அவனை ஏசி, கடிதத்தினை முற்றத்தில் தூக்கி வீசிவிட்டுப் போய்விட்டான். அதில் வேடிக்கை என்னவென்றால் பரீட்சார்த்தமாக எழுதப்பட்டு, ஒவ்வொரு வார இடைவெளியில் அனுப்பப்பட்ட மூன்று கடிதங்களுமே அப்படி வீசப்பட்டவை. மூன்று கடிதங்களும் கிடைத்த தினம், நேரம், கிடைத்த விதம்பற்றி மிக விபரமாகச் சாட்சிகளுடன் குறிப்பிட்டு உடன் அனுப்பிவைத்தான்.

வவுனியா வலய தபால் அத்தியட்சரால் அனுப்பப்பட்ட பரீட்சார்த்த கடிதம் தொடர்பான விசாரணையே நடைபெற உள்ளது. அதற்கான விசாரணைக் கடிதம் ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டன. கண்டாவளை உப தபாலதிபருக்கும் உரிய தபாற்காரனுக்கும் எதிராகவே விசாரணை முடிவு அமையும் என்பதால் அவர்கள் ஊர்ப்பெரியவர்கள் மூலம் சந்திரமோகனின் தகப்பனை அணுகி அனுதாபத்தினைப் பெற்றுவிட்டனர். அதன் பிரதிபலிப்பே இப்பொழுது வெளிப்படுத்தப் படுகின்றது.

சந்திரமோகனால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. விசாரணைக்குப் போவதா, இல்லையா? அடைவுவைத்த நகைகள் ஏலத்தில் விற்கப் படுவதற்கான எச்சரிக்கைக்கடிதம் வந்து கிடைக்காததால் சிவசம்பரின் நகைகள் ஏலத்தில் விலைபோனது, சண்முகத்தின் மகன் சீலனுக்கு வங்கியில் கிடைத்த வேலைக்கான நியமனக் கடிதம் கிடைக்காமல் பல வருடங்கள் ஒரு வேலைக்காகக் காத்திருந்தது...எனப் பல அநியாயங்கள் ஞாபகத்திற்கு வந்து, அவனை ஆத்திரமூட்டிக் கொண்டே இருந்தன. இப்படியே விட்டால்



படிப்பகம்

மீண்டும் கடிதங்களைக் கொடுக்காமல் எத்தனைபேர் பாதிக்கப்படுவார்கள். நாளை விசாரணை எப்படியும் இன்றைக்கே முடிவு எடுக்கவேண்டும் எனச் சிந்தித்தவாறு சைக்கிளை உருட்டியபடி வெளியே சென்றான்.

கண்டாவளை உப தபாலகத்தில் சைக்கிளை நிறுத்திவைக்கின்றான். உப தபாலதிபர் என்றும் இல்லாதவாறு பெருவரவேற்பினைச் செய்து இருப்பதற்குக் கதிரையும் இழுத்துப்போடுகின்றார். சந்திரன் நன்றி கூறிவிட்டு, "ஐயா எனக்கு உங்களோட தனிப்பட்ட கோபம் ஒன்றும் இல்லை. ஆனால் நாங்கள் மிகவும் பின்தங்கிய கிராமத்தவர்கள். எங்களுக்கு வரும் கடிதங்களை உரியநேரத்தில் ஒப்படைக்காமையால் எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களும் இல்லாமல் போகின்றன. இனிமேலாவது மக்கள் சேவையை மனதார இல்லாவிட்டாலும் கைநீட்டி வாங்கும் சம்பளத்திற்காவது செய்யுங்கோ." என்று குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டான். அதிகம் பேசாத மோகனுக்கு எப்படித்தான் இப்படிப் பேசமுடிந்ததோ என்பது ஆச்சரியம்தான்? தனது கிராமம் கல்வியின் மூலமே வளர்ச்சி காணமுடியும் எனத்திடமாக நம்பும் மோகனுக்கு தபால் சேவை முக்கியமாகப் பட்டதில் வியப்பில்லைத் தானே? எதனையும் முடிவெடுத்து விட்டால் பின்னர் மாற்றாதவன் மோகன். தபால் விடயத்தில் தகப்பனின் வார்த்தைக்கு மதிப்புக்கொடுத்து கட்டுப்பட்டது கிராமத்தவர்களுக்கு ஒரே ஆச்சரியமாகவே இருந்தது.

"அண்ணை இந்தவிடயம் என்னுடைய தனிப்பட்ட பிரச்சனை மட்டுமல்ல, எமது கிராமத்தின் பிரச்சனை. இப் பிரச்சினையால் கிராமம் மேலும் பாதிக்கக்கூடாது. தவறு செய்தவர்களே அதை ஒத்துக்கொண்டு, கடமையினைச் செய்ய முன்வரும்போது சந்தர்ப்பம் வழங்கத்தானே வேண்டும்." என்று, ஆச்சரியத்துடன் விசாரித்த மூர்த்தி அண்ணரிடம் தான் விசாரணைக்குப் போகாமல் விட்டதற்கான காரணத்தினை விளக்கினான் மோகன்.

சம்பவம் நடந்த அடுத்தவாரம் மோகனுக்கு வந்த கடிதத்தினை கிராமத்தவர் ஒருவர் தன்னிடம் தரும்படி கேட்டதற்குத் தபாற்காரன் கொடுக்கவே இல்லை. தானே நேரடியாகக் கொடுப்பதாகவும் இல்லா விட்டால் வேலையே போய்விடும் எனவும் கூறியதை மோகனிடம் அவர்கூறி, அவனது செயலினைப் பாராட்டினார். இரண்டு கிராமங்களுக்கும் கிரமமாக தபால் கிடைத்த வண்ணமே இருந்தன. அதனைப் பரிசோதிப்பதற்கு தனக்குத்தெரிந்த நண்பர்கள், பாடசாலைகளுக்குக் கிராமத்தவர்களின் முகவரியைக் கொடுத்து, விழா அழைப்புக் கடிதங்களை அனுப்பவைத்து, பரீட்சித்துப் பார்த்துக் கொண்டான். எப்படியும் வாரத்திற்கு மூன்று

கொண்டிருந்தன. ஆட்கள் அவசர அவசரமாக வருவதும் போவதுமாக இருந்தனர்.

காலை ஏழுமணியளவில் இருக்கலாம். காலைச் செங்கதிரோன் பாலைமரக் கிளைகளைத் தொடும் உயரத்திற்கு எழுந்துவிட்டான். அங்கே வரிசையாகப் பெட்டி இணைக்கப்பட்ட உழவு மெசின்கள் நிறுத்திவைக்கப் பட்டிருந்தன. மெசினைக் கொண்டுவந்த முதலாளிமாரும் மைனாபோன்ற ஆட்களைப் பிடித்துக்கொடுத்து, வேலைவாங்கும் கங்காணிமாரும் பேரம் பேசிக்கொண்டிருந்தனர். அந்தச் சத்தமே இரைச்சலாக இருந்தது. அதனோடு தமக்கு இன்று வேலைகிடைக்குமோ? அதுவும் திட்டாத முதலாளி கிடைப்பாரோ? என்று ஏங்கிக்கொண்டிருக்கும் கூலித்தொழிலாளிகளும், அவர்களது சிறுவர்களும், கைக்குழந்தைகளும் அவ்விடத்தில் நிரம்பி வழிந்து, ஏதோ கோயிற் திருவிழாபோற் காட்சியளித்தது.

குணசிங்கத்தாரின் மெசின் பரந்தன் முல்லைத்தீவு வீதியைவிட்டு, கிரவல் வீதியில் புழுதியைக் கிளப்பிக்கொண்டு போனது. சேற்றுக் கண்டியையும் தாண்டி பாம்புக் கமத்தடியில் நிறுத்தப்பட்டது. இரணைமடுக் குளத்திலிருந்து பாய்ந்தோடிவரும் வாய்க்கால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. வாய்க்காலைக் கடந்து கம்பி வேலியையும் கடந்தால் பச்சைப்பசேலென்று, குணசிங்கத்தாரின் பத்தேக்கர் நெல்வயல் காட்சியளித்தது. நெற்பயிர்கள் குருத்தெறிந்திருந்தன. வயலில் களைபிடுங்குவதே கங்காணி மைனாவின் ஆட்களது வேலையாக இருந்தது.

நேரம் எட்டுமணியைக் கடந்துகொண்டிருந்தது, இப்போது மைனா ஆட்களை விரைவுபடுத்திக் கொண்டிருந்தான். குறிப்பாகப் பெண்களை தனது விரசம் கலந்த வார்த்தைகளால் கொத்திக்குதறி அதிலே தனி இன்பம் கண்டுகொண்டான். அவர்களில் இரண்டொருவரைத் தவிர வேறுயாரும் அதனை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் என்ன செய்வது பிழைக்கவேண்டும் என்பதற்காகத் தமக்கிடையே புறுபுறுத்துக்கொண்டனர். முகத்தைச் சுழித்துக்கொண்டனர். ஆனால் சிலர் அவன் காதில் விழத்தக்க தாகவே ஏசிக்கொண்டனர். மைனாவோ அதனைக் கேட்காதவன் போல, ஆண்கள் பகுதியில் ஒவ்வொருவரையும் நிரைகட்டி நின்று, வேலையை ஆரம்பிக்க உசார்படுத்திக் கொண்டான்.

பத்துமணியை நேரம் நெருங்கிக் கொண்டிருக்கும் போது, மைனா தன்னை ஏசியவளை ஞாபகம்வைத்து அவளை அழைத்து, தேநீர் தயாரிக்கும் பொறுப்பினை ஒப்படைக்கின்றான். வேலியோரத்தில் புற்றுப்பிட்டியில் நிற்கும் பாலைமரத்தை நோக்கி அவள் போகின்றாள். பாலைமரக் கிளைகளில் சேலைகளினால் ஏணைகட்டிப் பச்சிளம் பாலகர்கள் தூங்கவைக்கப்

பட்டிருக்கின்றனர். தூரத்தில் இருந்து வேடிக்கை பார்ப்பவர்களுக்கு கண்ணுக்கு விருந்தான காட்சி. ஆனால் அக்கோலத்தின் பின்னால் உள்ள துயரம் எத்தனைபேருக்குப் புரியும்? இரண்டு மூன்றுவயதுச் சிறுவர்கள் காவலுக்கு இருக்கின்றனர். குழந்தைகள் நித்திரையால் எழுந்து அழுதால், ஏணையைப்பிடித்து ஆட்டிவிடுவார்கள். அவ்வளவுதான் அவர்கள் செய்யும் உதவி. தாய்மார் வேலைமுடிய வந்தே தமது பிள்ளைகளைப்பார்ப்பார்கள். பிரசவ விடுமுறை என்பது இவர்களுக்கு ஏது? வேலைசெய்தால்தானே அடுப்பெரியும். இல்லாவிட்டால் பிள்ளைகளின் வயிறல்லவா எரியும்.

பாலைமரத்தடியில் அடுப்பு மூட்டி, பானை நிறைய நீர் நிறைத்து, விறகுதேடிக் கொதிக்கவைக்கவேண்டும். காலையில் வரும்போது குணசிங்கத்தார் வாங்கிவந்த பாணை வெட்டி, தேநீருடன் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கவேண்டும். அவைசரியாக நடைபெறுகிறதா என்பதை மேற்பார்வை பார்க்கும்சாட்டில், காலையில் நடந்ததன் மீதியை மைனா தொடர்வான். கேட்பாரின்றி அந்தப்பெண் தனக்குள்ளேயே தன்னை நொந்துகொண்டாள். எல்லோரையும் போல் செவிடாக, எருமைபோல இருந்திருக்க வேண்டியதுதானே. பொல்லாத நேரம் வாயைக் கொடுத்து, இன்றைக்கு நிறையவே வாங்கிக்கட்டப் போவதை நினைந்து பெருமூச்சினை விடுவதைத் தவிர வேறுவழி அவளுக்குத் தெரியவில்லை. கூலியைக் குறைக்கும்படி குணசிங்கத்தாரிடம் மண்டியிட்டபோது கோபப்பட்ட இளைஞர்கள், பெண்கள் மீதான பாலியல் வன்மத்திற்கெதிராகக் கோபப்படக்கூட முடியாமை, அவர்களின் சமூக அமைப்பின்மீதே உள்ள பிரச்சனையாகும்.

குடைபிடித்தபடி சாரத்தை மடித்துக்கட்டிக்கொண்டு வரம்பில் நடந்துவந்த குணசிங்கத்தார் ஒரு சிறுவன் நெற்பயிரைப் பிடுங்கி, வரம்பில் போட்டதைக் கண்டுவிட்டார். அவரின் வாயிலிருந்து, நாரசமான வார்த்தைகள் ஷெல்லெனப் பொழிந்தன. பெரியவர்களே களையெடுக்கும் பேரால் பயிர் பிடுங்கும்போது, அந்தப் பிஞ்சுக்கு என்னதெரியும், வரம்பில் போட்ட நெற்பயிர் சுட்டெரிக்கும் வெய்யிலில் வாடியதுபோல, வசைமாரியில் மனம் வதங்கிச் சுருண்டுபோனது.

நெற்செய்கையில் களைகட்டும் பருவம் மிகவும் முக்கியமானது. நாற்றுக்கள் வளர்ந்து வரும் பருவத்திலேதான் பலவிதமான களைகளும் அவற்றினைவிட மிகவேகமாக வளர்ந்து நாற்றுக்களை வளரவிடாமல் தடுத்துவிடுகின்றன. களைகள் வளர்வதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், பயிர்களின் வளர்ச்சி தடைப்பட்டு, நராங்கிச் சிறுத்துவிடும். புல்மட்டுமே வளர்ந்து, உண்மையான நெற்பயிர்கள்போல் தோற்றம் காட்டும். மேற்போக்காகப் பார்ப்போர் கண்களுக்குப் பயிராகவே தென்படும், அவை

பயிர் இல்லை களைகள் என்றாலும் நம்பவே மாட்டார்கள். ஆனால் அனுபவமுள்ள விவசாயியோ, பார்த்தவுடனே களைகள் என்பதைப் புரிந்துகொள்வார். அனைத்து அம்சங்களிலும் நெல்போலவே ஒரு களையுள்ளது, அதனை நெற்சப்பி என்றே அழைப்பர். அதன் கதிர்கள்கூட நெற்கதிர்கள்போலவே இருக்கும். ஆனால் துறைபோன விவசாயிகள் அதனையும் சிறுபயிராக இருக்கும்பொழுது இனம் கண்டுகொள்வர்.

அனேகமானவர்கட்கு களைகள் பூக்கத் தொடங்கும் பொழுதுதான் உண்மையில் அவை பயிர்கள் இல்லை வெறும் களைகள் என்ற உண்மையினைத் தெரிந்துகொள்வர். அப்படியான சந்தர்ப்பத்தில் இனம் காண்பதால் எவ்வித பிரயோசனமும் நிகழப்போவதில்லை. உண்மையான நெற்பயிர்கள் அங்கு காணாமற் போயிருக்கும். களைகளின் காலடியில் நராங்கிப்போய் விவசாயிகளின் கண்ணிற் படுவதற்காகவே தவம்கிடக்கும். எனவேதான் களைகள் முற்றுவதற்கு முன்னே அவற்றினை வேரடி மண்ணுடன் பிடுங்கி எறியவேண்டும் என்பதற்காகவே, எல்லோரும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அனுபவம் வாய்ந்த விவசாயிகளே களைபிடுங்குவதில் தவறு விடும்போது, அந்தச் சின்னஞ்சிறிய பிஞ்சு, தவறுதலாய்ப் பிடுங்கிய பயிருக்காக குணசிங்கத்தார் குதியோ குதியென்று குதித்துக் கொண்டிருக்கின்றார். தேநீர் தயாரிக்கும் இடத்தில் நின்ற மைனா இதனைக் கண்டுவிட்டான். அவனுக்கு குணசிங்கத்தாரின் உள்நோக்கம் நன்றாகவே புரிந்துவிட்டது. தனது இருபத்தைந்து கூலியாட்களில் ஐந்துபேர் சிறுவர்கள். அவர்களுக்குக் கூலி கொடுக்காமல் விடுவதற்காகவே இப்படிச் சன்னதமாடுகின்றார் என்பதைப் புரிந்துகொண்டவனாய், அங்கே போகாமல் தன்பாட்டில் நின்றுவிட்டான்.

களைபிடுங்குவது என்பது இலேசான வேலை இல்லை. வேலை தொடங்கியதில் இருந்து தண்ணீருக்குள்ளேயே அதுவும் சேற்றுக்குள் நிற்கவேண்டும். கோரை, கோழிச்சூடன், அறுகு, முள்ளி என்பவையே பிடுங்குவதற்கு மிகவும் கஷ்டமான களைகளாகும். கோரைப் புற்கள் சற்று வளர்ந்துவிட்டால் நான்குபக்கமும் பிளேட்மாதிரி அதன்விளிம்புகளுடன் நீண்டு வளர்ந்திருக்கும். சிலவேளை இருவர்சேர்ந்தே இழுத்தெடுக்க வேண்டும். அந்தக் கஷ்டத்தில் சிறுவர்களும் பலவீனமானவர்களும் பூத்திருக்கும் பூவினை மட்டும் பறித்தெடுத்துவிட்டு, கோரைப்புல்லை காலால் மிதித்து சேற்றில் அமிழ்த்திவிடுவார்கள். அது அடுத்தநாளே முன்னரைவிடப் புஷ்டியாக நிமிர்ந்துநிற்கும். ஆனால் முள்ளிச்செடி வளர்ந்திருந்தால் ஒன்றும் செய்ய முடியாது. முள்ளுக்குத்தாமல் அதனைப்

www.padippakam.com

பக்குவமாகவும் பலமாகவும் பிடித்திழுக்கவேண்டும். கோழிச்சூடன் புல்லும் நான்கு ஐந்து ஒன்றாகத்திரண்டு பூக்கும் பருவத்தினை அடைந்துவிட்டால் மண்வெட்டி வேண்டும் அல்லது சேற்றுநிலமாயின் பலமான பாதங்கள் உள்ளவர்கள் தமது பாதங்களால் மிதித்து மிதித்துத் தனிமைப்படுத்தியே பிடுங்கவேண்டும். அறுகென்றால் சொல்லத் தேவையில்லை கைவிரல்களைப் போட்டே இழுக்கவேண்டும். விரல்கள் புண்ணாகாமல் தப்புவது அவரவர் அதிஷ்டமே. இவ்வளவு கஷ்டத்தினையும் தாங்கியே களைபிடுங்க வேண்டும். அதிலும் கங்காணியின் அதட்டல்வேறு,

"காலில வேர்பிடிச்சிட்டுதோ! நட்டகட்டைமாதிரி நிற்கிறியள்"

என்று கிண்டல் வார்த்தைவேறு, வெயிலென்றால் முதுகிலை நெருப்புக்கொள்ளியால் சுடுவதுபோல் எறிக்கும் மழை என்றால் குளிர்காற்றுடன் நாலுபுறமும் சுழன்றடிக்கும் அத்தனைக்கும் ஈடுகொடுத்து நின்றே வேலை செய்ய வேண்டும். வயல் வேலையிலே மிகவும் கஷ்டமான வேலைகளில் ஒன்றுதான் களைபிடுங்குதல்.

களைபிடுங்க வந்திருப்போர் எல்லோரும் தர்மபுரத்தைச் சேர்ந்தவர்கள். அந்தக் கிராமத்தில் உள்ளவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது வீதமானோரும் கூலித்தொழிலாளிகள் மட்டுமல்ல அன்றாடம் காய்ச்சிகளும்தான். இந்த மக்களின் கதை சோகத்திலும் இன்னொரு சோகம்.

மைனாவும் அவனது ஆட்களும் ஸ்ரீ குழப்பத்துடன் குடியேற்றப் பட்ட இடமே தர்மபுரமாகும். அன்றிலிருந்து அவர்கள் தர்மபுரவாசிகள். தென்னிலங்கைத் தோட்டங்களிலிருந்து விரட்டப் பட்டு அனுராதபுரம், பொலனறுவை என இடம்பெயர்ந்து, அங்கு கூலிவேலை செய்து, புழுவிலும் கேவலமாக நடாத்தப்பட்டு, உடலாலும், உள்ளத்தாலும் பாதிக்கப்பட்டே, தமிழர் எனும் இரத்த உறவினைத் தேடிவந்த மக்கள். வந்த இடத்தில் அவர்கள் கள்ளத்தோணிகள், வடக்கத்தையார் என்றே பார்க்கப் படுகின்றார்கள். விவசாயம் செய்ய முடியாத நிலப்பகுதியில் இருந்து கொண்டு, நெல்வயலுக்கு யானைக் காவல் செய்யும் வகையிலேதான் வஞ்சிக்கப் பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தவரின் நிலபுலங்களில் உழைப்பினை மட்டும் நல்கும் கூலித்தொழிலாளராகவே இன்றும் அம்மக்கள் வாழ்கின்றனர்.

அவர்களின் அறியாமை மேலும் அவர்கள் வாழ்க்கையினை துன்பகரமாக்கிக் கொண்டே இருக்கின்றது. அம் மக்களின் பலவீனத் தினைப்பயன்படுத்தி அவர்களிடம் இருந்து எவற்றினை எல்லாம் அனுபவிக்கமுடியுமோ அத்தனையையும் மிகவும் தந்திரமாகப் பெற்றுக்கொண்டு, இருபதாம் நூற்றாண்டிலும் தமிழர்கள் தமிழர்களை



படிப்பகம்

கொத்தடிமைகளாக நடத்துகின்ற யதார்த்தம் அரங்கேறிக் கொண்டே இருக்கின்றது.

மாலை நான்கு மணியைத்தாண்டிவிட்டது. குணசிங்கத்தார் உழவுமெசினுடன் வந்துவிட்டார். மைனாவும் ஆட்களும் அவர்களுக்குக் கொடுக்கப்போகும் சம்பளத்தினை எதிர்பார்த்து நிற்கின்றனர். பாலை மரத்தடிப் பிள்ளையாருக்கு மோதகம் அவித்து, படையல் வைக்கும்போது அதற்கான சம்பிரதாயங்களின் முடிவாகச் சங்கு ஊதப்படும். அந்தச் சங்கொலி கேட்டாற்போதும் சுற்றியுள்ள சிறுவர்கள் பெரியவர்கள் எல்லோரும் விழுந்தடித்து ஓடுவார்கள் மோதகம் பெறுவதற்காக. அவ்விதமே இங்கேயும் காத்திருந்தனர். வரம்பிலே போடப்பட்ட புற்களில் சில இன்னமும் முட்கம்பி வேலிக்கு வெளியே உள்ள புற்தரையில் வீசப்படவில்லை. குணசிங்கத்தாரின் கழுகுக்கண்களில் அவை பட்டுவிட்டன. மைனாவுடன் சத்தம் போடுகின்றார். பதிலுக்கு மைனா தனது ஆட்களை கெட்ட வார்த்தையில் திட்டுகிறான். அவையெல்லாம் தமக்கல்ல முதலாளியைத் திட்டமுடியாமைக்குத் தம்மைச்சாட்டிச் சாடுகிறான் என்றுவிளங்கிய பெண்கள் தமக்குள் சிரிக்கின்றார்கள். ஒருசில வாலிபர்கள் விழுந்தடித்தடித்து ஓடிச்சென்று, அவற்றினை அப்புறப்படுத்துகின்றனர்.

பெரியாட்களுக்கு பன்னிரண்டு ரூபா வீதமும் சிறுவர்களுக்கு நான்கு ரூபா வீதமும் மைனாவுக்கு கங்காணிக் கூலியுமாகச் சேர்த்து இருபது ரூபாவும் கொடுக்கப்படுகிறது. உண்மையில் அன்றைய கூலியாக முப்பது, நாற்பது ரூபா கொடுக்கவேண்டும். அப்படித்தான் யாழ்ப்பாணத்துத் தொழிலாளர்கள் பெறுகின்றார்கள். அதற்குச் சொல்லப்படும் நியாயம் அவர்கள் பரம்பரை விவசாயத் தொழிலாழிகள் என்பது. ஆனால் தர்மபுரவாசிகள் தமிழர்களாக இருந்தாலும் பஞ்சப்பராரிகள்தானே. கேட்பார் யார்? தொழிற்சங்கமா இருக்கிறது. அப்படி இருந்தாலும் விலைபோவதற்காகவா ஆட்கள் இல்லை? வடபுலத்திற்கு இடம்பெயராமல் மலைநாட்டில் உள்ள தொழிலாளர்கள் அட்டைக்கடியிலும், குளிரிலும் படும் அவஸ்தையுடன் எல்லாத்தரப்பினரும் சுரண்டிச் சுரண்டி, சுருண்டே இருக்கின்றனர். அவ்விதமே தமிழரை நம்பி வந்தோரின் கதியும்.

உணவில்லாமல் சுருண்டுபோய் இருக்கும் சிறுசுகளுக்கும், காலையில் இருந்து தண்ணியிலும் சேற்றிலும் மாய்ந்து கைகள் எல்லாம் புண்ணாகி, குனிந்து நின்றதால் நாரி நிமிரமுடியாமல் கூனியிருக்கும் இடுப்புவலி ஒருபுறம், இவற்றுக்கு எல்லாம் அந்தப் பன்னிரண்டு ரூபா போதுமோ என்பதைவிட, அதைக்கொண்டு முடிந்தளவு எதாவது செய்வதிலேயே குறியாக இருந்தனர். ஸ்ரீமாவோ அம்மையார் அரசாங்கத்தில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் ஏழைமக்களுக்கு, அரைக்கொத்தரிசி இலவசமாகச் சங்கக்கடையில்

கூப்பனுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் தர்மபுரவாசிகள் அரசின் கண்களுக்கு ஏழைகளாகத் தெரியவில்லை.

அவர்களின் பாக்கில் இருந்த தேநீர் டம்ளர்கள் முதல்நாள் குடித்த மீதமுடனேயே இருந்தன. அவற்றை நீரில் கழுவியே இன்றைய தேநீரைக் குடித்தனர். வீட்டில் தேநீர் குடிப்பதற்கு அவர்களுக்கு ஏது வசதி. இராச்சாப்பாடு அனேகமானோர்க்கு ரொட்டிதான். அபூர்வமாகவே சோறு சாப்பிடுவார்கள். போசாக்கில்லாமல் சிறுவர்கள் வயிறு ஊதிப்பருத்திருக்கும், கண்கள் குழிவிழுந்திருக்கும். பெண்களின் நிலைமையைச் சொல்லத் தேவையில்லை. காலையில் இருந்து வேலைசெய்த களைப்பும் துன்பமும் நீங்க அவர்களுக்குத்தெரிந்த ஒரேவழி போதையினை ஏற்றிக்கொள்வதுவே. கள்ளுக்கடை, சாராயக்கடை தாராளமாக இருந்தன. அத்துடன் போதை வஸ்துக்களையும் நாடினர். மறுநாள் படுக்கையால் எழுந்தவுடன் உழைப்பு, மீண்டும் போதை. இதுவே அவர்களது வாழ்க்கை வட்டமாக இருந்தது. இதற்குப் புறநடையாகச் சிந்தித்துச் செயற்பட்டோர் சிறுதொகை யினரேயாவர்.

வர்க்கம் என்பது பிரதானம் இல்லை இனமே பிரதானமானது என்போர் இம்மக்களின் அனைத்து விதமான சுரண்டலுக்கும் சொல்லும் விளக்கம்தான் என்ன? தர்மபுரவாசிகளின் ஊழ்வினை பின்வந்து உறுத்துகின்றதோ? அல்லது அதற்குப் பின்னால் ஏதோ மர்மம் கட்புலனாகாமல் தன்னை மறைத்து நிற்கின்றதோ என்னவோ? ஆனால் மைனாவும் அவனைப்போன்ற கங்காணிமாரும் உழைப்பினைச் சுரண்டும் குணசிங்கத்தார் போன்றோரும் தமது நரித்தனத்தை நாளையும் தொடரத்தான் போகின்றனர். அதன் எதிர்வினை நிச்சயம் மாற்றத்தினை நோக்கியே இருக்கும். காலையில் மைனாவைக் கோபத்துடன் பார்த்த வாலிபர்கள் என்றும் அப்படியே அடங்கிப்போவார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?!

***( கதைக்கான களம் - 1973 )***

www.padippakam.com

# மரங்கொத்தி

"இந்தா கயிறு இருக்கு, ஆலமரத்தில தூக்குப் போட்டுக் கொள்ளு இல்லாட்டி இந்தா பொலிடோல் இருக்கு குடிச்சிடு. இதில எதுவேணுமோ? அதை எடுத்துக்கோ"

மரணக் களையோடு மலங்க மலங்க முழித்துக் கொண்டிருக்கும் ஜோனைப் பார்த்து, லிங்கன் கூறுகின்றான். லிங்கன் கூறும் வார்த்தையில் ஆக்ரோசம் இல்லை. ஆனால் நிதானமான போர்க்குணம் தென்பட்டது.

"மச்சான்.. நீயே!.. இப்படிச்..சொல்லிறாய்.. "

ஜோனின் வாயிலிருந்து, நாக்குழறி வார்த்தைகள் திக்கித்திணறி உதிர்கின்றன.

"டேய் துரோகி, என்னை மச்சான் எண்டு சொல்லாதையடா அப்படிச் சொல்ல உனக்கு யோக்கியம் இல்லையடா. நண்பனெண்டு பழகினால் குடும்பத்தையே நாசம்பண்ணப் பாக்கிறியோடா?"

இப்போது, லிங்கன் அடக்கிவைத்திருந்த ஆத்திரத்தை வார்த்தைகளில் கொட்டுகின்றான். ஆறடியை அண்மித்த உயரம். உயரத்திற்கேற்ற பருமனும் ஆஜானுபாகுவான தோற்றமும் உடற் பயிற்சியாளனுக்கே உரித்தான தேகக்கட்டு, அடர்ந்து சுருண்ட கேசங்களும் எதனையும் ஊடுருவிப் பார்க்கும் தீட்சண்யமிக்க கண்களில் தீப்பொறிபறக்க, நிதானத்தினை இழந்து நின்றான் லிங்கன்.

வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிபவர்கள் லிங்கனும், ஜோனும். இருவரும் மிகவும் அன்னி யோன்னியமான நண்பர்களாகப் பழகியவர்கள். இருவருக்கும் இடையில் கொலைசெய்யும் அளவுக்கு ஏற்பட்ட பகமைதான் என்ன?

வன்னேரிக்குளம் கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய ஒரு கிராமம் . அங்கே ஒரு ஏழை விவசாயி வீட்டில் பிறந்தவன் லிங்கன். காட்டிலே இயல்பாக வளரும் செடிபோல மழையிலும் வெய்யிலிலுமாக வளர்ந்தவன். காட்டிலுள்ள மிருகங்கள், பறவைகளுடன் இயல்பாகவே பழகிப் பருவவயதினை அடைந்தான்.

மாட்டுக் கொட்டில் போல் இருந்த கிராமத்துப் பாடசாலையில் பள்ளிப்படிப்பைத் தொடங்கினான். அந்தப் பாடசாலைக்கு இரண்டு



படிப்பகம்

ஆசிரியர்கள் அதில் ஒருவர்தான் முருகேசு வாத்தியார். அவர் லிங்கனின் கெட்டித்தனத்தினையும் சுறுசுறுப்பினையும், அவன் படிப்பில் காட்டும் ஆர்வத்தினையும் இனம் கண்டு கொண்டதோடு, மாலைநேரத்தில் தனது இருப்பிடத்திற்கு அழைத்து பாடம் சொல்லிக் கொடுத்தார். ஐந்தாம் வகுப்பு சித்தியடைந்ததோடு, கிளிநொச்சியில் உள்ள தமது நண்பர் வீட்டில் தங்கியிருந்து, மேல்வகுப்பினைப் படிப்பதற்கு உதவிபுரிந்தார். அதனைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்ட லிங்கன் இப்பொழுது பேராதனை பல்கலைக்கழகத்தில் புவியியற் சிறப்புப் பட்டதாரியாகி, தனது ஊரிலே மகாவித்தியாலயமாக உயர்ந்துவிட்ட பாடசாலையில் ஆசிரியராகக் கடமைபுரிகின்றான்.

தன்னை சிறுவயதில் ஊக்குவித்து, உதவிபுரிந்த முருகேசு வாத்தியாரை குருவாகக் கொண்டமையால் அவர் வழியில், கிராமத்துச் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டில் கூடியகரிசனை காட்டிவருகின்றான் லிங்கன். பாடசாலைக்கு பணியாற்ற வருகின்ற ஆசிரியர்களுடன் சுமுகமாகப்பழகி மாலை நேரங்களில் மேலதிக வகுப்புக்கள் வைப்பதற்கும் வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளான். கிராம முன்னேற்றச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை என்பவற்றின் மூலம் கணிசமான தொகையினை ஆசிரியர்களுக்கு ஊக்கிவிப்பாகவும்ஞ ஏழைப் பிள்ளைகளுக்கு புத்தகம், கொப்பி, பேனாவும் வழங்கி வருகின்றான்.

கிளிநொச்சி கண்டி வீதியில் முறிகண்டிப் பிள்ளையார் கோவிலைத்தாண்டி சில கிலோமீற்றர்தூரம் சென்று, மேற்குப்பக்கம் செல்லும் சிறிய தார்வீதியில் சென்றால் அக்கராயன்குளம் வரும். அக்கராயன்குளச் சந்தியிலிருந்து, வடக்குப்பக்கம் உள்ள கிரவல் வீதியில் சென்றால் வன்னேரிக்குளம் வரும். வன்னேரிக்குளம் ஒரு அழகிய விவசாயக் கிராமம். வடகிழக்குப்பக்கம் கரியால நாகபடுவானும் அடுத்து பல்லவராயன் கட்டும் அயற்கிராமங்கள். நகரம் என்றால் கிளிநொச்சியைத்தான் சொல்ல வேண்டும். எல்லாத் தேவைகட்கும் மக்கள் அங்குதான் செல்ல வேண்டும். அங்கிருந்து காலையிலும் மாலையிலும் ஒரு பஸ்வண்டி ஓடுகின்றது. அதுபழுதானால் அதோகதிதான். வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம், டிஸ்பென்சரி, உப தபாற்கந்தோர், கமத்தொழில் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன இயங்குவதால் அங்கு வேலைபார்க்கும் உத்தியோகத்தர்கள் திங்கட்கிழமை காலையில் வேலைக்கு வருவதற்கும் மீண்டும் வெள்ளிக்கிழமை பிற்பகல் வீடு திரும்புவதற்குமாகக் கட்டாயம் ஒரு பஸ்வண்டியை கிளிநொச்சி டிப்போ அனுப்பத்

தவறுவதே இல்லை. அவ்விதமே திங்கட்கிழமை காலையில் பஸ்ஸில் வரும் ஆசிரியர்கள் ஆசிரியர் விடுதியிலும் வாடகைக்கு ஒழுங்குசெய்த வீடுகளிலும் தங்கிவிட்டு, வெள்ளிக்கிழமை பன்னிரண்டு மணியளவில் மீண்டும் பஸ்வண்டியில் கிளிநொச்சிக்கு சென்றுவிடுவார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வந்தோர் அங்கிருந்து புகைவண்டி மூலம் செல்வார்கள்.

ஆசிரியர்களுக்கு என்று உள்ள விடுதியில், அதிபர் விடுதி ஒன்றும், ஆசிரியர் விடுதி இரண்டுமே இருக்கின்றன. அதில் ஆசிரியர்கள் இருக்கும் நிலைமையில்தான், அப்பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியனாக ஜோன் நியமனம் பெற்றுவந்தான். உண்மையில் அந்தக் கிராமத்திற்கு ஆங்கில ஆசிரியர் என ஒருவரும் இல்லை. ஏனைய ஆசிரியர்கள்தான் கீழ் வகுப்புகளுக்குக் கற்பித்தார்கள். ஆனால் எட்டாம் வகுப்புக்கு மேல் போதிக்கும் அளவுக்கு ஆங்கில ஆற்றல் உள்ளவர்கள் இல்லை. இது பாடசாலையின் வளர்ச்சிக்குத் தடையாகவே இருந்தது. இச் சந்தர்ப்பத்தில் ஜோனின் வருகை தெய்வதரிசனமாகவே லிங்கனுக்குத் தெரிந்தது. எனவேதான் ஜோனைத் தனது வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்தான்.

சுமாரான தோற்றம், மாவெள்ளை நிறம், புன்னகை தவழும் குழந்தை முகம், சுருண்ட கேசம், வசீகரிக்கும் கண்கள், மிகவும் இனிமையாகவும் மென்மையாகவும் பேசும் சுபாவம், பார்த்தவுடனே அவர்களைத் தன்பால் ஈர்க்கும் காந்தசக்தி உடையனாகவே ஜோன் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராகக் கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டான்.

லிங்கனின் எதிர்பார்ப்பினைப் பொய்ப்பிக்காமல் மிகவும் ஆர்வத்துடன், ஆங்கில வாசனையே இல்லாத சிறுவர்களுக்கு ஏ,பி, சீ, டீ யில் இருந்து, உச்சரிக்கும் முறை, இலகுவான உரையாடல்கள் எனப் படிமுறையாக ஆரம்பித்து, மூன்றுமாதத்தில் மாணவர்கள் ஜோனுடன் ஆங்கிலத்திலே உரையாடும் அளவுக்கு அவனது கற்பித்தல் ஒரு வித்தையாகவே அமைந்துவிட்டது.

லிங்கனைப் பொறுத்தவரை ஜோன் ஒரு தெய்வப்பிறவியாகவே தென்பட்டான். லிங்கனுக்கு இரண்டு சகோதரிகள் மூத்தவள் ஓ.எல். வரைபடித்துவிட்டு வீட்டில் இருக்கின்றாள். தங்கை ஒன்பதாம் வகுப்புப் படித்துக்கொண்டிருக்கின்றாள். தகப்பன் இறந்துவிட்டார். தாயார் மட்டுமே உள்ளார். குடும்பத்திற்கு என்று இருக்கும் இரண்டு ஏக்கர் வயலில் கிடைக்கும் நெல்லும் லிங்கனின் ஊதியத்திலுமே

குடும்பச்சக்கரம் உருண்டுகொண்டிருந்தது.

ஜோன் இயல்பாகவே யாருடனும் பழகக் கூடியவன் என்பதால் லிங்கன் வீட்டில் ஒருத்தனாக மிக இலகுவாகவே ஒட்டிக்கொண்டான். லிங்கனின் தங்கைக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதில் தொடங்கி, இரண்டு வருடங்களில் லிங்கனின் மூத்த சகோதரியுடன் மிகவும் நெருக்கமாகிவிட்டான். ஜோன் மிகவும் ஒழுக்கமும் பண்பும் உள்ள சிறந்த ஆசிரியர் என்ற நற்பெயரைச் சம்பாதித்துவிட்டான். கிராமத்து மக்களும் வழியில் தெருவில் கண்டால் அளவுக்கு அதிகமான மரியாதையை செலுத்தினர். பாடசாலைக்கு வந்த ஆறுமாதங்களும் நல்ல பிள்ளை என்ற பெயரைச் சம்பாதிப்பதில் செலவிட்ட ஜோன், தனது பிருந்தாவனத்துக் கண்ணன் லீலைகளை ஆரம்பித்து விட்டான். ஆரம்பத்தில் அவனது குறும்புத் தனங்களில் லயித்து வசப்பட்டவர்களை அரிசிக்குறுணி போட்டு கரப்புக்குள் அமுக்கும் கோழிக்குஞ்சுகள் போல அப்படியே அமுக்கிவிடுவான். நிலைமை விபரீதமானபோது, அதனை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவஸ்தைப்படும் பெண்கள் தொகை நாளொரு வண்ணமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. ஆனால் யாரும் வெளியில் சொல்ல வில்லை. தப்பு இருபக்கமும் தானே என்ற எண்ணமுமாக இருக்கலாம். வெளியானால் தமது வாழ்க்கை பாதிக்கப்படும் என்ற பயமுமாக இருக்கலாம். அந்தக்கிராமப் பெண்களின் அறியாமையும் சமூகக்கட்டுக் கோப்பும் ஜோனுக்கு மிகவும் வசதியாக அமைந்து விட்டது.

ஜோன் ஆங்கில போதனையில் விண்ணன் என்று பாடசாலை யிலும், கிராமத்திலும், கல்வி வட்டாரங்களிலும் பெயரெடுத்து விட்டான். இந்த இரண்டு வருடங்களில். அதேபோலவே பிருந்தாவன லீலைகளிலும் கில்லாடி என்பது பலர் அறியாத உண்மையாக உறங்கிக் கொண்டிருந்தது.

லிங்கனைப் பொறுத்தவரை வீட்டிற்காக உழைத்தலும், ஆசிரியப் பணியே முழுநேரச் சிந்தனையாகவும் செயலாகவும் இருந்தது. அதனால் ஜோனின் விவகாரங்கள் அவனின் கண்களில் படவில்லை. சில செய்திகள் எட்டினாலும் தம்மீதுள்ள பொறாமையில் கதைக்கிறார்கள் என்றே நினைத்தான். அவ்வளவுக்கும் தனது தங்கைகள் மீதும், ஜோன் மீதும் வைத்த அபாரமான நம்பிக்கையே காரணமாகும். தனது மூத்த சகோதரியுடன் கொஞ்சம் வாரப்பாடாக ஜோன் இருப்பதை லிங்கன் அவதானிக்கத்தான் செய்தான். இருப்பினும் இருவருக்கும் விருப்பம் எண்டால் கலியாணத்தினைப் பேசிச்செய்வோம். முதலில் ஜோனே

www.padippakam.com

இந்தப்பக்கம் கரடியும், நரியுமே வரும். தூரத்தில் நரி ஒன்று ஊளையிடும் சத்தம் கேட்கிறது. இப்பொழுது ஜோன் ஏதோ ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் லிங்கன் பொலிடோலைப் பருக்கி, தூக்கிலே போட்டு ஆலமரத்தில் தொங்க விடுவான். அவனுக்கு தனது தங்கையின் நினைவே முழுமையாக ஆக்கிரமித்து நிற்கின்றது. ஒரு சில நிமிடங்கள் தாமதித்தாலும் தனது தங்கை பொலிடோல் குடித்து, இந்த ஆலமரத்தில் பிணமாகத்தானே தொங்கிக் கொண்டிருப்பாள். பல வருடங்களுக்கு முன்பு இந்த ஆலமரத்தில் ஒரு கன்னிப்பெண் தூக்குப் போட்டுச் செத்ததையும் அவள் பேயாகி இரவில் அப்பக்கம் போகும் வாலிபர்களைப் பலியெடுப்பதாகவும் கிராமத்து மக்களால் நம்பப்பட்டது. அவ்விதமே போன மாதமும் ஒரு வாலிபன் மாடுதேடி வந்து, மாலைக்கருக்கல் வேளை இரத்தம்கக்கிச் செத்தமை கிராமத்தையே கிலிகொள்ள வைத்தது. அது பேயடித்ததோ? முனியடித்ததோ? யாருக்குத்தெரியும். ஆனால் தூக்குப்போட்டுச் செத்த கன்னிப் பெண்ணின் ஆத்மாவின் ஆற்றாமைக்கு லிங்கன் செயல்வடிவம் கொடுக்கப் போகின்றான்.

ஆசிரிய விடுதியில் தங்கியுள்ள லிங்கனின் ஆத்ம நண்பன் சிவஞானத்துக்கு இவ்விடயங்கள் யாவும் தெரியும். விடயம் பாடசாலைக்கும் தெரியும் அளவில் ஜோன் மெள்ள லிங்கன் வீட்டில் இருந்து வெளியேறி, ஆசிரியவிடுதியில் உள்ள சச்சியுடன் தங்கி விட்டான். லிங்கனும் ஜோனும் கதைப்பதில்லை. ஆனால் இன்று மாலை ஆசிரியர் விடுதிக்கு வந்த லிங்கன் ஜோனை மச்சான் வாடா என்று அன்புடன் அழைத்துச்சென்றது, சிவஞானத்திற்கு இப்பொழுது சந்தேகத்தினை ஏற்படுத்தியது. இருட்டுகின்றது இன்னமும் வரவில்லை. ஏதோ விபரீதம் நடக்கப் போவதை சிவஞானம் முன்னுணர்ந்தவனாகச் சச்சியையும் அழைத்துக்கொண்டு, லிங்கனும் ஜோனும் போன ஒற்றையடிப்பாதை வழியே அவர்களைத் தேடிச் சென்றனர். ஜோனின் நல்லகாலமோ லிங்கனின் அதிஸ்டமோ தெரியவில்லை. ஆற்றங்கரை ஆலமரத்தடியில் அவர்களைச் சிவஞனமும் சச்சியும் காண்கின்றனர். அவர்களைக் கண்டபோதே ஜோனுக்கு போய்க்கொண்டிருந்த உயிர் மீண்டதை உணர்ந்தான். நடக்க இருந்த விபரீதத்தினை எடுத்துரைத்த சிவஞானம் லிங்கனை பலவாறு முயன்று சமாதானப்படுத்தினான். நண்பனின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டாலும் ஜோனின்மீது கொண்ட கொலைவெறி இன்னமும் லிங்கனிடம் இருந்து மீளவில்லை.

"டேய் துரோகி இப்பவே ஊரை விட்டுப் போடா, இனிமேல்



படிப்பகம்

என்ர கண்ணில பட்டால் அந்த இடத்திலேயே குடலை உருவுவன்..." அதற்குமேல் வார்த்தைகள் வராமல் இரத்தம் கொதிக்க, கண்களில் கோபத்தின் பொறிபறக்க நின்றான் லிங்கன்.

பலநாள் கள்வன் ஒருநாள் பிடிபடுவான் என்பது ஜோனுக்குச் சரியாகவே இருந்தது. ஜோன் இந்தக் கிராமத்திலும் பாடசாலையிலும் மட்டுமல்ல பல இடங்களில் தனது லீலைகளை அத்தியாயம் அத்தியாய மாக எழுதிக்கொண்டே வருகின்றான். ஆனால் இந்தக் கிராமத்துடன் அவனின் இறுதி அத்தியாயம் எழுதப்பட்டிருக்க வேண்டும். இல்லா விட்டால் அவன் உயிர் வாழ்வதற்கே தகுதி இல்லாதவன். மரங்கொத்தி எல்லா மரங்களையும் கொத்தித் துளைபோட்டுத் தனது தேவையை நிறைவேற்றிக்கொள்ளும். ஆனால் வாழைமரத்தில் கொத்தித்தான் தனது சொண்டினை வாழை நாரில் மாட்டி தனது முடிவினைத் தேடிக்கொள்கின்றது. அவ்விதமே வன்னேரிக்குளத்தில் ஜோன் எனும் மரங்கொத்தி மாட்டிக் கொண்டது. அம் மக்கள் படிக்காவிட்டாலும் நாகரிகம் உள்ளவர்கள் என்பதால் பிணை எடுக்கப்பட்டு, நடைப் பிணமாக உலாவ விடப்பட்டுள்ளான். தனது இரண்டு பெண் பிள்ளைகளுக்காவது நல்ல தகப்பனாக அவன் இருக்க வேண்டும் என்பதற்காகவும், அவன் மீது வழக்குத் தொடுத்தால் சம்மந்தப்பட்ட பிள்ளைகளும் பாடசாலையும் பாதிக்கப்படும் என்பதாலும் அவன் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பவிடப்பட்டான். ஆனால் அவன் ஆசிரியத் தொழிலை மேற்கொள்ள முடியாத அளவுக்கு ஊரைவிட்டு விரட்டப்பட்டான்.

நண்பர்கள் என்போர் கைகொடுப்பவர்கள்தானே. இப்பொழுது சச்சி மாஸ்ரர் லிங்கனின் சகோதரியைத் திருமணம் செய்து, ஒரு ஆசிரியனால் ஏற்பட்ட கறையை நீக்கி, ஆசிரிய சமூகத்தின் மேன்மையினை நிலைநாட்டி விட்டார். லிங்கன் மீண்டும் நம்பிக்கையோடு தனது பணியில் முன்னரைவிட மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றான். மூன்றாம் வகுப்பில் படித்த நடை, உடை, பாவனையை வைத்து ஒருவரை எடைபோட்டு ஏமாறக்கூடாது என்பதைப் படிப்பினையாகக் கொண்ட சுண்டெலியும் பூனையும் கதைப் பாடலை சிறுவர்களைக்கொண்டு பாடவைத்து, மாணவர்கள் அக்கதை கூறும் தத்துவத்தினை கலந்துரையாடி எழுதும்படி, ஒரு ஒப்படையொன்று ஒவ்வொரு வகுப்புக்கும் கொடுக்கத் தவறுவதே இல்லை லிங்கன்.

***( கதைக்கான களம் - 1981 )***

# வெள்ளைச்சி

செம்மஞ்சள் பொழுது மேற்கிலே உள்ள தென்னஞ் சோலைகளுக்குள் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்தது. இனியென்ன. இருள் கவியத் தொடங்கிவிடும். கடந்த ஒரு மணித்தியாலத்துக்கு மேல் பார்த்துப் பார்த்துக் கண்களும் பூத்துப் போச்சு. இன்னமும் வெள்ளைச்சியைக் காணேல்லை. கையும் ஓடேல்லக் காலும் ஓடேல்ல என்பதை முதன் முறையா அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

படலையைத் திறந்து கொண்டு றோட்டுக்கு வருகின்றேன், றோட்டை அடுத்து அகன்ற வாய்க்காலில் நிரம்பிய நீர், பன்புற்களில் நுரைதள்ளிக் கொண்டிருந்தது. அங்கே பனைத் தொத்தி மீன்கள் தமது குதியன் விளையாட்டைக் காட்டிக்கொண்டிருக்கிறன. அதற்குப் போட்டியாகப் போலும் குளிகரையில் மாங்கன் மீன் குஞ்சுகள் தண்ணிக்கு மேலே பாய்ந்து, மஞ்சள் வெய்யிலில் கவர்ச்சி காட்டிக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்றினைச் சுவைபார்க்க தூங்கல் நாரையும் மீன் கொத்தியும் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. அவைக்குக் கிடைத்தது என்னவோ ஏமாற்றந்தான். இப்படி மாலை நேரத்தில் அதுவும் இருள்மண்டும் பொழுதில் வாய்க்காலின் விநோதங்கள் சொல்லிலடங்கா.

இவற்றினை எல்லாம் ரசித்துப்பார்கும் மனநிலையில் நான் இப்போது இல்லை. இன்னமும் வெள்ளைச்சியைக் காணேல்ல.

வேலர் வீட்டுப் பட்டி அமர்க்களமாக இருந்தது. சிலவேளை அங்கை போயிருக்குமோ? ரத்தினத்தின் குரல் கேட்டது. எனது குரலை உரக்கொடுத்து "வெள்ளைச்சியைக் கண்டியோ ரத்தினம்" "நான் காணேல்ல. ஏன் அதுதானே எல்லாத்துக்கும் முன்னுக்கு வரும்". எனது தவிப்பினை ரத்தினத்தின் பதில் இன்னமும் அதிகமாக்கின.

இனியும் தாமதிக்க முடியாது.குரலெடுத்து அம்மாவிடம் "வெள்ளைச்சியைக் காணேல்ல, பாத்திட்டு வாறன்" என்று சொல்லி விட்டு அம்மாவின் பதிலுக்கும் காத்து நிற்காமல் ஓட்டமும் நடையுமாக விரைகின்றேன்.

சந்தையடி விஜயன் கடையில் தங்கன் நின்று கொண்டிருந்தான். அவனை விசாரித்தேன். தான் காணவில்லை என்று புருவத்தினைச் சுருக்கினான். மாலை நேரத்தில் விஜயனின் அண்ணன் ரத்தினம் கடைக்கு

வந்து விடுவதால், விஜயனுக்கு லீவு. அவன் சந்தியில் நின்று அவ்வழியாற் போகும் வரும் சிறுவர்களை நுள்ளி இம்சைப் படுத்துவதில் அலாதிப்பிரியன். எனது அவசரத்தில் அவனது கண்ணிற் படாமற் போவதிலும் எனது விழிப்புணர்வு எச்சரிக்கை செய்தது. நல்ல காலம் அவனைக் காணவில்லை. நிம்மதியாகச் சந்தியைக் கடந்து கிரவல் ஒழுங்கையில் இறங்கினேன்.

எனக்கு எதிர்ப்புறமாக முன்னூறுக்கு மேற்பட்ட பசுக்கள் கூட்டம் கூட்டமாகப் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வந்தன. ஓரமாக ஒதுங்கி வழிவிட்டேன். பசுக்களின் சலத்தினில் நனைந்த கிரவற் புழுதி, அவற்றின் காலடிகளில் மிதிபட்டு மிதிபட்டு உலர்ந்த புழுதியாக மேலெழும்பி நாசித்துவாரத்தில் புதியதொரு வாசனையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

நாங்கள் கரைச்சியில் கமம் செய்யும் பொழுது முன்னூறுக்கு மேற்பட்ட பசுக்களுக்கு கன்றுகளுக்குப் பட்டிகட்டியது மெல்லியதாக ஒரு ஞாபகம் உண்டு. இப்பொழுது வட்டக்கச்சி வீட்டுக்கு வந்தபின் பத்துப் பதினைந்து பசுக்களும் கன்றுகளுந்தான் எங்களிடம் உண்டு. அவற்றில் கட்டைக்கறுப்பி, நடுத்தரமான சிவப்பி, பூச்சியன் காளை, செங்காரிப் பசு, ஒற்றைக் கண் எருது என்பவற்றோடு, எல்லாவற்றினையும் விட உயரமான வெள்ளைப்பசு தான் தலைமை ஸ்தானத்தில் இருந்தது.

அதற்காக அதற்கு வயது கூட என்று அர்த்தமில்லை. இன்னமும் கன்று ஈனாத கன்னிப் பசு. இருப்பினும் அதனது வளர்ச்சியும் எடுப்பான தோற்றமும் எல்லாவற்றினையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆளுமையும் வாய்த்தமையால் தலைமை இடத்தினைத் தானாகவே சுவீகரித்துக் கொண்டது.

நான்தான் அது கன்றாக இருக்கும் பொழுது வெள்ளைச்சி என்று அன்புடன் அழைக்கத் தொடங்கினேன். வீட்டில் யாராலும் பிடிக்க முடியாத, குழுக்கன்று என்று பெயரெடுத்தது. ஆனால் நான் கிட்டப் போனால் என்னிடம் மண்டியிட்டு முட்டி விளையாடும். நானும் தலைகுனிந்து அதனுடன் முட்டி விளையாடுவேன். ஒரு கால கட்டத்தில் நான் சவாரி செய்யும் குதிரைக்குட்டி போல் ஆகிவிட்டது வெள்ளைச்சி.

வெள்ளைச்சியின் பிறப்பு ரகசியம் எங்கள் வீட்டாரில் எனக்கும் அம்மாவுக்கு மட்டுமே தெரியும். கறுப்பி கன்று போட்டு நின்ற காலம். ஒரு நாள் மாலை கறுப்பியுடன் வெள்ளைச்சி சிறுகன்றாக பால்குடித்தபடி வீட்டுக்கு வந்தது. என்ன கருணையோ தெரியவில்லை, கறுப்பியும் தனது

கன்றைவிட வெள்ளைச்சிக்கே முதன்மை இடம் வழங்கியது. எனக்கும் அம்மாவுக்கும் ஆச்சரியமாக இருந்தது.

ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. யாரும் தேடியும் வரவில்லை. மேய்ச்சலுக்குப் போன இடத்தில் தனது தாய்ப்பசுவைத் தேடிப்போகவும் இல்லை. அம்மா சொன்னா "பாவம் தாயைத் தவறவிட்டிட்டுது. கறுப்பியிட்ட பால் குடிக்குது, விரட்டி விட்டால் கறுப்பி மாதிரி வேறு தாய் கிடைக்குமா" என்று. அப்படியே கறுப்பியின் வளர்ப்புப் புத்திரியாகிவிட்டது.

இப்பொழுது வெள்ளைச்சி கன்னிப்பசு அதுவும் கன்றுத்தாய்ச்சிப் பசு. இது எனக்குத் தெரியாது. வழமை போல் வெள்ளைச்சி முதுகில் ஏறி சவாரி செய்யும் போதுதான் அம்மா சொல்லி, என்னை இறங்க வைத்தார். அன்றில் இருந்து வெள்ளைச்சிக்கு எனது கவனிப்பு அதிகம் என்று சொல்ல வேண்டும். தவிடு, புண்ணாக்கு முதலில் வெள்ளைச்சிக்குத் தான். பழந்தண்ணி, கஞ்சி என்று விசேட நீராகாரமும் தாராளமாக வெள்ளைச்சிக்குத் தான்.

வெள்ளைச்சியின் எடுப்பும் அழகும் வீட்டில் உள்ளவர்களையும், மேய்ச்சலுக்கு போகும் போது மாடுமேய்க்கும் சிறுவர்களையும் கவர்ந்திழுத்தாலும், யாருக்கும் கிட்டப்போகும் தைரியம் இல்லை. காரணம், தனது நீண்டு வளர்ந்த கொம்பினை சுழற்றிப் பயம் காட்டுவதேயாகும். ஒருநாள் கஞ்சிவாளியில் வாய்வைக்கப் போன சிவத்தான்நாயை விரட்டி விரட்டிக் கொம்பால் இடித்ததை இன்னும் மறக்க முடியவில்லை.

காலமை எழும்பி வேப்பம் குச்சியால் பல்விளக்கியபடி முதல் வேலையாக மாட்டுத் தொழுவத்தினைச் சுற்றிப்பார்ப்பது எனது வழமையான கடமை என்றே சொல்ல வேண்டும். காலமை என்னைக் கண்டபோது எல்லாமே எழும்பி விட்டன. ஆனால் வெள்ளச்சி மட்டும் எழும்பாமல் கண்ணை மூடிக்கொண்டு, வாலால் இலையான் விரட்டிக்கொண்டிருந்தது. பாடசாலைக்குப் போகும் அவசரத்தில் நானும் அக்கறை செலுத்தவில்லை. மற்றவர்களைப் பொறுத்தமட்டில் ஒரு பசு மாடாகத் தெரியலாம். காணாவிட்டால் ஒரு சொத்து இழப்பாகத் தெரியலாம். ஆனால் எனக்கும் அப்படியா?

வீட்டில் ஐயா அம்மா நான் மூவருமே. சிலர் வயல், தோட்ட வேலைக்குச் சில நாட்கள் தங்கியிருந்து வேலை செய்வார்கள். வேலை முடிந்ததும் அவர்கள் போய்விடுவார்கள். அண்ணாமார், அக்காமார், தங்கை

www.padippakam.com

எல்லோரும் ஊரில் நின்று படிக்கின்றார்கள். நான் மட்டுமே தனியாக விளையாட, சண்டை பிடிக்க என்று யாரும் இல்லாமல் இருக்கின்றேன்.

எனது செயலுக்கும் சிந்தனைக்கும் பாடசாலையில் இராமநாதன் என்ற நண்பன் கிடைத்த போதிலும், வீட்டுக்கு வந்த பின் யார்? எனக்கு எல்லாமே வெள்ளைச்சிதான். எனது கோபம், சந்தோஷம், விபரிக்க முடியாத கற்பனை எல்லாவற்றினையும் வெள்ளச்சியுடன் தான் பகிர்ந்து கொள்வேன்.

வெள்ளைச்சியும் தன் அம்மாவைத் தவறவிட்டுத் தனியாக வந்தபோது பரிவுகாட்டி விளையாடியது நான்தானே, அந்த நன்றி போலும், அதற்கும் என்மீது அப்பிடி ஒரு பற்று. அதன் நீண்டு வளர்ந்த கொம்பில் ஊஞ்ச லாடுவேன். பல துடுக்குத்தனமெல்லாம் செய்வேன். தூரத்தில் இருந்து அம்மா கத்திக் கொண்டு ஓடி வருவா, ஆனால் எனக்கு ஒருகீறல்கூட விழாமல் கவனமாகவும் பொறுமையுடனும் பார்த்துக்கொள்ளும். அதன்பின் அம்மா எங்களது விளையாட்டில் குறுக்கிடுவதே இல்லை.

வெள்ளைச்சி பற்றிய நினைப்புடன் உடையாவளவு மட்டும் வந்தாயிற்று. ஒரு சிலமனையும் காணவில்லை. மேய்ச்சல் புல்வெளி வெறுமையாகக் கிடந்தது. ஆக்காட்டி மட்டும் சத்தம் போட்டபடி வானில் எழுந்து வட்டமடித்து விட்டு, தூரத்தில் சென்று அமர்ந்து கொண்டது. எருக்கலையும், தகரையும் போட்டி போட்டு வாய்க்கால் கரையில் வளர்ந்து பற்றையாகிக் கிடந்தன. இடையிடையே புற்றும் வளர்ந்து அதனை மூடி பூநாறிப் பற்றைகள் மண்டிக்கிடந்தன. இருட்டிவிட்டது, தூரத்தில் தெரிவது எல்லாம் நிழலாகவே தென்பட்டன.

“இருட்டும் வேளைதான் விஷஜந்துக்கள் வெளிக்கிடும்நேரம்” என்று அம்மா சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. வெள்ளைச்சி மீதுள்ள பாசத்தில் இவ்வளவு தூரம் வந்துவிட்டேன். இப்பொழுது தனிமை என்பது மெள்ள மெள்ளத் தலை நீட்டிப் பயமுறுத்தத் தொடங்கிவிட்டது.

அம்மா வீட்டுப்படலையில் பரிதவித்துக் கொண்டிருப்பா என்ற நினைப்பு. வெள்ளைச்சியை மேற்கொண்டும் தேடமுடியாது, காலைமை பார்ப்பம் என்ற அரைகுறையான மனத்துடன் மீண்டும் வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாக. சந்தையடிதாண்டி, தரகர் வீட்டு ஒழுங்கையடியும் தாண்டும் போது, எருக்கலம் பற்றை மறைவில் ஒரு உருவம் அசைவது தெரிந்தது. வெள்ளைச்சியோ? ஓட்டத்தினை நிறுத்தி “வெள்ளைச்சி” குரல் கொடுத்தேன் பதிலுக்கு மெலிதான குரலில் ‘ம்மா....’ கிட்டப்



படிப்பகம்

போய்ப்பாரக்கின்றேன். எனது சந்தோஷத்திற்கு என்னையே கட்டுப்படுத்த முடியவில்லை.

வானத்தில் பறக்காத குறை. வெள்ளைச்சி சிவப்புக் கன்று ஒன்று ஈன்று, கன்றை நக்கியபடி நின்றது. கன்று எழும்ப முயல்வதும் விழுவதாகவும் இருந்தது. ஓடிச்சென்று கன்றை வாரி அணைத்துத் தூக்கிக்கொண்டேன். "வெள்ளைச்சி வா வீட்ட போவம்" எதிர்பாராத சந்தோசத்தில் கன்றைத் தூக்கிவிட்டேன். நடக்கும் போதுதான் அது லேசான வேலை இல்லை என்பது தெரிந்தது. நான் தூக்கக் கூடிய பாரத்தினை விடச் சற்று அதிகமாகவே இருந்தது. இருப்பினும் ஆர்வத்தால் முக்கித்தக்கித் தூக்கியபடி வீட்டை நோக்கி நடந்தோம்.

நான் நினைத்தது போலவே அம்மா படலையில் பாரத்துக் கொண்டு நின்றார். அம்மாவிடம் ஓடிச்சென்று சிகப்புக் கன்றினைக் காட்டினேன், அம்மா பாராட்டுவார் என்ற நினைப்புடன்.அம்மாவிடம் இருந்து திட்டுத்தான் கிடைத்தது.

"டேய் இப்பதான் கன்று ஈன்றிருக்கு, இன்னமும் தாய்ப்பசு நக்கிச் சுத்தப்படுத்தேல்ல, நீ தூக்கிக் கொண்டு வாறாய். அந்தா வாறவரத்தில உன்னை இடிக்கப் போகுது, போட்டிட்டு ஓடு"

என்று எச்சரித்தார். எனக்கு அது உறைக்கவில்லை. வெள்ளைச்சியும் கன்றும் எனது நண்பர்கள். ஆம் என் நினைப்புத் தப்பவில்லை, வெள்ளைச்சி தனது கன்றை நக்குவதற்குப் பதிலாக என் மீது பட்ட அழுக்கினை நக்கித் தனது அன்பையும் நன்றியையும் வெளிப்படுத்தியது. அம்மாவுக்கும் ஒரே ஆச்சரியம்.

வெள்ளைச்சி என்னை இடித்துவிடும் என்ற பதட்டத்தில் கத்திய அம்மா, இப்பொழுது சகஜ நிலைமைக்கு வந்துவிட்டார். அருகில் இருந்த வைக்கோல் போரிலிருந்து வைக்கோல் எடுத்துப் போட்ட அம்மா, அதில் கன்றை விடும்படி கூறினார். வைக்கோலில் கிடந்த கன்றை வெள்ளைச்சி ஆசையுடன் நக்கிச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தது.

அம்மாவின் வேண்டுதலின்படி வாய்க்காலில் குளிக்க இறங்கினேன். உடலில் ஒட்டியிருக்கும் கன்றின் மீதிருந்த கிறீஸ் போன்ற பசையினை உண்ணும் போட்டியில் மீன்குஞ்சுகள் எனது சதையினையும் பதம்பார்த்தன. பொறுக்கமுடியாமல் துள்ளியோடி வந்து கிணற்றடி நீர்த்தொட்டியில்

www.padippakam.com

குளித்தேன்.அவசர அவசரமாக காற்சட்டை மாற்றிவந்த போது, அம்மா பாலைக்கட்டையில் நெருப்பு மூட்டி, கடும்புப் பால் காய்ச்சிக் கொண்டிருந்தார். கன்று ஈன்ற பின் முதல் முதலில் சுரக்கும் பால் கன்றுக்கு ஆகாது என்று அதனைக் கறந்தெடுத்த பின்புதான் கன்றுக்கு பாலூட்ட அனுமதிப்பது வழக்கம். கடும்புப்பால் வடலி ஓலையில் வற்றக் காய்ச்சும் போது, வற்றி வெண்ணெக் கட்டி போல் வரும். அதன் சுவை தனியானது. சுவைத்துத்தான் பார்க்கவேண்டும்.

எனக்கு அன்று இரவு நித்திரை வரவில்லை ஒரே புளுகம். வெள்ளைச்சியோட இன்னொரு நண்பர் கிடைத்ததுதான் காரணம். நித்திரை கொள்ள முயன்று தோற்றுப் போனேன். எழும்பி முற்றத்துக்கு வருகின்றேன். நந்தியாவர்த்தம் பூக்கள் மலர்ந்து கமகம என வாசனை வீசுகின்றன. நிலவு வெளிச்சம் உச்சிக்கு வந்து பால்வெள்ளையாய்க் காட்சி அளிக்கின்றது.

சிகப்புக் கன்று இப்பொழுது துள்ளி விளையாடுகின்றது. வெள்ளைச்சி கழுத்தில் கட்டப்பட்ட கயிற்றினை இழுத்து கன்றினை பாதுகாக்க முற்பட்டுத் தோற்றுப்போனாலும் மீண்டும் மீண்டும் கயிற்றினை இழுத்துக் கொண்டிருக்கின்றது.

வாசனை கமழும் நந்தியாவர்த்தம் பூக்கள் சிலவற்றினைப் பறித்து வெள்ளைச்சியின் கொம்புகளிற்கிடையில் செருகிவிட்டு, வெள்ளைச்சியின் கன்றுடன் முற்றத்தில் நின்று முட்டி விளையாடுகின்றேன். வெள்ளைச்சி இப்போது கயிற்றை இழுக்கவில்லை படுத்திருந்து, கன்றினைப் பாதுகாக்க வேண்டும் என்ற அச்சம் சிறிதுமின்றி எம்மைப் பார்த்து அசை போட்டுக் கொண்டிக்கின்றது.

***( கதைக்கான களம் - 1965 )***

***செங்கதிர் புரட்டாதி 2009***



படிப்பகம்

# விஷகடி வைத்தியம்

"கடிவாய்க்கு மேலே இறுக்கிக்கட்டு."

அம்மா அவசரப்படுத்திக் கொண்டிருந்தார். அவசரத்திற்கு ஒரு சீலைத்துண்டு கூடக் கண்ணிற் படவில்லை. கொடியில் தொங்கிய ஐயாவின் வேட்டிதான் அகப்பட்டது. ஒருவாறு கடிவாய்க்கு மேலே கணுக்காலில் கட்டுப் போட்டாயிற்று.

தங்கையின் கண்கள் பயத்தால் மிரள்கின்றன. போதாக்குறைக்கு அம்மா, "உது புடையன்தான்" என்று உறுதிப்படுத்துமாப்போல் கூறிக்கொண்டிருக்கின்றார். நான் "இல்லை அம்மா இது சுருட்டைக்குட்டி" என்று மறுக்கின்றேன். மைத்துனர்க்கு பாம்பு பற்றி ஒன்றும் தெரியாததால் எங்கள் மூவரையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு திகைத்துப்போய் நிற்கின்றார்.

****

இருட்டிவிட்டது. நாய் குரைக்கும் சத்தம். யாரோ மனிதர்களைப் பார்த்துக் குரைப்பது போல் அதன் தொனி அமைந்திருந்தது. இந்தியன் ஆமிதான் அலுப்புக்கொடுக்க வருகின்றார்கள் என்ற ஊகத்தில் "கோதாரி விழுவான்கள் வந்திட்டாங்கள்" என்று அம்மா புறுபுறுத்துக் கொண்டார். "வீட்டுக்காரர் வீட்டுக்காரர்" கடப்படியில் இருந்து யாரோ கூப்பிடும் சத்தம் மெல்லிதாகக் கேட்கிறது. குசினியில் இருந்த தங்கச்சி "யாரது...." என்று குரல் கொடுத்தபடி முற்றத்துக்குச் செல்கின்றார்.

முற்றத்தில் அறுகம்புல் படர்ந்து கிடக்கிறது. அதை அழிப்பதற்கு எவ்வளவு முயற்சி எடுத்தாலும் மீண்டும் மீண்டும் முன்பைவிட செழிப்பாக வளர்வது, இப்பகுதிக்கே உரித்தான பெரிய பிரச்சினை. தோட்டம், வயல் என்று சவால்விட்டு வளர்ந்து கொண்டே இருக்கின்றன. அறுகம்புல்லுக்குள் மறைந்திருந்த புடையன் குட்டி ஒன்று தங்கையின் பாதத்தினைப் பதம் பார்த்துவிட்டது.

"ஐயோ அம்மா!..."

தங்கை அலறுவது கேட்கிறது. நாங்கள் எல்லோரும் விழுந்தடித்து முற்றத்துக்கு ஓடுகின்றோம். தங்கையின் கையிலிருந்த டோச்லைற்றினை வாங்கி அறுகம்புற்களில் வெளிச்சத்தினைப் பாச்சிப் பார்க்கின்றோம். மங்கலான மஞ்சல் வெளிச்சமே பரவுகின்றது. ஒன்றுமே தெரியவில்லை.

www.padippakam.com

பற்றறித் தட்டுப்பாடு. கடைகளில் விற்பதற்கு இந்தியன் ஆமியின் கட்டுப்பாடு, களவாகத்தான் வாங்கவேண்டும். அதனால் பழைய பற்றறியை வெய்யிலில் உலர்த்தி உலர்த்தி எவ்வளவு நாளுக்குத்தான் வெளிச்சம் கொடுக்கமுடியும், தனது இயலாமையினை கண்ணை மின்னி மின்னிக் காட்டுகின்றது. தங்கையின் பாதத்தில் இருந்து இரத்தம் கசிகின்றது. கடப்படியில் நின்று கூப்பிட்ட முறிச்சார் சின்னத்தம்பி "என்ன என்ன...? " என்றவாறு ஓடிவருகின்றார். குரைத்தபடி பாய்ந்த நாயினை அதட்டி நிறுத்துகின்றேன். அவரது டோச்லைற்றில் நல்ல வெளிச்சம் புற்களிற் தேடுகின்றோம். ஒரு அடி நீளமான முத்திரைப் புடையன் குட்டி அசைந்தபடி. தயாராக வைத்திருந்த பூவரசந்தடியால் பதம் பார்க்கப்படுகிறது.

இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால் இரவில் ஊரடங்குச் சட்டம். எப்படி வைத்தியசாலைக்குச் செல்வது? ஒன்றுமே புரியவில்லை. ஆனால் ஏதாவது செய்தே ஆகவேண்டும் மனம் பரபரக்கிறது. சித்தப்பாவின் ஞாபகம் வருகின்றது. முறிச்சாரிடம் சொல்கின்றேன், விடயத்தைச் சித்தப்பாவிட்டைச் சொல்லுங்கோ என்று அவசரப்படுத்துகின்றேன். அவர் விரைந்து ஓட்டமும் நடையுமாகப் போகின்றார். அவர் வந்துதானே தங்கை வெளியிற்போய் பாம்புகடித்தது என்ற குற்ற உணர்வு அவரை உறுத்தி இருக்கவேண்டும். எதுவுமே பேசாமற் போகின்றார். என்ன அவசரத்தேவைக்கு வந்தாரோ தெரியவில்லை அதைவிட அவசரமல்லவா எமக்கு. அதைக் கேட்கவே இல்லை. அவரும் சொல்லவில்லை.

கடித்தது என்ன? என்பதைத் தேடும் களேபரத்தில் முதலுதவி செய்வதை மறந்துவிட்டேன். தக்கசமயத்தில் அம்மா ஞாபகப்படுத்தியதால் கட்டும் போட்டாச்சு. சித்தப்பாவைக் காணவில்லை. கடப்படிமட்டும் செல்கின்றேன். தூரத்தில் மெசின் வெளிச்சம் தெரிகின்றது. நிச்சயம் சித்தப்பாதான்.

பாம்பு கடித்து இறப்பவர்களைவிட பயத்தால் இறப்பவர்கள்தான் அதிகம்பேர் என்று அண்மையில் ஞாயிறு வாரப்பத்திரிகையில் பாம்புக்கடி பற்றி எழுதியிருந்த விஷகடி வைத்தியரின் கூற்று ஞாபகத்திற்கு வந்தபடியால்தான் அம்மாவிடம் புடையன் இல்லை சுருட்டைக்குட்டி என்று வாதிட்டேன். நான் ஏன் அப்படிச் சொல்கின்றேன் என்பதைப் புரிந்து கொள்ளாமலே அம்மா உள்ளார். அதை இப்போது விளங்கப் படுத்துவதற்குரிய தருணமுமில்லை.



படிப்பகம்

பாம்புகள் பிறவற்றின்மீது தாக்குதல் தொடுப்பது இரண்டு விடயங்களுக்காக மட்டுமே. ஒன்று தமது இரையாக நினைத்து, இரண்டாவது தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக. ஒருவருக்குக் கடித்தது இரைக்கடியாயின் விஷம் ஏறுவது மட்டுப்படுவதுடன் காப்பாற்றப்படவும் கூடிய சந்தர்ப்பம் நிறையவே உண்டு. ஆனால் தற்காப்புக்காக கடித்தால் விஷம் ஏறும் வேகம் அதிகமாகவும் காப்பாற்றப்படும் சந்தர்ப்பம் குறைவாகவுமே இருக்கும் என்று விஷகடி வைத்தியர்கள் கூறியுள்ளனர். இரைக்கடியாயின் மயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விஷத்தையே வெளிவிடும். ஆனால் எதிரியென்று கடிக்கும்போது பாய்ந்து கொத்தி தலையைத்திருப்பி விஷப்பற்களின் கீழ் இருக்கும் நச்சுப்பையை உடைத்து விஷத்தினைப்பாச்சும் என்பர். மேலும் நாய்கடித்தது போல் கடிவாய்பிடுங்கப் பட்டிருக்கும். இவ்வறிகுறிகளை வைத்துக்கொண்டு எத்தகைய கடி என்பதை அனுமானிக்க முடியும்.

தங்கைக்குக் கடித்த விதத்தினைப் பார்க்கும்போது அனேகமாக இரைக்கான கடியாகவே தென்படுகின்றது. ஆனால் கடித்தது முத்திரைப் புடையன் குட்டி. இதன் விஷம் மிகவும் மோசமானது. நாகபாம்பின் விஷம் உடனடியாகவே தலைக்கேறிவிடும் தன்மையது. எனவே உடனடியாகவே வைத்தியம் பார்க்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அவ்வளவுதான். புடையன்பாம்பின் விஷம் உடனடியாக வேலைசெய்யாது. ஆனால் மெல்ல மெல்ல ஏறிக்கொண்டே இருக்கும். கடைசி நேரம் வரைக்கும் கவனமாக வைத்தியம் பார்க்கவேண்டும். எனவே தங்கைக்கு வைத்தியம் பார்த்துச் சுகமாக்கமுடியும் என்ற நம்பிக்கையுடன் என்னைத்திடப்படுத்திக் கொண்டிருக்கின்றேன்.

சுருட்டைப்பாம்பு என்பது சிறியது. தேள், பூரான் போன்றவற்றின் அளவு விஷத்தினையும் கொண்டது.அத்தோடு புடையனுக்கும் சுருட்டைக்கும் உருவ ஒற்றுமை நிறையவே உண்டு. எனவேதான் மேற்போக்காப் பார்க்கும்போது வித்தியாசம் தெரிவதில்லை. இருப்பினும் முத்திரைப் புடையன் என்பது தெளிவாகத்தெரியும். பழுப்பு மஞ்சள், கருநீலம் கலந்த முத்திரைகள் மேற்தோலில் பதியப்பட்டு அழகாகத் தோற்றமளிக்கும். இப் பாம்பு சிறிதாகையால் முத்திரை தெளிவாகத் தெரியாதது, ஒற்றை இரட்டை பிடிப்பதற்கு வசதியாகிவிட்டது. கடப்படியில் வைத்தே சுருட்டைதான் என்று சொல்லும்படி சித்தப்பாவிடம் கூறிவிட்டேன்.

"இது சுருட்டைக்குட்டிதான் பயப்படத் தேவையில்லை. இருந்தாலும் ஆசுப்பத்திரியிலை காட்டுவம்."

தங்கையின் முகத்தினைப் பார்க்கின்றேன். அவளது முகத்தில் வேதனைக்கிடையிலும் ஒரு மலர்ச்சி தென்பட்டது. இதுவும் ஒரு முதலுதவிதான் என்றவகையில் நான் திருப்திப்பட்டுக் கொண்டேன்.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்து புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்."

என்ற திருக்குறள் வரிகள் இவ்விடத்திற்கும் பொருந்துவதாகவே உள்ளது.

இயல்பாகவே சித்தப்பா எந்த விடயத்தினையும் பல பக்கங்களில் யோசித்தே முடிவெடுப்பார். இப்போதும் அதில் பிசகவில்லை. எப்படியும் வைத்தியசாலைக்குப் போகவேண்டும். எப்படிப் போவது? ஊரடங்குச் சட்டம். அதுவும் முரசுமோட்டையில் நிற்கும் சீக்கியன் பொல்லாதவன்.

வெடிதான் வைப்பான். போன கிழமை பிரசவத்திற்காக வண்டில்கட்டிப் போனவைக்கு அதுதான் நடந்தது. நல்லகாலம் யாரும் சாகவில்லை. அவ்விடத்தில் ஒரு ஆமிக்காரன் விவேகமாகச் செயற்பட்டு காப்பாற்றி விட்டான் என்று கதைவாக்கில் கேள்விப்பட்டது, இப்பொழுது பயமுறுத்திக் கொண்டிருந்தது.

"ராசன் வெள்ளைக்கொடி கட்டி முன்னுக்கு லாம்பைப் பிடித்துக்கொண்டு, மெள்ள மெள்ள பிலிங்கான் முறிப்புக் குறுக்குப் பாதையால நவஜீவனத்துக்குப் போவம்." சித்தப்பர் தீர்க்கமாக எடுத்த முடிவு எல்லோருக்கும் சரியாகவே பட்டது.

அம்மா வருத்தக்காரி, அவா இங்கை இருக்கட்டும். மைத்துனரும் சித்தியும் வரட்டும். நானெடுத்த முடிவு.

மெசினில் உள்ள 'லோட்வாறில்' ஏணிப்பலகையை இணைத்துக் கட்டி, படங்கினை விரித்து, அதில் ஏறிப் புறப்பட்டோம். சூடடிக்க, நெல்லேற்ற, உழுவதற்கென மெசின் வந்து போய் இருந்தமையால் வயல்களில் வரம்புகளில் கடவான் வெட்டப்பட்டிருந்தன. எனவே குறுக்குப்பாதை கண்டுபிடித்துப் போவதில் சிரமம் இருக்கவில்லை. சித்தப்பருக்கும் எனக்கும் நெஞ்சு படக் படக் என்று அடித்துக்கொண்டாலும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் பயப்படத்தேவையில்லை என்று தைரியம் கூறிக்கொண்டோம்.

தங்கைக்கு அப்போது ஆறு அல்லது ஏழு வயதிருக்க வேண்டும். பொழுதுபடவே பசியென்று அழுது குழறி ஆர்ப்பாட்டம்பண்ணி, தனக்கு விருப்பமான சாப்பாட்டுக்காக எல்லோரையும் பெரும்பாடுபடுத்திவிட்டு, வேளைக்கே நித்திரையாகிவிட்டாள். இரவு எட்டு மணியிருக்கும் நித்திரைப் பாயிலிருந்து வீரிட்டு அலறிக்கேட்டது. எல்லோரும் ஓடிச்சென்று பார்த்தபோது, நட்டுவக்காலி ஒன்று, தங்கையின் கால்விரலில் தனது குறட்டு வாயினைப் பூட்டிக்கொண்டிருந்தது.

சாதாரணமாகவே ஆர்ப்பாட்டம் பண்ணுபவரைக் கேட்கவா வேண்டும், ஊரையே கூட்டிவிட்டார் என்றேசொல்ல வேண்டும். கணுக்காலில் சுண்ணாம்பு வளையம் போட்டு, என்னென்னமோ கைவைத்தியம் எல்லாம் பண்ணியாயிற்று கத்தல் நிற்பதாக இல்லை. அப்பொழுது சத்தம்கேட்டு வந்த பொன்னரப்பாதான் சொன்னார் "வண்டிலைப்பூட்டி உடையாரிட்டைப் போவம்" என்று.

அதைக் கேட்ட உடனேயே தங்கையின் கத்தலின் வேகம் சற்றுக் குறைந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். எமது விவசாயக் கிராமத்திற்கும் அயற்கிராமங்களிற்கும் உள்ள ஒரே ஒரு விஷகடி வைத்தியர் உடையார்தான். முரசுமோட்டையிலிருந்து வட்டக்கச்சிக்குப் போகும் கிரவல் வீதியில் ஐயனார் கோவில் தாண்டி, ஒருமைல் தூரம் சென்றால் வரும் சந்திதான் உடையா வளவடி. அங்கே பூர்வீகமாக சில குடும்பங்கள் வசித்துவந்தன. அவற்றில் தலையாரி வீடுதான் உடையாவளவு. அங்கு பரம்பரை பரம்பரையாக விஷகடி வைத்தியம் பார்த்துவருகின்றார்கள்.

எமது தலைமுறைக்குரிய உடையார் சிறந்த கைராசிக்காரர் என்று பெயர்பெற்றதால் முல்லைத்தீவில் இருந்தும் நோயாளிகள் வருவதாகப் பொன்னரப்பா கூறினார். மாட்டு வண்டியில் போய்ச்சேர இரவு பத்துமணியைத் தாண்டிவிட்டது. ஆனால் உடனடியாகவே வைத்தியர் வந்து, வண்டிலால் இறங்கவிடாமலே தங்கையின் கையைப்பிடித்துப்பார்த்து ஏதோ மந்திரத்தை முணுமுணுத்துவிட்டு, ஒரு மூலிகையைக் கொடுத்து வாயில் சப்பிக்கொண்டிருக்கும்படி கூறி, கடிவாயில் பச்சிலை மருந்தினைக் கட்டி உடனே போகும்படி கூறிவிட்டார். எமக்கு ஒரே ஆச்சரியம். நாம் என்ன கடித்தது என்றே சொல்லவில்லை. அவரும் சொல்வதற்கு இடம் விடவில்லை. தாமாகவே முன்கூட்டியே தெரிந்து கொண்டதுதான்.

திரும்பி வரும்போதுதான் பொன்னரப்பா, வைத்தியர் பற்றி மேலும் சொன்னார். "விஷகடிக்குள்ளான செய்தி சொல்பவரை வைத்தே என்ன

கடித்தது என்பதையும், நோயாளிக்கு வைத்தியம் பார்க்க முடியுமா? இல்லையா? என்பதையும் தெரிந்துகொள்வார். கருடபார்வை மூலம் பாம்புகடித்த ஒருவரின் விஷத்தினை நீக்கும் சக்தி உள்ளவர்" என்றும் வைத்தியர் புராணத்தை வீடு வரும்வரை சொல்லிக்கொண்டே வந்தார்.

இரவு எட்டுமணிக்குமேல் ஆகிவிட்டது. முரசுமோட்டை நவஜீவனம் வைத்தியசாலையை அடைய, பாம்பு கடித்து ஒரு மணிநேரம் கடந்துவிட்டது. தங்கை வலியில் அழுதுகொண்டிருந்தாள். அழவேண்டாம் என்று மைத்துனர் சமாதானம் கூறுவது கேட்டது. நான் குறுக்கிட்டு,

"வேண்டாம், அழட்டும் அப்பிடியே விடுங்கோ."

நான் இரக்கம் இல்லாதவனாகத் தெரிந்திருக்கலாம். ஆனால் பாம்புக்கடிக்கு உள்ளானவர்கள் மயங்கி நித்திரையாகிவிட்டால் விஷம் தலைக்கேறிவிடும். என்பதால்தான் அழுதுகொண்டிருந்தால் நித்திரை கொள்ளமாட்டார் என்றே அப்படிச்சொன்னேன்.

எமது நேரம் போலும் வைத்தியசாலையில் வைத்தியர் இருக்கவில்லை. அங்கிருந்த ஒரு நேர்ஸ்தான் சொன்னார். என்ன செய்வது கிளிநொச்சி வைத்தியசாலைக்குப் போவோமா? என்று யோசிக்கும் போது, அந்த நேர்ஸ் மேலும் சொன்னார்,

"வைத்தியர் வந்தாலும் பாம்புக்கடிக்கு மருந்து இல்லை. கிளிநொச்சிக்குப் போவதும் ஆபத்தானது. விருப்பம் எண்டால் பக்கத்தில ஒரு விஷகடி வைத்தியரம்மா இருக்கிறா காட்டிப்பாருங்கோ. போனகிழமை எனது சகோதரிக்குப் பாம்பு கடித்து, அவரிடம் காட்டித்தான் சுகப்படுத்தினார்."

நடுக்காட்டில் வழிதவறவிட்டு, பலபாதைகளால் சென்ற போதிலும் ஆரம்பித்த இடத்திலே வந்துநின்று திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் போது, வழிகாட்டி ஒருவர் கிடைத்தபோது அடையும் மகிழ்ச்சி எமக்கு. எமக்குள்ள ஒரே வழி அதுவாகவே தென்பட்டது. அந்த விஷகடி வைத்தியரம்மா வீட்டினை நோக்கிச் சித்தப்பா மெசினைத் திருப்பினார்.

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் அமைந்துள்ள முரசுமோட்டையில் இருந்து குன்றும் குழியுமான உள்வீதியில் சுமார் இரண்டுமைல் தூரத்தில் எமது உடுப்பாற்றுக்கண்டல் விவசாயக்கிராமம் அமைந்துள்ளது.

எங்குபார்த்தாலும் வயல்வெளிகளும் அத்தோடு ஒட்டி சிறிய மேட்டு நிலமும் அமைந்திருக்கும். அதில்தான் வீடுகள். ஒவ்வொரு வீட்டிற்கும் இடையில் கண்மறையும் தூரம் இருக்கும்.

சுமார் இருபத்தைந்து வீடுகள் மட்டிற்தான் இருக்கும். மீதம் எல்லாம் வயல்வெளிகள். வயற் சொந்தக்காரர்கள் யாழ்ப்பாணத்திலும் வேறு இடங்களிலும் வசித்துவந்தனர். விதைப்பு, அரிவிவெட்டு, சூடுமிதிப்பு என முக்கியமான வேலைகளின்போது மட்டுமே பிரசன்னமாவர். மற்றப்படி வாடிகளுக்கு அவர்கள் வரமாட்டார்கள். நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள் மட்டுமே தோட்டம் துரவு, மாடுகன்று என்று தமது சீவாதாரத்தினை ஓட்டுவதோடு, கிராமத்தினையும் செழிப்பாக்கிக்கொள்வர். கிராமத்திற்கு வீதி, மின்சாரம், போக்குவரத்து என்று எவ்விதமான பொதுவசதிகளோ அபிவிருத்திகளோ இல்லை. இன்னமும் டச்சுக்காலம் போலவே அனைத்தும்.

அரசியல்வாதிகளும் பிரமுகர்களும் தேவைக்குமட்டும் தலைகாட்டுவர். போதாக்குறைக்கு இனப்பிரச்சனை என்று தொடங்கி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினை அடுத்துவந்த அமைதிகாக்கும் படையுடன் யுத்தமும் ஆரம்பித்தபின் அடிக்கடி சுற்றிவளைப்பும், கைதுகளும் எனக் கெடுபிடிகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

அமைதிப்படையாய் வந்த இந்தியப்படைகள் இப்பொழுது மக்களின் அன்றாட வாழ்வில் இடர்ப்படையாய் மாறிவிட்ட கதைக்கான கதைபற்றி யாரும் அலட்டிக்கொள்வதாகத் தெரியவில்லை. சுட்டால், செத்தால் அதற்கு மறுத்தானாக சுடுதலும் சாக்காட்டுதலும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. எமது கிராமத்தினைப் பொறுத்தவரையில் மனிதர்களுக்கு மட்டுமல்ல விஷ ஜந்துகளுக்கும் பகலிலும் இரவிலும் பயந்து, உயிர்விட்டு வாழ்தலை வேள்வியாய்த் தொடர்கின்றோம்.

நவஜீவனச் சந்தியிலிருந்து வெகுதூரத்தில் இல்லை. அண்மையில்தான் விஷகடி வைத்தியரம்மா வீடு, வீட்டைக் கண்டுபிடிக்கச் சிறிது கஷ்டப்பட வேண்டியிருந்தது. பிரதான கிரவல் வீதியிலிருந்து கூப்பிடு தொலைவுக்கு வாய்க்காலுடன் ஒட்டியமைந்திருந்த மண் ஒழுங்கை முடிவில் வீடு இருந்தது. ஒழுங்கைமுடியும் முகப்பில் சித்தப்பா மெசினை நிற்பாட்டினார்.

ஒழுங்கை தொடங்கும் சந்தியில் வைத்தியரின் வீட்டினை விசாரித்தோம். எமக்கு வழிகாட்டிய ஆச்சியே வைத்தியர் வீட்டிற்கும்

குறுக்குப்பாதையால் சென்றுவிட்டார். விஷகடி வைத்தியரம்மாவுடன் அந்த ஆச்சியும் வந்துகொண்டிருந்தார்.

நடுத்தரமான வயதுடைய ஒரு அம்மா விபூதிப்பூச்சுடன் எம்முன் வந்துநின்றார். பாம்பு கடித்து ஒன்றரை மணியினையும் கடந்து, தங்கையின் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. தக்க சமயத்தில் வைத்தியரைக் கண்டதில் எமக்கு ஒரு நம்பிக்கைக் கீற்றுத் தென்பட்டது.

வைத்தியரம்மா யாருடனும் பேசவில்லை. தங்கையின் இரண்டு விழிகளையும் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, பக்கத்தில் நின்ற வேப்பம் மரத்தில் இரண்டு துளிர்களைப் பிடுங்கிச் சப்பும்படி கொடுத்தார். மெதுவாச் சப்பினார்.

“இனிக்குதோ கசக்குதோ?.” வைத்தியரம்மாவின் கேள்வி.

“இனிக்குது” மேற்கொண்டு எதுவும் பேசமுடியாமல் தங்கை மயங்கிவிட்டார். இவ்வளவு நேரமும் விழித்திருந்த தங்கை சோர்ந்துவிட்டார். எமக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வைத்தியரின் முகத்தினைப் பார்க்கின்றோம். அவர் பேசாமல் மௌனமாக நிற்கின்றார். அவரது மௌனம் எமக்கு பயத்தினையே தோற்றுவித்தது. வேப்பம் துளிர் சப்பினால் சாதாரணமாய்க் கசக்கத்தான் வேண்டும். ஆனால் தங்கைக்கு இனிக்கிறது. இதன் பொருளைச் சொல்லாமலே வைத்தியர் சொல்கிறாரா? சற்றுநேர மௌனத்தின் பின்

“இனிமேல் வைத்தியம்பார்ப்பதில் பயனில்லை. வீட்டை கொண்டு போங்கோ.”

எம்மைப் பார்க்காமலே கூறுகின்றார் வைத்தியரம்மாவின் வார்த்தைகள் மரணச் செய்தியாய் எம்மையெல்லாம் உலுப்பி எடுத்து விட்டது. நாம்பட்ட இதய வேதனையை வார்த்தைகளில் வடிக்கமுடியாது.

நானும் சித்தப்பாவும் வைத்தியரை மன்றாடினோம், எப்படியும் வைத்தியம் பாருங்கோ. உங்களை விட்டால் இப்போது யார் இருக்கிறார்கள். என்ன நடந்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் வராமல் நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம், என்று பலவாறு எடுத்துக்கூறி மன்றாடியபோது, அவரது முகபாவம் சிறிது மாறுகின்றதை அவதானித்தோம்.

"கொஞ்சம் பொறுங்கோ வாறன்."

தனது வீட்டினை நோக்கி விரைந்து ஓடுகின்றார். அதேவேகத்தில் திரும்பி வருகின்றார். கையில் சிறிய ஒரு குப்பிப் போத்தல் இருக்கிறது. அதனைக் குலுக்கி தங்கையின் மூக்குத்துவாரம் இரண்டிலும் மாறி மாறிப் பிடிக்கின்றார். சில கணப்பொழுதில் மயங்கிக்கிடந்த தங்கை விழித்துப்பார்க்கின்றார்.

துயரத்தின் உச்சத்தில் உறைந்துபோன எமக்கு மறுஜென்மம் கிடைத்த மகிழ்ச்சியில் நெகிழ்ந்து போனாலும், வைத்தியர் என்ன சொல்வாரோ என்ற வினாவுடன் அவர் முகத்தினைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றோம். ஒரு நிமிட நேர நிஷ்டையின்பின், "உங்களின் வற்புறுத்தலுக்காகச் சம்மதிக்கிறன். இதில் நான் தோற்றுப்போனால் இனிமேல் வைத்தியமே பார்ப்பதில்லை."

மிகவும் தீர்க்கமான முடிவினை அறிவிக்கின்றார். எனது தங்கையின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தனது வைத்தியத்தினையே பணயம் வைப்பது அதிர்ச்சியை அளிக்கின்றது. இருப்பினும் எமது சூழ்நிலை அந்த முடிவிற்குக் கட்டுப்பட வேண்டியதாயிற்று. வார்த்தைகள் ஏதுமின்றி மௌனித்து நிற்கின்றோம்.

வைத்தியரின் கட்டளைப்படி அவசர அவசரமான இதரை வாழைக்குட்டி ஒன்று வெட்டிவரப்பட்டு, சாறு பிழிந்து பருக்கப்படுகின்றது. மீண்டும் தனது கையில் இருந்த மின்சாரத்தைலக் குப்பியைக் குலுக்கி மூக்குத்துவாரம் இரண்டிலும் 'நையம்' அடிக்கின்றார். கூரை ஓடு ஒன்றினை உடைத்து கடிவாயில் வைக்கின்றார். முதலுதவிக்கட்டு அவிழ்க்கப்படுகிறது.

வீட்டுக்குள் சென்று அவசரஅவசரமாக மூலிகைகள் சேர்த்த குடிநீர் தயாரிக்கப்பட்டு, குடிக்கக் கொடுக்கப்படுகிறது. இத்தனைக்கும்பின் தங்கை பூரணமாகக் கண்விழித்து எம்மைப் பார்க்கின்றார் அத்தோடு அவருக்கு எம்மை அடையாளம் தெரிகின்றது. சித்தியின் மடியில் தலைவைத்துப் படுத்திருக்கின்றார். எமக்கு நம்பிக்கை ஒளிக்கீற்றுக்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தென்படுகின்றன.

மெசினைவிட்டுத் தங்கையை வைத்தியரம்மா வீட்டுக்குத் தூக்கிவந்ததில் இருந்து எல்லாமே இயந்திரத்தனமாகவே நடந்து முடிந்துவிட்டன. இப்போதுதான் வைத்தியரம்மாவின் வீட்டினைப்

பார்க்கின்றேன். வீடு என்று சொல்வதற்கு எவ்விதமான வசதிகளும் இல்லை. ஒரு ஓலைக் கொட்டில் என்றே சொல்ல வேண்டும். மண்தரை நேர்த்தியாகச் சாணிகொண்டு மெழுகப்பட்டிருக்கின்றது. சிறிய ஒரு அறை ஓலையால் அடைக்கப்பட்டிருக்கிறது. முன்னுக்கு மண்ணால் அமைக்கப்பட்ட திண்ணை ஒன்று. அதில்தான் நாம் இருக்கின்றோம். தாழ்வாரத்தில் கல்லடுப்பு ஓட்டை ஒடிசலான மண்சட்டி பானைகளும் சிறிய சருவச்சட்டிகளும் போத்தல்களும் காட்சியளிக்கின்றன. அங்கே ஒழுங்காகச் சமையல் நடைபெறுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. வறுமையின் அவலம் பார்த்தாலே தெரிகின்றது. சிறிய ஒரு மகள் மட்டும் தாய்க்கு உதவிசெய்துவிட்டு ஆழ்ந்த உறக்கத்தில்.

"இனித்தான் கவனமாக இருக்கவேண்டும். விடியும்வரை கண்ணயர விடக்கூடாது. கண்ணயர்ந்தால் அவ்வளவுதான்."

வைத்தியரின் அறிவுரையுடன் கூடிய எச்சரிக்கை எம்மைப் பயமுறுத்துகின்றது. விஷகடிக்கு உள்ளானவர் நித்திரையானால் விஷம் தலைக்கு ஏறி, இரத்த ஓட்டத்தில் கலந்துவிடும் என்பதால் நித்திரை கொள்ளாமற் பார்ப்பதற்காக கண்ணுக்குக் 'கலிங்கம்' வைப்பார்கள் என்று கேள்விப் பட்டதுண்டு. இப்பொழுது யதார்த்தமாகிக் கொண்டிருந்தது. விளக்கெண்ணை சிறிதளவு எடுத்து தங்கையின் கண்கள் இரண்டுக்கும் பூசப்பட்டது. அதன் எரிச்சலால் தங்கை கண்களை மூடிமூடிச் சிமிட்டிப் படுகின்ற அவஸ்த்தை சொல்லும் தரமன்று.

மைத்துனரும் சித்தி சித்தப்பா மூவரும் பாசவலையில் சிக்குண்டு மீளமுடியாமல் தவிப்பது தெரியக்கூடியதாக இருந்தது. என்னைப் பொறுத்தவரையில் இப்போதைய கடமை என்ன என்பதிலேயே கவனமாக இருந்தேன். வைத்தியர் சொன்னபடி நித்திரை கொள்ளாமல் விடியும் வரை வைத்திருக்க வேண்டும். அதற்காகக் கடுமையாக நடந்துகொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியிருந்தேன். நித்திரை கொள்ளவிடும்படி கண்களால் மன்றாடியது மனதைப்பிழிந்தெடுத்தது. இருப்பினும் அதற்கு இணங்க முடியவில்லை. காரணம் தற்காலிக நிவாரணம் மீளமுடியாத துன்பத்திற்கு வழிகோலிவிடும் என்பதேயாம்.

நள்ளிரவையும் தாண்டிவிட்டது. கடிவாயில் வைத்த ஓட்டினை அடிக்கடி மாற்றிக் கொண்டேயிருந்தார் வைத்தியர். அத்துடன் பிரதானமாக மிளகுடன் சேர்ந்த மூலிகைக் 'கசாயம்' பருகக் கொடுக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து மின்சாரத்தைலத்திலான நையமடிப்பும் தொடர்ந்து

கொண்டே இருந்தன.

முன்பு ஒருநாள் பகல் நேரம் வெங்காயம் தாட்டுக்கொண்டிருக்கும் பொழுது, பழைய கம்பிக் கட்டையில் உள்ள பட்டையை உரிக்கப்போய் அதில் இருந்த பூரான் காலில் கடித்து, நான்பட்ட வேதனை சொல்லும் தரமல்ல. வேதனையில் பரதநாட்டியம், குச்சுப்புடி எல்லாம் ஆடிமுடித்து விட்டேன் என்று அம்மா சொல்லிச் சிரிப்பதுண்டு. விஷம் ஏற ஏற விண்... விண் என்று வலித்துக்கொண்டே இருக்கும். வேதனையின் உச்சத்தினை அளவிட முடியாது என்பதை அப்பொழுதுதான் அனுபவமூலமாக உணர்ந்து கொண்டேன். தோட்டத்தில் உள்ள கத்தரிக்காயைப் பிடுங்கி, நெருப்பில் சுட்டெடுத்து லேசான சூட்டுடன் பூரான் கடித்த இடத்தில் கட்டியபோதுதான் ஏறியவிஷம் மீண்டும் விண் விண் என்று கத்தரிக்காய் இழுத்தெடுப்பதை உணரமுடிந்தது. சாதாரணமாகப் பூரான் கடித்ததற்கே அந்தப்பாடு என்றால், இன்று பாம்பு கடித்ததற்குத் தங்கைபடும் பாடு.. நினைக்கவே மனங்கிறுங்கியது.

நிலம்வெளித்துவிட்டது. வைத்தியர் குடிநீருடன் வருகின்றார். அவரது முகத்தில் மலர்ச்சி காணப்பட்டது.

“சொன்னபடி நித்திரை கொள்ளாமல் இருந்ததால இனிமேல் எந்தப் பிரச்சனையும் இல்லைத் தம்பி. இன்னும் இரண்டு மணித்தியாலத்தால நித்திரை கொள்ளலாம்.”

வைத்தியரின் வார்த்தைகள் சர்க்கரைப் பொங்கலாய் இனித்தன. மனதார நன்றியினைத் தெரிவித்துக் கொண்டேன்.

பாம்பு கடித்த காலின் அடிப்பாதம் வீங்கி கறுத்துப் போய்க் கிடக்கின்றது. பாம்பு கடித்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. விஷகடி வைத்தியரம்மா வீட்டிற்தான் தங்கைக்குத் தொடர்ந்து வைத்தியம். சாமை அரிசியில் பத்தியச் சாப்பாடு கொடுத்தபின்தான் வீட்டுக்குப் போகவேண்டும் என்பது அவரது கண்டிப்பான வேண்டுகோள். அதனை எம்மால் மீற முடிய்வில்லை. வைத்தியரம்மாவின் விருப்பப்படியே யாவும் நடைபெற்றன.

***( கதைக்கான களம் - 1988 )***
**புதுவசந்தம்** - *2009 மார்கழி*

www.padippakam.com

# தியாகம்

பால் நிலவு வெளிச்சத்தில் பச்சைப் புல்வெளி, பறுகுப்பற்றைகள், இரைதேடும் ஆக்காட்டி எல்லாம் துல்லியமாகத் தெரிந்தன. ஆற்று ஓடை அருகே மிருகங்கள் போய்வரும் அதன்வழியை இலக்குவைத்து, சூரனும் சோமரும் பூநாறிப்பற்றை நிழலில் பதுங்கி, பதினாறாம் நம்பர் வில்சியம்கொட் துவக்குடன் வேட்டைக்குத் தயார்நிலையில் இருந்தனர்.

ஆக்காட்டி ஒன்று வீரிட்டுக் கத்திக்கொண்டு சூரைப் பற்றைக்குமேல் எழும்பி வட்டமிட்டது. உசாரடைந்து துவக்கினை இலக்கு அணைப்பதற்கு அவகாசம் கொடுக்காது பெரிய பன்றி ஒன்று பற்றையை இடறிக்கொண்டு ஓடிவிட்டது. சா என்று இருவரும் ஏககாலத்தில் சப்புக்கொட்டினர். சூரன் சோமருடன் மெல்ல புறுபுறுத்துக் கொண்டான்.

"தூரத்திலேயே வெடிவைக்க விடேல்லையே? கிட்டவரட்டும் என்று தடுத்து, இப்ப தனியனை தவறவிட்டுட்டம்."

சோமரால் ஒன்றும் சொல்லமுடியவில்லை. அடுத்து ஏதாவது வருகிறதா என்று பார்த்துக்கொண்டிருந்தார். ஆனாலும் அவரது சிந்தனை, எப்படி நாம் இருப்பதை வாடைபிடித்தது என்பதாகவே இருந்தது. வேட்டையாடுவதில் முதலாவது நுணுக்கமே வேட்டைக்காரனின் வாடை மிருகங்களுக்குப் பிடிபடக்கூடாதது என்பதேயாகும். அதற்காகவே காட்டுக்குள் இறங்கும் பொழுது காற்று வீசும் திசையினைத் தெரிந்து, கீழ்காற்றுப் பக்கத்தில் இருந்தே நுழைய வேண்டும். அப்பொழுது ஆட்களின் வாடை அவற்றுக்குப் படாமல், மிருகங்களின் வாடை வேட்டைக் காரருக்குப்படும். துறைபோன வேட்டைக்காரர் தூரத்தில் வைத்தே வாடையைக் கொண்டு இரை ஒன்றுக்கான இலக்கினை எட்டிவிடுவார். சோமரின் கணிப்பின்படி கீழ்க்கைப்பக்கத்தில், அதுவும் பூநாறிப் பற்றைக்குக் கீழ் இருக்கும் போது, அதன் வாசத்தை மீறி எமது வாடையை எப்படி பன்றியால் இனம்காண முடிந்தது என்பதே.

சூரைப் பற்றைக்கு மேல் வட்டமிட்ட ஆக்காட்டி இன்னமும் தரைக்கு இறங்கவில்லை. சோமர் உசாராகிவிட்டார்.

"சூரன், ஏதோ வருகுது போல இருக்கு கவனம்" சோமர் சொல்லி முடிக்கவில்லை. சூரன் துவக்கின் சாவலை தட்டிவிட்டான் அடுத்தகணம்,

டுமீல்...

"ஐயோ! அம்மா... "

முதல்வந்த தனியனை தவறவிட்ட எச்சரிக்கையில், பற்றைக்குள்



படிப்பகம்

புள்ளியாகத் தெரிந்த உருவத்தை நோக்கி குறிவைத்து சுட்டுவிட்டான் வீரன். அது அடுத்த பன்றி என்ற நினைப்புடன். அனேகமாகத் தனியன் பன்றிக்குப் பின்னாலே கிளைப்பன்றிகளும், சில வேளை மரையும் வருவதுண்டு அந்தக் கணிப்புத்தான் . ஆனால் ... தப்பாகி விட்டது. அவலக்குரல் கேட்டு ஓடிப்போன சோமர் செய்வதறியாது திகைத்துப் போய் நின்றார்.

சறம்கூட உடுத்தாமல் ஜட்டியுடன், தடித்த கரியமனிதன். தொடையிலிருந்து குபு குபு என இரத்தம் கொப்பளிக்க ஈனக்குரலில் முனகிக்கொண்டிருந்தான்.

"ஓடாதே நில் ஓடினால் சுடுவன்"

சூடுபட்டு விழுந்தவனை அடுத்து, அவனின் கோலத்தில் வந்த இன்னொரு தடித்த முரட்டு ஆசாமி துவக்கினை நீட்டிப் பிடித்தபடி சோமருக்குக் கிட்டவந்தான். சோமருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பூநாறிப் பற்றைக்குள் மறைந்திருந்த சூரன் நிலைமையின் விபரீதத்தினைப் புரிந்துகொண்டு, துவக்கினை அப்படியே விட்டு விட்டு நைசாக நழுவிவிட்டான். பெயரில் மட்டுமல்ல உண்மையிலும் அவன் சூரன்தான்.

இயல்பாகவே உரத்தே பேசத்தெரியாத, இளகிய மனம் கொண்ட சோமர் நடந்த அவலத்திற்காக உளமாரத் துக்கப்பட்டார். இரத்தம் பெருக்கெடுத்து ஓட, உயிருக்காகப் போராடும் ஒருவனுக்கு முதலுதவி அளித்து காப்பாற்றுவதா, யாரில் பிழை சரி என்று விவாதிப்பதற்கு ஏற்ற தருணமா இதுவெனச் சிந்தித்த சோமர்.

"நான்தான் சுட்டனான் ஆனால் ஆள் எண்டு தெரியாமல்... "

மிக நிதானமாக அவனிடம் கூறினார் சோமர். அவன் அவர் கூறியதில் திருப்திப் பட்டிருக்க வேண்டும். காரணம் பன்றிக்கு வைக்கும் வெடி இரண்டு அடிக்கு மேல் உயராது ஆளுக்கு வைப்பதாயின் நெஞ்சிலேயே வெடி பட்டிருக்க வேண்டும். உடனடியாக தலைப்பாவாகக் கட்டியிருந்த சாரத்தினை அவிழ்த்து, இரத்தம் வழியாமல் தொடையிற் கட்டுப் போட்டான். ஆனால் இரத்தம் நிற்பதாக இல்லை சோமர் கட்டியிருந்த நாலுமுழ வேட்டியினையும் அவிழ்த்து கட்டுப் போட்டதில் ஓரளவு கசிவுடன் கட்டுப்பட்டது. உடனடியாகவே இருவரும் சேர்ந்து தூக்கி வீதிக்குச் சென்று. காவல் கொட்டிலில் நின்றவர்களுடைய உதவியுடன் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல நிலம் வெளித்துவிட்டது.

நிலவு வெளிச்சத்தில் உடுப்புடன் போனால் மிருகங்கள் இனங்காணும் என்று, உடுப்பில்லாமல் மச்சானும் மச்சானுமாக வேட்டையாட வந்ததின்

எதிர்விளைவே இத்தனைக்கும் காரணம். அனேகமாக இருட்டில் வேட்டைக்குப் போவோர் டோச்லயிட்டுடன் போவார்கள். அந்தலைற்றுக்கு ஆறு பற்றரிகள் போடுவதாக இருக்கும். அவ்வளவு பவர் இருந்தால்தான் மிருகங்கள் அந்தவெளிச்சத்தைப் பார்த்துக் கண்குத்தி நிற்கும், இரண்டு மின்குமிழ்கள் மின்னுவதுபோல் வேட்டைக்காரருக்குத் தெரியும் அதனைக் குறிவைத்து, வேட்டையாடுவார்கள். அங்கு வேட்டைக் காரர்களுக்குள் இடையில் குறுக்குறுப்பு ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை ஆனால் நிலவு வேட்டை என்பது ஆபத்தானது அனேகமாக ஒளிகட்டி ஓரிடத்தில் பதுங்கி இருந்தே வேட்டை ஆடுவர். இங்கு வேட்டைக்காரருக்குரிய எழுதப்படாத விதி பின்பற்றப்படவில்லை. அதற்காக நடந்ததை சரியென்று நூறுவீதம் நியாயப்படுத்தவும் முடியாது. விடயம் அறிந்து ஆஸ்பத்திரிக்குவந்த சோமரின் கொக்கோ மாமா அனைத்துப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டு, சோமரை வீட்டுக்கு அனுப்பி விட்டார். காரணம் சோமர் நின்றால் கட்டாயம் பொலிஸ் கைதுபண்ணி மறியலில் வைப்பார்கள் என்பதனாலேயே.

சோமரும் கொக்கோ மாமாவும் சேர்ந்தே பூநகரிப்பகுதியில் உள்ள தியாகம் என்னும் இடத்தில் பத்து ஏக்கர் நெல்வயலைக் குத்தகைக்கு எடுத்து விதைத்தார்கள் கொக்கோ மாமாவின் பெறாமகன் நீவிலில் வசித்துவந்தான். அந்தத் தொடர்பாலேயே இவ்வயல் குத்தகைக்குத் கிடைத்தது. ஆரம்பத்தில் நீவிலில் தங்கியே வயல் வேலைகள் செய்துவந்தனர். கொக்கோ மாமாவின் பெறாமகனும் மருமகளுமே செல்வர், குஞ்சம்மா எனும் குடும்பம். அவர்கள் மிகவும் அன்னியோனியமாகவும் எளிமையாகவும் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கும் பிள்ளைகள் இல்லை ஆதலால் வீட்டுக்கு யாராவது வந்துவிட்டால் அவர்களை வரவேற்று உபசரிப்பதில் தனியின்பம் காண்பர். இது சோமருக்கும் கொக்கோ மாமாவுக்கும் வசதியாகப் போய்விட்டது. சாப்பாடும் இராத்தங்கலும் அங்குதான். பின்னர் நெற்காணியில், காட்டுக்கரை வேலிக்குக் கிட்டவாக உள்ள ஒரு புற்றுப்பிட்டியில் விடுதி ஒன்று அமைத்துக் கொண்டனர்.

குஞ்சுப்பரந்தனில் இருந்து முழங்காவில் வீதியில் மூன்று நான்கு மைல் தூரம் சென்று பூநகரிப்பக்கம் செல்லும் பாதையில்தான் நீவில் எனும் விவசாயக்கிராமம் உண்டு. அதற்கு அடுத்ததாக செப்பனிடப்படாத வீதியில் காடுகளும் நிறைந்த இடம்தான் தியாகம் எனும் வயற்காடு. அதனையும் தாண்டியே பூநகரி கிராமம் இருக்கிறது. பூநகரிக்கு இது காட்டுப்பக்கம் என்று கூறலாம். நீர்ப்பாசன வசதி இல்லை. எல்லாம் மானாவாரியாக காலபோக விதைப்பு மட்டுமே செய்கை பண்ண முடியும். ஆற்றங்கரையில் காணி உள்ளவர்கள் தோட்டம் செய்ய முடியும். வேறு விதத்தில் வீதி, போக்குவரத்து, மின்சாரம் என ஒரு வசதியுமோ இல்லை. ஆறு மைல்களுக்கு

அப்பால் உள்ள பரந்தன், கிளிநொச்சிக்கே அனைத்துத் தேவைகளுக்கும் செல்லவேண்டும். நிலச் சொந்தக்காரர்கள் சொந்த வாகனங்களின் விதைப்பு, அறுப்புக்கு மட்டும் வருடத்திற்கு இருமுறை வந்துபோவார்கள். மற்றப்படி சாதாரண கூலித்தொழிலாளர்களும் ஏழ்மைப்பட்ட சிறுநில விவசாயிகள் மட்டுமே அங்கு மண்ணோடு மண்ணாக வாழ்கின்றார்கள்.

சோமரும் கொக்கோ மாமாவும் கண்டாவளையில் நான்கு ஏக்கர் வயல்நிலங்களைக் கொண்டிருந்த போதிலும் இந்தவருடம் பத்து ஏக்கர் நெல்வயற்காணியைக் குத்தகைக்கு எடுத்து, பொருளாதார நிலையில் உயர வேண்டும் என்பதற்காகவே மிகவும் சிரமப்பட்டு வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டிச் சிக்கனமாகவும் கடின உழைப்பினையும் நம்பி, இப்பொழுது நல்லமுறையில் நெல்விதைத்து நெற்கதிர்கள் முற்றி மஞ்சள் நிறமாக மாறிக் கொண்டிருக்கும் பருவம். இக்காலத்தில்தான் பன்றி போன்ற மிருகங்கள் மிகவும் விருப்புடன் தமது கைவரிசையை இல்லை வாய்வரிசையைக் காட்டும் நேரம். பகலில் கிளி, குரங்கு என்பவற்றில் இருந்தும் இரவில் பன்றி, குழுமாடு, யானை என்பவற்றிலிருந்தும், காவாந்து பண்ணுவதற்கு, வயலில் நான்கு மூலைகளிலும் காவற் கொட்டில் போட்டு, விழித்திருக்க வேண்டும். அவ்வாறான உதவிக்காகவே சோமர் சூரனையும் துணைக்குவைத்துக் கொண்டார். முதல் நாள் பன்றிகள் வந்து வயலில் ஒரு பாத்தியினை முற்றாக நாசம் பண்ணிவிட்டன. எனவேதான் பன்றிவரும் ஆற்றோடை அருகில் வந்து காத்திருந்தனர். அப்பொழுதுதான் விபரீதம் நடந்து விட்டது. இனியென்ன நடக்கப் போகுதோ என்பது சோமரின் கவலையாக இருந்தது. நேராகக் கண்டாவளையில் உள்ள தோட்ட விடுதியில் படுத்தவர்தான் எழும்பவே இல்லை. முதல்நாள் அதிகாலையில் சம்பவம் நடந்ததில் இருந்து, உடல் ரீதியாவும், உளரீதியாகவும் பட்டதுன்பம் சொல்லும்தரமா?

கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவரின் வலது தொடையில் குண்டடிபட்டதால் எலும்பு முறிவடைந்துவிட்டது. அதைத்தவிர விபரீதம் எதுவும் நடக்கவில்லை ஆற்று ஓடைக்குள்ளால் குனிந்துவந்தவன் வெடிபடும் தருணத்தில் நிமிர்ந்து விட்டான். அதுதான் அவனின் அதிஷ்டமோ சோமரின் அதிஷ்டமோ தெரியவில்லை. இரத்தப்பெருக்கில்லாமல் தடுத்தபடியால் உயிராபத்துத் தவிர்க்கப் பட்டதுடன், ஆஸ்பத்திரியில் காயத்துக்கும் எலும்புமுறிவுக்குமே வைத்தியம் பார்க்கப்பட்டது.

கொக்கோ மாமா இப்படியான கிறிமினல் விடயங்களைக் கையாள்வதில் அவர்க்கு நிகர் அவர்தான். யாரைப் பிடிக்க வேண்டும் எப்படி அலுவல் பார்க்க வேண்டும் என்பதில் சமர்த்தர் என்பதால் இவ் விடயத்தினையும் மிகவும் சாதுர்யமாகக் கையாள்கின்றார். முதலில்

www.padippakam.com

வெடிபட்டவனின் மைத்துனனை சமாதானம் பண்ணி விட்டார்.

'தம்பி நடந்தது நடந்துவிட்டது, இது வேணுமெண்டு செய்யல்ல எண்டு உமக்கே தெரியும். இதைப் பிரச்சனை ஆக்காமல் சமாதானமாக பேசித் தீர்த்துக் கொள்ளுவம், கட்டுத்துவக்கு வெடிச்சது என்று பொலிசிலை சொல்லுவம், மீதியை நான் பார்த்துக் கொள்ளுறன்.'

வெடிபட்டவரும் அவரது மைத்துனரும் பூநகரி கிராமத்தின் கூலி விவசாயிகள். சொந்தமாக நிலம் இல்லை. விவசாயம் செய்யமுடியாத சவர்த்தரையில் அவர்களது வீடு உள்ளது. கிடைக்கின்ற கூலித்தொழில் போக வேட்டை ஆடுதலையே பிரதான தொழிலாகக் கொண்டவர்கள். அதற்குமேல் அவர்கள் குறிப்பிடும்படியான பிரபலங்கள் அல்ல. இரண்டு தங்கைகள் வயதான தாயார் அவ்வளவுதான் வெடிபட்டவனின் குடும்பம். அடுத்த நேரம் அடுப்பெரிவதற்கு அவர்கள் ஏதாவது தேடவேண்டும். இந்தப் பொருளாதாரப் பலவீனத்தினைக் கொக்கோ மாமா பயன்படுத்திக்கொண்டார் என்றாலும் வேறுவிதத்தில் அவர்கள் பொலிஸ், வழக்கு என்று போனாலும் வீண்செலவும் கஷ்டமுமே மிஞ்சும் என்பதால் சமாதானத்திற்கு ஒத்துக்கொண்டனர்.

பொலிஸ் விசாரணைகள் எப்படி நடைபெறுமோ அப்படியே அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டு, பூசைகள், மடைகள் நடந்தேறி ஐம்பதினாயிரம் அளவில் முடிந்துவிட்டது. சோமரின் வீட்டில், தகப்பனின் வீட்டில் உள்ள நகைகள் எல்லாம் அடைவுகடையில் தஞ்சம் புகுந்துகொண்டன. வெடிபட்டவரின் ஊரவர்கள் அயல் கிராமத்தில் இருந்ததால் உடனடியாக அங்கு செல்லவில்லை. அந்த ஊட்டில் முற்றிய நெற்கதிர்கள் எல்லாம் காட்டுமிருகங்களும், பறவைகளும் குத்தகைக்கு எடுத்துக்கொண்டன. அதுதான் சாட்டெனா அருகில் உள்ளவர்களும் எரிந்த வீட்டில் பிடுங்கியது மீதமெனப் பங்குபோட்டுக் கொண்டனர்.

சோமர் தனது உழைப்பில் சேமித்தவை எல்லாம் கரைந்து கொண்டிருந்தன. வழக்கு முடியும் வரை சட்டத்தரணிக்குரிய கட்டணம், போக்குவரத்து, சாப்பாடு, குடும்பப் பராமரிப்பு எனத் தாபரிப்புச் செலுத்தவேண்டிய கட்டாயம். பத்து ஏக்கர் குத்தகை வயலைச் சொந்தக்காரர் தனக்குரிய குத்தகையைக் கட்டச்சொல்லிவேறு கரைச்சல். முற்பணமாகக் கொடுத்த பணமும் திருப்பிக் கொடுக்காமல் குத்தகை ஒப்பந்தத்தினையும் முறித்துக்கொண்டார். கொக்கோ மாமா உதவிக்குப் பங்குக்குப் போனவர் என்றவகையில் இலாபம் இல்லாமல், உடலுழைப்புடன் தப்பிக்கொண்டார். சோமர் உள்ளதும் இழந்து, 'தியாகம்' செய்யப் போய் தியாகியாகி நிற்கின்றார்.

***( கதைக்கான களம் - 1976 )***



படிப்பகம்

# வைரவி ஆச்சி

"அங்க பாற்ரி, கடப்படியில நிண்டுகொண்டு ஒருத்தன் என்னை வரச்சொல்லிக் கைகாட்டிறான்".

வைரவி ஆச்சி அம்மாவிடம் அவ்வார்த்தைகளையே திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருக்கின்றார். அம்மா அதனைக் கணக்கிலெடுத்ததாகத் தெரியவில்லை, தன்னுடைய வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மாலை நாலுமணியைத் தாண்டியிருக்க வேண்டும் சைக்கிளை முற்றத்தில் நிறுத்திவிட்டு, வீட்டுக்குள் நுழைந்த எனக்கு வீட்டுவாசலில் இருந்து வைரவி ஆச்சி சொல்லிக்கொண்டிருப்பது காதில் விழுந்தது.

கடப்பினைத் தாண்டித்தான் இப்பொழுது நான் வந்திருக்கின்றேன். அங்கே ஒரு குருவிகூட இருந்ததற்கான அடையாளம் இல்லை. ஆனால் வைரவி ஆச்சி மிக்க உறுதியோடு மீண்டும் அதனையே கூறுவது மட்டுமல்ல. அம்மாதான் அவனை வரச்சொல்லி தன்னைக் கடத்தப்பார்க்கின்றா என்ற பலமான குற்றச்சாட்டு வேறு.

மலைநாட்டில் வேலைபார்க்கும் நான் விடுமுறையில் வந்துள்ளேன். என்ன நடக்கின்றது என்று தலைகால் புரியாமல் ஆச்சரியத்துடன் பார்க்கின்றேன். ஆற்றுக்கு அங்காலே உள்ள புற்தரையில் மாடுகட்டிக்கொண்டிருந்த தங்கை என்னைக் கண்டு விரைந்துவருகின்றாள்.

"அண்ணை, ஆச்சி இப்ப கொஞ்சநாளாய் உப்பிடித்தான் சொல்லி அம்மாவோட சண்டை பிடிக்கிறா. நேற்று கத்தியோடை நிக்கிறான் என்றா? இரவையில லைற் அடிச்சுக் கூப்பிடுகிறான்...... என்று, நாளுக்கு ஒருவிதமாய் சொல்லுறா".

என்று கூறிய தங்கைதான் நடப்பது என்ன என்பதைப் புரியவைத்தாள். வைரவி ஆச்சி எப்படி இருந்தவா! இப்ப எப்படி ஆகியிட்டா! நினைக்கும்போது, கவலையாக இருந்தது. சின்னவயசில் ஆச்சி வீட்டிற்குப் போனது இன்றும் பசுமையாக என்நினைவுகளில் நிழற்படமாக ஓடியது.

அப்போது எனக்கு ஐந்து அல்லது ஆறு வயது இருக்கும் என

நினைக்கின்றேன். எங்களது வீட்டிலிருந்து பார்த்தால் கண்மறையும் தூரத்தில் ஆச்சிவீட்டைச் சுற்றி நிற்கும் மருத மரங்கள் பச்சைப் புள்ளியாகத் தெரியும். அனேகமாக அம்மாவும் நானும் அடிக்கடி செல்வது வழக்கம்.

முரசுமோட்டையையும் கண்டாவளையையும் இணைக்கும் குறுக்குப் பாதையில் வெளிக்கண்டலையும் உடுப்பாற்றுக் கண்டலையும் பிரிக்கும் ஆற்று முகப்பிற்தான் வைரவி அப்புவும் வைரவி ஆச்சியும் வசித்து வந்தனர். அனேகமாக வற்றாத அந்த ஆறு ஓடிக்கொண்டே இருக்கும். அம்மாவின் கையைப்பிடித்தபடி காற்சட்டையை தொடைக்குமேலே தூக்கி, நீரில் நனையாமல் பக்குவமாகப் பிடித்தபடி போன ஞாபகம்.

ஆற்றுடன் ஒட்டிய சிறிய ஒரு புற்றுப்பிட்டி மேட்டில் ஆற்று மணலைப் பரப்பி அழகுசெய்யப்பட்டிருந்தது. அதில் சிறியதும் பெரியதுமாக இரண்டு குடிசைகள். சிறியது குசினி. வீட்டைச்சுற்றி முழங்கை வடிவில் வளைந்து ஆறு ஓடிக்கொண்டிருக்கும். ஆற்றங்கரையில் நெடுத்துவளர்ந்த மருத மரங்கள் பசுங்கிளை பரப்பி நின்றன. ஆற்று நீரும் மருதநிழலும் வீட்டிற்குக் குளிர்ச்சியைத் தாராளமாக வழங்கிக்கொண்டிருந்தன. அவற்றினை விட என்னைக் கவர்ந்தது மூன்றடி உயரத்திற்கு வளர்ந்திருந்த கொச்சிமிளகாய்ச் செடிதான். வெள்ளையும் சிகப்புமாக சின்னச் சின்ன மிளகாய்கள் காய்த்திருக்கும். ஆசையில் ஒன்றினைப் பிடுங்கி சப்பிப்பார்த்து, அதன் காரம் அடுத்த நாளும் உறைத்தது மறக்கமுடியுமா? அந்த மிளகாய்ச்செடி நான்கு வருடங்களுக்கு நின்று காய்க்கும் என்று அப்பு சொல்ல ஆச்சரியத்துடன் கேட்டிருக்கின்றேன். அதனைச்சுற்றி வட்டமாகப் பாத்தி அமைக்கப் பட்டிருக்கும், பக்கத்தில் தண்ணிப்பானை வாழைச்சருகில் செய்யப்பட்ட திருகணையில் வைக்கப் பட்டிருக்கும். பக்கத்தில் இதரை வாழை மூன்றுநான்கு, நிழல் கொடுத்துக் கொண்டிருக்கும்.

வீடு கிடுகினால் வேயப்பட்டிருந்தாலும் அப்பு அதற்குமேல் வைக்கோலால், அழகாக வாரிவிடப்பட்ட தலைபோல வேய்ந்திருப்பார். இரண்டு வருடத்திற்கு ஒருமுறை வேயவேண்டிய வீடு, அப்புவின் தொழில்நுட்பத்தினால் நான்கு வருடத்திற்கு ஒருமுறைதான் வேயவேண்டும் என்பதைப் பின்னாளில் அறிந்துகொண்டேன்.

வைரவி அப்பு நல்ல சிகப்பு நிறம், பூனைக்கண், மெல்லிய உடல்வாகு. பூனைமாதிரி மென்மையாகத்தான் பேசுவார். அவர் விரும்பி வளர்ப்பதும் பூனைதான். முதலில் அதனைப்பார்த்துப் பயந்துபோனேன். மிகப்பெரிய கறுப்புப் பூனை. அது பதுங்கிப் பதுங்கிப் நடப்பதே ஒரு

தனியழகுதான். வைரவி ஆச்சி கட்டையாக குண்டாக இருப்பா, சிகப்பு இல்லாவிட்டாலும் கறுப்பு என்றும் சொல்ல முடியாது. உருண்டை விழிகள் எதனையும் துல்லியமாகத் தூரத்தில் இருந்தே பார்க்கும் திறன் படைத்தவர். அப்பு பூஞ்சல்கண் என்பதால் தூர உள்ளவற்றை அறிய கண்ணுக்கு மேலே கையைப்பிடித்தபடி கண்களை இடுக்கி இடுக்கிப் பார்ப்பார். அறுபதைத் தாண்டிய போதிலும் இருவரும் அன்பான தம்பதிகள். இருவரும் சண்டை பிடித்ததை நான் பார்த்ததே இல்லை. எப்போதாவது அப்பு ஏதாவது சொல்வார். ஆச்சி ஏதாவது திருப்பிச் சொல்வார் அத்தோடு அவ்விடயத்திற்கு முற்றுப்புள்ளி இடப்பட்டுவிடும்.

பகல் நேரத்தில் மருதமரத்தில் கிளிகளின் இராட்சியமே நடக்கும். விதவிதமான கிளிகள் எல்லாம் வந்திருக்கும் பச்சைக்கிளி, மருதங்கிளி, பஞ்சவர்ணக்கிளி... எனப் பலவகை. கிளிக்குஞ்சுகளுக்கு தாய்க்கிளிகள் உணவு ஊட்டுவதைப் பார்த்துக் கொண்டு நின்றால் நேரம் போவதே தெரியாது. கிளிக்குஞ்சுகள் இறக்கை இல்லாமல் வெளிர்நீலச் சவ்வினால் போர்க்கப்பட்டிருக்கும் தமது சிறிய அலகினை மட்டும் திறந்து தாயின் சொண்டிலிருந்து பெற்று, அவக் அவக்கென்று உண்பதை வார்த்தைகளில் அப்படியே வடிக்கமுடியாது. இவற்றினைப் பார்த்துக்கொண்டிருக்கும் அப்புவின் கறுப்புப்பூனை அவற்றினை ஒன்றுமே செய்யாது. அவை களினுடைய நண்பனாகவே இருக்கும்.

ஆற்றங்கரைக்குவரும் கானான் கோழி, சம்புக்கோழி, காடை, கௌதாரி என்பவற்றில் எதாவது ஒன்றினை எப்படியும் வேட்டையாடிவிடும். அது வேட்டையாடுவதற்குக் கடைப்பிடிக்கும் நுட்பம் மிகுந்த பொறுமையுடன் காத்திருப்பதுடன் பதுங்கிப் பதுங்கித் தனது இலக்குவரை முன்னேறுவதேயாகும். தான் வேட்டையாடியவற்றைச் சாப்பிடாமல் அப்படியே அப்புவின் காலடியில் சமர்ப்பணம் செய்துவிடும். சமைத்த கறி முதலில் கறுப்புப் பூனைக்கே படைக்கப்படும். அதன்பின்பே அப்புவும் ஆச்சியும் உண்பார்கள்.

வைரவி அப்பு பின்னாளில் ஒரு மாவெள்ளை நிறத்தில் ஒரு நாயும் வளர்த்த ஞாபகம் இப்பொழுது வருகின்றது. அதில் உள்ள சிறப்பு என்ன வென்றால் நாயும் பூனையும் கிளிகளின் நண்பர்களாகப் பழகும் அதிசயம் நடக்கும். கிளிகள் முற்றத்தில் உள்ள கொச்சி மிளகாய்ச் செடியில் தமது கைவரிசையைக்காட்ட முற்பட்டால் நாயும் பூனையும் பொல்லாதவர்களாகி விடுவார்கள். அதனைக் கண்டுகொண்ட கிளிகள் முற்றத்து மிளகாய்ச் செடிமீது தமது நிழல்படக்கூடப் பறப்பதில்லை. அப்பு சாப்பிட்ட பின்பு

நாய்க்குச் சோறுவைக்க அதன் தட்டினை நோக்கிச் செல்வார். அப்பொழுது நாய் வீட்டினை மூன்றுதரம் சுற்றிவரும். இன்னுமொருக்கால் என்று சொன்னால் மீண்டும் சுற்றிவரும். அதனை ஆச்சரியத்துடன் பார்த்து நின்றிருக்கின்றேன். அதற்கான காரணம் எனக்கு விளங்கவில்லை. ஆனால் ஒருமுறை சோறுவைக்கும்போது வீட்டைச்சுற்றி வரும்போது வாயில் இரத்தம் வழிந்தபடி வந்தது, உடனே அப்பு வீட்டின் பின்பக்கம் ஓடிச்சென்றார். நானும் ஓடிச்சென்றேன் அங்கு ஒரு நாகபம்பு நாயினால் துண்டாடப்பட்டுக்கிடந்தது. அப்பொழுதுதான் எனக்கு விளங்கியது, அப்பு ஏன் நாயை வீட்டைச் சுற்றிவரச்செய்கிறார் என்று.

ஆச்சிக்கும் அப்புவுக்கும் பிள்ளைகள் இல்லை. பெண்பிள்ளை ஒன்றினை உறவினரிடம் பெற்று வளர்த்துவந்தனர். அப் பிள்ளைக்குப் பாக்கியம் எனப்பெயரிட்டுச் செல்லமாக வளர்த்து வந்தனர். ஆச்சியிடமும் இல்லாத கறுப்புநிறம் அதுவும் காகக்கறுப்பு. நான் கறுப்பியக்கா என்றே அழைப்பேன். அப்படி நான் சொன்னதற்காகவே என்னைத் துரத்தித் துரத்தித் தலையில் குட்டுவார். நான் குட்டுவாங்கியபின்பும் கறுப்பி என்று சொல்லி ஒட்டம் காட்டுவேன்.

அப்புவுக்குச் சொந்தமாக நான்கு ஏக்கர் நெல்வயல் இருந்தது. அது கண்டாவளைப் பேராற்றுக்கு அருகில் அமைந்திருந்தது. அதிற்கிடைக்கும் காலபோக விளைச்சல்மட்டுமே அப்புவின் வருமானம். அதிற் கிடைக்கும் நெல்லை வைத்தே சிக்கனமாக வாழ்க்கையினை ஓட்டிவந்தனர். சோற்றுக்குப் பஞ்சம் இல்லை. கறிக்கும் ஏனைய செலவுகளுக்குமே பணம்வேண்டும். நெல்லை விற்ற காசையும் அப்பப்போ மீன்பிடிக்கப் போதல், தோட்டத்தில் வேலைசெய்தல் எனக் கிடைப்பவற்றையும் கொண்டு சீவியம் போய்க் கொண்டிருந்தது.

ஆச்சியிலும் அப்புவிலும் எனக்குப் பிடித்த விடயம் என்னவெனில் அவர்களது எளிமையும் சுத்தமும் அன்புமேயாம். சிறிய இடத்தில் மண்வீடு மிகவும் நேர்த்தியாகவும் சுத்தமாகவும் இருக்கும். எல்லாம் அவை அவைக்கு என்று தீர்மானிக்கப்பட்ட இடத்திலேயே அவை இருக்கும். இடம்மாறி இருந்ததை நான் கண்டதில்லை. 'ஐந்து எஸ்' எனும் முறையை அவர்கள் அன்றே கடைப்பிடித்தமையினை இன்று நினைத்துப்பார்த்து வியக்கின்றேன். இருட்டிய பின் வீட்டிற்குள் நுழையும் ஆச்சி படலையைத் திறந்து, தீப்பெட்டியை எடுத்துச் சரியாக விளக்குக்கு நேரே அதனைப் பற்றவைத்துக் கொள்வார்.

ஆச்சி, அப்பம் அல்லது தோசை சுட்டால் எனக்குக் கொண்டாட்டம் தான். அவ்வளவு சுவையாக இருக்கும். பாலப்பம் என்பது இப்பொழுதும் இனிக்கிறது. அதன் சுவை சொல்லும்தரமல்ல. தோசையும் வித்தியாசமானது அதிகமாக மஞ்சள் கலந்து தடிப்பில்லாமல் இலேசானதாகச் சுட்டெடுப்பார். அதற்குச் சம்பல்தயார் செய்வதே ஒரு ரகமானது. மிளகாயைப் பொரித்து, அதிகளவு சின்னவெங்காயம் சேர்த்துச் செய்யும் தேங்காய்ச்சம்பலும் தோசையும் ருசித்துச் சாப்பிட்டாற்தான் அதன் சுவைதெரியும். அப்பச்சட்டி, அதற்கென்று தனி அகப்பை வைத்திருப்பார். ஒருமுறை அப்ப அகப்பையைத் தேடி களைத்துப்போய்விட்டோம். ஆனால் ஆச்சி அந்த அகப்பை இல்லாமல் அப்பம் சுடவே இல்லை. தேடி எடுத்தபின்பே அப்பம் சுட்டா என்றால் அந்த அந்தத் தேவைக்குரியதையே அவற்றுக்குப் பயன்படுதுவதில் எவ்வளவு உறுதி என்பதைப் பாருங்களேன். மேலும் ஒரு விசேடம் என்னவென்றால் அப்பம், தோசை ஒரு வீட்டிற்கு கொடுத்தால் மூன்று நாட்களுக்குத் தொடர்ச்சியாகக் கொடுக்க வேண்டும் என்பது வழக்கமாக இருந்தது. அதன்படி ஆச்சிவீட்டில் அப்பம், தோசை சுட்டால் மூன்று நாட்களுக்குக் கிடைத்துக்கொண்டே இருக்கும். இது ஏன் என்று இன்னமும் எனக்கு விளங்கவில்லை. இப்படி ஒரு வழமை இருந்தது, இப்போது யாருக்காவது தெரியுமோ என்பதும் எனக்குத் தெரியாது.

ஆச்சி வீடு என்னை முதன்முதலில் கவர்ந்தீர்க்கக் காரணம் அங்கே கிடைக்கும் மாலைநேரத் தேநீர்தான். அப்படி என்ன விசேடமென்றால் அதனைச் சுவைத்துப் பருகியவர்களுக்கே முழுமையும் தெரியும். இருப்பினும் சொல்ல முயல்கின்றேன். அப்பொழுதே மண்ணில் தோண்டியெடுத்த நன்னாரி வேரினை நீரில்போட்டு தேயிலையுடன் சூடாக்குவார். சூடான தேநீரை ஆச்சி விசேடமாக வைத்திருக்கும் ஒரு பெரிய கும்பாவில் ஊற்றிச் சீனியுடன் ஆற்றி எடுப்பா. அந்தக் கும்பாவை மற்றைய பாத்திரங்கள் போல் புளியோ, சாம்பலோ போட்டு விளக்குவதில்லை. சாதாரணமாகத் சுடுதண்ணீரில் சிலாவி எடுப்பா அவ்வளவுதான். தேயிலைக்கறள் போகக்கழுவினால் தேநீர் சுவைக்காது என்று ஆச்சி சொல்லுவா. ஆச்சியும் அப்புவும் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட சிரட்டைக் குவளையிலேயே தேநீர் அருந்துவர். எனக்கும் அப்படிவேணும் என்று அடம்பிடித்ததன் பிரதிபலனாக எனக்கும் விசேட சிரட்டைத் தேநீர்க் குவளை செய்யப்பட்டது. அதிலேயே அந்த விசேட தேநீரை மாலை நேரங்களில் சுவைத்து அருந்திய நினைவு இன்றும் இனிக்கின்றது. அந்தச்சுவை கழுவாத கறளில்தான் என்று நீங்கள் சொன்னால் அதற்குநான் பொறுப்பல்ல.

பாக்கியம் அக்கா வளர்ந்து பூநகரியில் திருமணம் முடித்துக் கொடுக்கப்பட்டா. செல்லியாதீவு கிராமம் என்று நினைவு. உழவுமெசின்

www.padippakam.com

பெட்டியில் போனது இப்பொழுதும் மறக்கமுடியாத நினைவு. பெரியண்ணாவும் இராசரும் போட்டிக்கு மெசின் றேசோடியது மறக்கமுடியாது. அங்கே ஒவ்வொரு வீட்டின் பின்னுக்கும் அட்டள்போட்டு உப்பு கூடையில் வைக்கப்பட்டிருக்கும். அக்கா அம்மாவை மச்சாள் மச்சாள் என்று அன்போடே பழகுவார். ஆனால் என்ன நடந்ததோ? அம்மாவுடன் சண்டைபிடித்துக் கதைக்காமல் விட்டுவிட்டார். அக்காவில அன்பிருந்தாலும் அம்மாவை ஏசியதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை நானும் கதைப்பதில்லை. பாக்கியம் அக்கா திருமணம் முடிந்தபின் எப்போதாவது வருவார். அவ்வளவுதான் .அப்புறம் ஆச்சிக்கும் அப்புவிற்கும் புதிதாக வளர்த்த பூனைக்குட்டியும் நாய்க்குட்டியும்தான் செல்லப் பிள்ளைகள்.

ஒருநாள் அதிர்ச்சிதரும் செய்திவந்தது, அப்பு இறந்துவிட்டார் என்று. அவர் நன்றாகத்தான் இருந்தார். என்ன நடந்தது என்று எனக்கு இன்னமும் சரியான காரணம் தெரியவில்லை. ஆனால் அப்பு நோய் படுக்கை என்றாகவில்லை. கடைசிவரை ஆரோக்கியமாகவும் உழைப்பினை நம்புபவராகவுமே வாழ்ந்தார். அவரது மரணத்திற்குப்பின் வைரவி ஆச்சி நன்றாகவே ஒடிந்துபோனார். உடலால் மட்டுமல்ல உள்ளத்தாலும். ஆச்சிக்கு என்று யாரும் இல்லை. நம்பி வளர்த்த பிள்ளை எட்டுச் செலவுடன் எட்டப் போய்விட்டது. உறவினர் என்ற மட்டில் அம்மாவும், தம்பரம்மாவும், சீதேவி மாமியுமே அருகில் இருந்தனர். ஆனால் அனுதாபத்தோடு எல்லாம் முடிந்துவிட்டது.

தம்பரம்மா தான் முதலில் ஆச்சியைப் பார்க்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். அப்புவின் பெறாமகன் ஒருவன், தான் அப்புவிற்குக் கொடுத்த கடனுக்கு ஈடாக எழுதிவாங்கிய வயற்காணியும் வீடும் சரியென்று, பொய்க்கணக்குக் காட்டி மலட்டுச் சொத்தினை அபகரித்துக்கொண்டான். அத்தோடு ஆச்சிக்கிருந்த ஒன்றுமே இல்லை. அவைகள் பற்றிய நினைவுகளை மட்டுமே சுமந்தபடி, வைரங்கள் இல்லாத வெறும் வைரவி ஆச்சி ஆகிவிட்டார்

வைரவி ஆச்சி நோய் என்று படுத்ததை நான் கண்டதே இல்லை. நல்ல ஆரோக்கியமாக வாழ்ந்தவர். அப்புவின் மரணம் ஆச்சியை மொத்தமாகப் புரட்டி எடுத்துவிட்டது. வளர்த்த பாக்கியம் அக்கா செய்த துரோகம், அப்புவின் வயல் பறிபோனது, வீடு பறிபோனது என எல்லாமே அவரை மனச்சிக்கலுக்கு ஆளாக்கிவிட்டது. ஒருவர் ஆரம்பத்தில் இருந்தே தொல்லைகளையும், கஷ்டங்களையும் அனுபவித்துவரின் அவற்றுக்கு அவர் உடல்ரீதியிலும், உளரீதியிலும் இசைவாகி விடுவார். ஆனால் வைரவி ஆச்சி



படிப்பகம்

ஆரம்பத்தில் இருந்து கஷ்டம், துன்பம் எதனையும் அனுபவிக்க வில்லையே. ஆச்சியின் தேவை அறிந்து நடக்கும் அப்பு அவவுக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை. ஆனால் பிள்ளை இல்லை என்று அடிமனதில் வடுவாக இருந்திருக்கும். அப்புவின் அன்பில் அது மேற்கிளம்பவில்லை. இப்பொழுது ஒன்றுமே இல்லையெனும் பொழுது எல்லாம் மேற்கிளம்பி பாரிய மனச்சிக்கலுக்கு உட்பட்டுவிட்டார் என்பதை என்னால் ஊகிக்கமுடிகின்றது.

தம்பரம்மா வீட்டில் இருந்த வைரவி ஆச்சி, இப்பொழுது கூறும் குற்றச்சாட்டுக்களை சற்று மாற்றிக் கூறிக்கொண்டிருந்தார். மையக்கதை ஒன்று, கதாபாத்திரங்களே மாற்றமாக இருந்தது. இப்பொழுது அம்மாவுடனும் வந்து இருக்கின்றார். ஒருமாதமாய் நல்ல முறையில் இருந்தார். போன பௌர்ணமியுடன் தொடங்கிய மாறாட்டக்குணம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

ஆச்சி அடைந்த ஏமாற்றம் எல்லாம் கட்டுடைத்து விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கி விட்டதன் அடையாளம் மட்டுமே இப்போதைக்கு. அம்மாவை ஆச்சி மகள் என்றே அழைப்பா. அவ்வளவு அன்பு. அந்தப் பிணைப்புத்தான் கடைசிக்காலத்தில் அவர் துன்பப்படும் பொழுது அழைத்து வந்து கரிசனையோடு பார்க்கின்றார். ஆனால் ஆச்சியின் மனநிலைமாறி அம்மாவை எதிரியாகப் பார்க்கத் தொடங்கிவிட்டார். இனியும் அம்மாவுடன் சரிவராது என்பதை, யாம் எல்லோரும் உணர்ந்து கொண்டோம். இவ்விடயத்தினைக் கேள்விப்பட்ட சீதேவிமாமி வீட்டுக்கு வந்து நிலைமையை பார்த்து அதிர்ந்தேவிட்டார். மாமியைக்கண்ட ஆச்சி அவரைத் கட்டிப்பிடித்து அழத்தொடங்கிவிட்டார். அம்மாவைப் பார்க்கும் போது பாவமாக இருந்தது. மிகவும் மனம் ஒடிந்து காணப்பட்டார். ஆச்சி மாமியுடன் ஐக்கியமாகி விட்டபடியால் தற்போதைக்கு மாமிதான் ஆச்சிக்கு சிறந்த மருந்தாகத் தெரிந்தார், எனவே அவருடன் அனுப்பிவைத்தோம்.

மாதங்கள் கடந்து போயின சீதேவிமாமி வீட்டில் இருந்து செய்தி வந்தது. இப்போது மாமியுடன் ஆச்சி சண்டை பிடிக்கின்றார் என்றும், ஆச்சியின் உடல் நிலையும் மனநிலையும் மோசமாகிக் கொண்டிருப்பதையும் சொன்னார்கள். ஆச்சிக்குப் பேய்பிடித்திருப்பதாகவும் அதற்காக பேயோட்டிகளைக் கொண்டு பல சடங்குகள் செய்து பார்த்தும் எவ்வித மாற்றமும் கிடைக்கவில்லை என்றும் கூறினார்கள்.

விஞ்ஞானம் வளர்ந்து மருத்துவத்துறையும் எவ்வளவோ முன்னேறிய பொழுதிலும் எமது நாட்டு வைத்தியசாலைகளில் மனநோய்க்கு ஏற்ற

வைத்தியமோ, ஆலோசனைகளோ வழங்குவதற்கு எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படாமை கவலைக்குரியதே. நகரத்திலேயே இந்நிலை என்றால் கிராமத்தில் சொல்லவும் வேண்டுமா? இதில் பரிதாபம் என்னவென்றால் நோயாளிகளுக்குத் தமக்கு நோய் என்பதே தெரியாமை. கூட இருப்பவரோ அவருக்கு மனநோய் என்றால் தமது குடும்பத்தினையே ஒதுக்கி வைத்துவிடுவார்கள் கல்யாணம் சபை சந்திக்கு எடுக்க மாட்டார்கள் என்பதற்காக வீட்டிலே பூட்டிவைத்து செய்கின்ற இம்சைக்கு அளவு ஏது சொல்லமுடியும். வைரவி ஆச்சிபற்றி சில மாதங்களின் பின் மீண்டும் ஒரு செய்திவந்தது. அது வைரவிஆச்சியின் மறைவு பற்றிய செய்தியாகவே இருந்தது.

அப்புவும் ஆச்சியும் அதிகம் ஆசைப்பட்டவர்கள் அல்ல. மண்ணுடன் இயைந்து வாழ்ந்தவர்கள். அன்பான குடும்பம் அறுபதையும் தாண்டி ஆரோக்கியமாக வாழ்ந்தவர்கள். அயலவரை அணைத்து விருந்தோம்பிய வர்கள். அக் குடும்பத்தின் அழிவு அறியாமையின் மீது எழுதப்பட்டதாகவே கருதுகின்றேன். வைரவி அப்பும் வைரவி ஆச்சியும் போல் ஒரு வயோதிபத் தம்பதிகளை எனது காலத்தில் தேடிக்கொண்டிருக்கின்றேன். அந்த ஆதர்ஷ தம்பதிகள் மெய்ப்படுவார்களா?

***( கதைக்கான களம் - 1963 )***

www.padippakam.com

## மைதானம்

காகம் குருவிகூடப் பறப்பதாகத் தெரியவில்லை, அவ்வளவு அமைதியாக வெறிச்சோடிக் கிடந்தது அந்த வீதி. நேரம் என்னவாக இருக்கும், பத்துமணியைத் தாண்டி இருக்குமோ? மணிக்கூட்டினைப் பார்க்கின்றேன், வெளிர்நீலக் கண்ணாடியிலான ஒறிஜினல் மொண்டியாவில் சரியாக பத்துமணிக்கு ஐந்து நிமிடம் இருக்கின்றது. நான் நினைத்துவந்த நேரம் சரியாக இருந்ததில் மனதாரத் திருப்திப்பட்டுக் கொண்டேன்.

பாடசாலைக் கேற்றைத் தாண்டும் பொழுது, எனக்குள் ஒரு வேகத்தை ஏற்படுத்திக் கொண்டு, ஏதோ தற்செயலாக பஸ்ஸைத் தவறவிட்டதுபோல் பாசாங்கு செய்தபடி, அலுவலகத்துள் நுழைகின்றேன்.

அலுவலகத்துள் நுழைவதற்கு முன்பே அதனை நுணுக்கமாக அவதானித்துவிட்டேன். அதிபர் பரபரத்துக் கொண்டு மணிக்கூட்டைப் பார்ப்பதும் கேற்றைப் பார்ப்பதுமாக இருப்பது தெரிகிறது. நான் அதனை அவதானிக்காதது போல,

“சேர் பஸ்ஸைத் தவறவிட்டிட்டன் அதுதான் பிந்திப்போச்சு...” வார்த்தைகளை முடிக்காமல் இழுக்கின்றேன்.

“தம்பி.. நடந்தது தெரியுமோ? அந்த மலசலகூடத்தை ஆரோ உடைச்சுப்போட்டினம்”.

நான் பிந்திவந்ததோ அதற்கான காரணமோ பற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளாமல், உடைக்கப்பட்ட மலசலகூடம் பற்றியே அவரது கவனம் இருந்தது. ஏற்கனவே நான் எதிர்பார்த்திருந்த செய்திதான். ஆனால் இப்பொழுதுதான் அறிவதுபோல் வியப்பினைக் காட்டிக்கொண்டேன்.

“சேர்... ஒருக்காப் பார்ப்போமோ?... “ என்று கேட்கிறேன்.

''சரி தம்பி வாரும் பார்ப்பம்” என்றபடி அலுவலகத்தைவிட்டு வெளியேறுகின்றார் அதிபர்.

கட்டையாக வெட்டப்பட்ட கேசங்கள் தலையை மேவி நேர்த்தியாக வாரிவிடப்பட்டிருக்கின்றன. இளநரையுடன் கூடிய கட்டை மீசை, ஐந்தடியைத் தாண்டாத உயரம், காகத்தின் மினுமினுப்புடன்கூடிய கறுப்பு நிறம். புன்முறுவல் தவழும் வதனம், கலகலப்புடன் ஆனால் வார்த்தைகளை அளந்து, தேவையான தொனியுடன் பேச்சுக்கலை பயிலும் மாணவர்களுக்குரித்தான அக்கறையுடன் பேசும் சுபாவம் உள்ளவர்தான்



படிப்பகம்

அதிபர், இன்று முகத்தில் புன்முறுவல் இல்லை. வார்த்தைகள் வெளிவரத் தயங்குகின்றன.

அதிபரின் உள்ளக்கிடக்கையினை ஏற்கனவே அறிந்தவன் என்ற வகையிலும், அவரின் ஒவ்வொரு அசைவுக்கும் அர்த்தம் தெரிந்தவன் என்ற வகையிலும், நிலைமையினைத் தெரிந்துகொண்டு அமைதியாகப் பின்னே செல்கின்றேன்.

இரண்டாவது பாடவேளை, வகுப்புகளில் பாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில வகுப்பறைகளில் ஆசிரியர்கள் வரவில்லைப் போலும், சத்தம் போட்டுக்கொண்டிருந்த மாணவர்கள் அதிபரைக் கண்டு அமைதியாகின்றனர். ஒரு சில ஆசிரியர்கள் பாடம் நடத்துவதுபோல் பாசாங்கு செய்தாலும் என்னையும் அதிபரையும் நோட்டம் விட்டபடியே இருக்கின்றனர்.

இரண்டாவதாக இருந்த ஆரம்பப்பிரிவு கட்டிடத்தொகுதிக்குப் பின்புறம்தான் விளையாட்டு மைதானம் அமைந்திருந்தது. உண்மையில் விளையாட்டு மைதானத்திற்குரிய இடத்தில் முக்கால்வாசிப்பகுதியும் பற்றை மண்டிக்கிடந்தது. அவற்றில் காட்டு நெல்லிகள், விண்ணாங்கு, பூநாறி, சூரை என்பனவும் அப்பிரதேசத்திற்கே உரிய பெயர் தெரியாத தாவர இனங்கள் மதத்து வளர்ந்திருந்தன. இடையிடையே இரண்டு மூன்று பாலை, முதிரை மரங்களும் நெடுத்துநின்று நிழல் கொடுத்துக் கொண்டிருந்தன. இப் பற்றை பற்றி இதுவரை யாரும் அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. எல்லை வேலிமட்டும் கவனமாக முட்கம்பிகளால் நன்கு சுற்றிவளைக்கப்பட்டிருந்தது.

கடந்த பத்து வருடங்களாய் இப் பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகளோ, விழாக்களோ நடைபெறவில்லை என்பதையும், எப்படியும் இந்தத் தவணைக்குள் விளையாட்டுப் போட்டியை நடாத்தும் தனது எண்ணத்தினைக் கூறி, ஆசிரியர்களின் விருப்பத்தினையும் ஒத்துழைப் பினையும் வழங்கவேண்டி நின்றார் அதிபர். வழமையாகத் திங்கட்கிழமை இடைவேளைக்கு முன்பு நடைபெறும் ஆசிரியர் கூட்டத்திலேயே இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

க.பொ.த. உயர்தரம் வரையிலான வகுப்புகள் உள்ள, சுமார் 500க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட மகா வித்தியாலய தரத்திலான பாடசாலையில் 16ஆசிரியர்கள் உள்ளனர். அதில் ஆங்கில ஆசிரியர் உட்பட பத்துப்பேர் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நான்குபேர் மட்டும் புதிதாக நியமனம் பெற்றுவந்த ஆசிரிய தராதரம் உள்ள ஆசிரியர்கள், இருவர் தொண்டர் ஆசிரியர்கள், அதிபரின் கோரிக்கையை அடுத்து ஆசிரியர்கள் மத்தியில் ஒரே

www.padippakam.com

அமைதி. நான் எல்லோர் முகங்களினையும் பார்க்கின்றேன். இரண்டொரு ஆசிரியர்கள் முகங்களில் நக்கல் கலந்த சிரிப்பொன்று காணப்படுகிறது. அவர்கள் பற்றிய கணிப்பு ஒன்று எனக்கு ஏற்கனவே உண்டு. நாம் பாடசாலைக்கு வந்தபுதிதில் வகுப்பறைக்கு ஒழுங்காய் போவதையும், வகுப்பறையில் கற்பித்தல் தொடர்பான பிரச்சனைகளை இடைவேளைகளில் கலந்துரையாடுவதையும் அவதானித்த ஒரு ஆசிரியர்,

"தம்பிமார் புது விளக்குமாறு நல்லாய்க் கூட்டும்". என்று கிண்டலடித்தது நல்ல ஞாபகம். இவ்விடயம் ஆரம்பத்தில் எமக்குப் பெரிய மனப்பாதிப்பினை ஏற்படுத்தியதுண்டு. ஆசிரியர் என்பவர் மதிப்புக்குரியவர், அவரது சேவை மகத்தானது என்று நினைத்து நடப்போரை மதித்து உற்சாகப்படுத்தி, தக்கசமயத்தில் வழிகாட்டவேண்டிய மூத்த ஆசிரியர்கள் கிண்டலடிப்பதும் சலிப்பூட்டுவதும் புரியாத புதிராகவே இருந்தது. ஆனால் காலப்போக்கில் அவர்களின் மனப்போக்கினைப் புரிந்துகொள்ள முடிந்தது. அவர்களைப் பொறுத்தமட்டில் வருமானமும் தமது சுய முன்னேற்றமுமே பிரதானமானது. மாணவர்களைப் பொறுத்தவரை படியாத மாடுகள், வேலை வாங்கமட்டுமே லாயக்கானவர்கள், படிப்பு என்பது ஜென்மத்திற்கும் கிட்டாத விஷயம். எனவே இவ்வாறான முடிவில் உள்ளவர்களுக்கு முன்னர், நாம் சாதிப்போம் என்று நம்பிக்கையுடன் உழைப்பது, பொரிமாத் தோண்டிகளின் கதைபோல் மூடத்தனமாகவே தென்பட்டிருக்க வேண்டும்.

புதிதாக நியமனம் பெற்றவர்கள் என்னுடன் மூன்று பேர்கள், நாம் ஏதாவது கதைத்தால் கன்றுக்குட்டிகளுக்கு என்ன தெரியும் என்பதுபோல் மீண்டும் நக்கல் பார்வைக்கும் ஏளனத்திற்கும் ஆளாகவேண்டிவரும் என்பது தெரிந்ததால், புதிதாக வந்த அதே ஊரைச்சேர்ந்த கணித ஆசிரியரைப் பார்க்கின்றேன். அவர் இரண்டு வருடத்திற்கு முன்புதான் பயிற்றப்பட்ட கணித ஆசிரியராகி, யாழ்ப்பானத்தில் உள்ள பிரபல்யமான பாடசாலையில் சேவையாற்றிய அனுபவத்துடன், சொந்த ஊருக்கு மாற்றலாகி வந்துள்ளார். அவர் இளமைத் துடிப்பும், பாடசாலையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினை பலசந்தர்ப்பங்களில் வெளிக்காட்டியும் உள்ளார். அவர் என்னைப் பார்க்கிறார். நான் பதிலுக்குச் சமிக்ஞை காட்டுகிறேன்.

கணித ஆசிரியர் எழுந்து "சேர் நீங்கள் விரும்புகிறவாறு இந்தத் தவணையில் விளையாட்டுப்போட்டியைச் சிறப்பாக நடத்த வேண்டும். எமது ஆதரவு எப்பவும் உங்களுக்குக் கிடைக்கும்". என்று தனது ஆதரவுக்கு அடையாளமாக கைதட்டி ஆரம்பித்துவைத்தார். எனது நண்பர்களும் தொடர்ந்து கைதட்ட, மூத்த ஆசிரியர்களும் மூன்று நான்கு பேர்கள் தொடர்ந்து கைதட்டி அதிபருக்கு ஆதரவாக நிலைமை மாற்றப்பட்டது. மீதிப்பேர் ஒன்றும் செய்யமுடியாமல் மௌனமாக இருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

அதிபர் எமது பாடசாலைக்கு வருவதற்கு முன்பு பயிற்றப்பட்ட விளையாட்டுத்துறை ஆசிரியர் மட்டுமல்ல, யாழ்மாவட்ட விளையாட்டு போட்டிகளின் பொறுப்பாளராகவும் இருந்த அனுபவம் வாய்ந்தவர் என்பது எல்லோருக்கும் தெரியும். அதிபரே தொடர்ந்து பேசினார்.

“நீங்கள் எனது கோரிக்கையை ஏற்று விளையாட்டுப்போட்டியை நடாத்தச் சம்மதமென்றால் உங்களில் இருந்து ஒருவரை விளையாட்டுப் போட்டிக்குப் பொறுப்பான செயலாளராகத் தெரிவு செய்யுங்கள்”.

அதிபர் மீண்டும் பந்தை எம்மீதே வீசினார். தக்க தருணம் சில வினாடிகள் தாமதித்தாலும் நிலைமை தலைகீழாக மாறலாம் எனவே, நான் எழுந்து கணித ஆசிரியரை விளையாட்டுச் செயலாளராகப் பிரேரிக்கின்றேன் என்று ஆரம்பித்து வைத்தேன். சொல்லி வைத்தாற் போல் நண்பர் ஒருவர் அதனை வழிமொழிந்தார். எல்லோரும் கைதட்டி முழு ஆதரவினைத் தெரிவித்தனர். கணித ஆசிரியர் எழுந்து புதிய பிரச்சினையை எழுப்பினார். எமக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அதாவது தனக்குத் தனித்துச் செய்யமுடியாதெனவும் இன்னொருவரும் தன்னுடன் இணைச் செயலாளராகச் சேர்ந்தால் செய்யமுடியும் என்றும் கோரிக்கை வைத்தார். தக்க சமயத்தில் அதிபரே வழியைக்கண்டுபிடித்து, என்னை இணைத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். உடனே நண்பர்களில் ஒருவரும் ஆங்கில ஆசிரியரும் பிரேரித்து வழிமொழிந்தனர். நானே தொடங்கிவைத்தது மறுக்கமுடியவில்லை. இப்போது விளையாட்டுப் போட்டி நடாத்தும் பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டுவிட்டது. இவ்வாறு அன்று கூட்டம் நிறைவெய்தியது.

அன்று மாலையே நாங்கள் அதிபருடன் விளையாட்டுப் போட்டி நடாத்துவதுபற்றி ஆலோசித்தோம். அப்பொழுதுதான் விளையாட்டு மைதானம் சிறிதாக இருப்பதாகவும் பற்றைகளை வெட்டி விஸ்த்தரிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. தொடர்ந்து இல்லங்கள் பிரித்தல், ஆரம்பக்கட்ட நிர்வாக நடவடிக்கைகள் எனப் பிரஸ்தாபிக்கப்பட்டது. போட்டி விதிகள், படிவங்கள் யாவற்றுக்கும் அதிபரே பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஒரு வெள்ளிக்கிழமை சிரமதான நாளாகப் பிரகடனப்படுத்தி, மாணவர்கள் கத்தி, கோடரி, மண்வெட்டி போன்ற ஆயுதங்களுடன் பற்றைவெட்டுவதற்கும், விளையாட்டு மைதானம் அமைப்பதற்கும் வரும்படி அதிபர் அறிவித்தல் விடுத்தார். அதன்படி சிரமதானம் ஆரம்பித்து பற்றைகள் வெட்டும் பணியில் மாணவர்கள் மும்மரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதே நேரம், நாம் அதிபருடன் 400 மீற்றர் அளவுடைய மைதானம்



படிப்பகம்

அமைப்பதற்குள்ள சாத்தியப்பாடுகள் பற்றி அளவுநாடாவுடன் ஆராய்ந்து கொண்டிருந்தோம்.

அனேகமாக நாம் நினைத்தது போல் 400 மீற்றரில் மைதானம் அமைக்கக் கூடிய இடம் போதுமான அளவு இருந்தது. இது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இதற்கு ஒரு காரணமும் உண்டு. விளையாட்டுப் போட்டிகள் நடாத்துவதுபற்றி முடிவுசெய்தபின், ஒரு மூத்த ஆசிரியர், "இஞ்ச எங்க மைதானம் இருக்கு, சும்மா புலுடா விடப்போறாங்கள்" என்று, இன்னொரு ஆசிரியருடன் கதைத்தது, எனது காதில் விழுந்தது உத்வேகத்தைக் கொடுத்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யமான பாடசாலைகள் தரத்திற்கு ஒரு போட்டியை ஏற்பாடு செய்து, நடாத்திக் காட்டுவதென அன்றே நான் நினைத்துக் கொண்டேன்.

கிணறுவெட்டப் பூதம் கிளம்பிய கதைபோல, மைதானத்தின் நடுவில் கைவிடப்பட்ட மலசல கூடம் ஒன்று பற்றைக்குள்ளிருந்து தலை நீட்டியது. மாணவர்களில் ஒருவன் ஓடிவந்து என்னிடம்தான் முதலில் கூறினான். சென்று பார்த்தபோது, எனது மைதானக் கனவு சுக்குநூறாகியது போலவே தென்பட்டது. அதிபருடன் அவ்விடத்தைச் சுற்றிப்பார்த்தோம். ஒரு சில நிமிட அமைதியின் பின்பு அதிபர் கூறினார்,

"தம்பி இது மைதானத்திற்கு இடைஞ்சல்தான், இருப்பினும் எமக்கு உடைக்கும் அதிகாரம் இல்லை. அனுமதி பெறுவதாயின் எப்படியும் ஒரு மாதத்திற்கு மேல் எடுக்கும்".

அதிபரைப் பொறுத்தவரையில் அவர் கூறியது முற்றிலும் உண்மையானதே. முறைப்படியான அனுமதி இல்லாமல் உடைக்கப்பட்டால், அதிபர் விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டும். சிலவேளை பென்சன் இல்லாமல் அல்லது வேலை இல்லாமலும் போகலாம். இப்படியான வற்றுக்கான முன்னுதாரணங்கள் நிறையவே உண்டு. பலாலி ஆசிரிய கலாசாலையில பட்டுப்போன மரத்தினை, அனுமதி இன்றி வெட்டி யமையால் அதன் அதிபர் கொடுத்த விலை மிகமிக அதிகமாகும்.

இணைச்செயலாளர் உட்பட எனது நண்பர்களுக்கு முகம் வாடிவிட்டதை அவதானித்தேன். எனக்கும்தான், ஆனால் நான் வெளிக்காட்ட வில்லை. என்ன செய்ய வேண்டும் என்பதை அப்பொழுதே தீர்மானித்து விட்டேன். அது அதிபரைப் பாதிக்காமல் சட்டப்பாதுகாப்பும் செய்யப்பட வேண்டும் என்பதையும் முடிவுசெய்து விட்டேன். இவையாவும் எனக்குள் நான் மௌனமாக எடுத்த முடிவுகள். நண்பர் யாருடனும் கலந்துரையாடவில்லை.

"சேர் இதை நடுவில் விட்டு மூடி மறைத்துக்கட்டுவம், இல்லாட்டில் வேறு ஒரு பக்கத்தில் மைதானத்தைச் சிறிதாக அமைப்பம்".என்று அதிபரிடம் கூறினேன். செய்வதறியாது குழம்பியிருந்த அதிபருக்கு அப்பொழுதுதான் ஒரு வழிகிடைத்த நிம்மதி, எனது கருத்தை ஆமோதித்தார். ஆனால் நண்பர்களுக்கோ மாணவர்களுக்கோ எனது கருத்துப் பிடிக்கவே இல்லை. முகத்தைச் சுழித்துக்கொண்டனர். அதில் தமது எதிர்ப்பினைக் காட்டுபவர்களை நான் அவதானிக்கத் தவறவில்லை. அதிபருடன் நான் கதைத்த சில நிமிடங்களில் மாணவர்கள் கூட்டம் கூட்டமாக நின்று என்னையே ஏசிக்கொண்டனர். இவை எல்லாம் எனக்கு விளங்கிய போதும் விளங்காதது போல் அவ்விடத்தில் நின்றேன்.

மைதானத்தின் மத்தியில் மலசலகூடம் கண்டுபிடிக்கப்பட்டபின் சிரமதான் வேலைகள் அனைத்துமே ஸ்தம்பித்துப் போய்விட்டது என்றே சொல்ல வேண்டும். நேரமும் பதினொரு மணியைத் தாண்டி விட்டது. வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் போகும் ஆசிரியர்கள் பன்னிரண்டரை மணிக்கு வெளிக்கிடும் நேரம். எனவே அத்துடன் சிரமதானம் நிறுத்தப்பட்டு, அடுத்த செவ்வாய்க்கிழமை தொடரும் என அறிவிக்கப்பட்டது.

மைதானத்தில் மாணவர்களைத்தவிர வேறுயாரும் இல்லை. நான் தனித்து அந்த மலசல கூடத்திற்கு அருகில் செல்கின்றேன்.

"இந்த மலசலகூடத்தைக் கண்டுபிடித்த கொலம்பஸ் வீரன் யார்"

என்று மாணவர்களிடம் வினவுகின்றேன். மாணவர்கள் எனது வினாவிற்கு வேண்டா வெறுப்பாக இரண்டொரு மாணவர்களை அடையாளம் காட்டுகின்றனர். அவர்களை அழைத்த நான்,

"கண்டுபிடித்ததுதான் நீங்கள் செய்த குற்றம். அதற்குப் பிராயச்சித்தமும் நீங்களே தேடிக் கொள்ளுங்கள்".

அதற்குமேல் நான் எதுவும் பேசவில்லை. அவ்விடத்தை விட்டு அகன்று விட்டேன். இதன் விளைவு என்னவாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும். மாணவர்களை நல்வழிப்படுத்தும் ஆசிரியரின் செயலா இது? எனக்குள்ளே ஆயிரம் கேள்விகள்.

மாணவர்கள் பயன்படுத்த முடியாது இடிந்து எச்சமாக இருக்கும் மலசல கூடம், மாணவர்கள் மகிழ்ச்சியாக விளையாடும் மைதானத்துக்கு நடுவில் இடைஞ்சலாகவும் அசிங்கமாகவும் காட்சியளிக்க விட்டு, பாதுகாப்பதுதான் ஆசிரியரின் கடமையா? உதவாத சட்டத்தை உயர்த்திப் பிடிப்பதால் யாருக்கு லாபம்? வேணுமானால் "கண்டறியாத விளையாட்டுப்போட்டியாம்" என்று கிண்டல் செய்யும் கூட்டத்திற்கு

மகிழ்ச்சியாக இருக்கலாம்.

சட்டங்கள், விதிகள் இருக்கின்ற வளங்களைப் பாதுகாக்கவோ, மேலும் விருத்திசெய்யவோ, பயன்பட வேண்டும் இல்லாமல் சீரழிப்பதற்குப் பயன்படக் கூடாது. சென்ற வருடம் பாடசாலைக்குப் புதிய கிணறு அமைக்கும்போது இப் பிரச்சினை மேற்கிளம்பி, இறுதியில் பயன்படாத சட்டம் தூக்கி வீசப்பட்டது நல்ல உதாரணம்.

பாடசாலையில் பழைய கிணறு ஒன்று ஏற்கனவே உண்டு, ஆனால் கோடைகாலத்தில் கிணற்றில் ஒரு சொட்டு நீர்தானும் இருக்காது. கோடைகால வெய்யிலில் நீர் இல்லாமல் மாணவர்கள் அயல்வீடுகளுக்குச் சென்று, ஏச்சும்பேச்சும் வாங்கியும் படும்பாடு சொல்லும் தரமன்று. அதனால்தான் புதிய கிணறு வெட்ட நிதி ஒதுக்கப்பட்டு, வேலை ஆரம்பிக்கும் போது, மீண்டும் பழைய கிணற்றின் விட்டத்திலேதான் வெட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. இது யாழ்மாவட்டத்திற்கு ஆக்கப்பட்டது, கிளிநொச்சி மாவட்டத்தின் தரை அமைப்பு, நீரூற்றுக்கள் என்பன வேறானவை. யாழ் மாவட்டத்தில் நீரூற்று கீழிருந்து மேலெழும்புவன் ஆனால் கிளிநொச்சியில் நிலக்கீழிருந்து பக்கங்களால் கசிவன, என்ற யதார்த்தத்தினை யாரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. இதுபற்றி விளக்கி எழுதிய அதிபரின் கடிதத்திற்கு எல்லாம் பதில் ஒன்றேதான்.

அச்சமயத்தில் ஏதோ விடயமாக கிளிநொச்சிக்கு வந்த, கல்விப் பணிப்பாளரை அதிபர் அழைத்துவந்து, பழைய கிணற்றினைக் காட்டிய போது அவர் வியந்துபோனார். மேலும் கிணற்றுள் பவுசர்மூலம் நீர் நிறைக்கப் பட்டே, அனுமதி பெறப்பட்ட ரகசியத்தினையும், பாடசாலை அயலில் உள்ள நலன்விரும்பி ஒருவர் கூறியபோது, பணிப்பாளரால் ஒன்றுமே சொல்ல முடியவில்லை. சட்டம் எப்படி ஏமாற்றப்படுகிறது என்பதற்கு வேறு என்ன சாட்சி வேண்டும்.

அன்றே பணிப்பாளர் புதிய உத்தரவு பிறப்பித்தார். பொறியியலாளர் நேரில்வந்து, நீர்ப்பாசன இலாகாவுடன் சேர்ந்து புதிய திட்ட வரைபினைத் தயாரிக்க வேண்டும் என்று, அதன்படி கிணற்று விட்டத்தின் அளவு அதிகரிக்கப்பட்டது, ஆனால் நிதி அதிகரிக்கப்படமாட்டாது என்று புதிய சிக்கல் தோன்றியபோது, பாடசாலை அபிவிருத்திச் சபை, மீதி நிதியைப் பொறுப்பேற்று, சிரமதான மூலமே கிணறு வெட்டப்பட்டமை இன்றும் பசுமையாக உள்ளன.

ஆசிரியத் தொழிலை, பாடசாலையை, மாணவர் நலனை நேசிப்பவர்

www.padippakam.com

என்ற வகையில், செய்யும் காரியம் என்னவென்ற அறிவுடன், தேவையில்லாத சட்டத்தையும் காலதாமதத்தையும் தவிர்ப்பதற்கு எடுத்த முடிவு. ஆணி அடிக்கவேண்டிய இடத்தில் அடிக்கப்பட்டாயிற்று. வெள்ளிக்கிழமை மாலையே மலசல கூடம் தகர்க்கப்பட்டிருக்கும் என்பது எனக்குத் தெரியும். அதுதான் திங்கட்கிழமை பிந்திவந்தேன்.

“தம்பி இஞ்சபாரும்”

அதிபர் எனக்குக் காட்டுகின்றார். பாழடைந்த மலசல கூடம் தரைமட்டமாக்கப் பட்டிருந்தது, அதுவும் நேர்த்தியாக. மைதானம் அமைப்பதில் இனிமேல் எந்தப்பிரச்சனையும் இருக்காது. நாளை சிரமதானத்தினைத் தொடரலாம் என்று கணக்குப் போட்டுக் கொள்கின்றேன். அதிபருக்காக வியப்பினைக் காட்டிக் கொள்கின்றேன்.

“சேர் விதானைக்குச் சொல்லி, லொக்கிலை எழுதியிட்டு பொலிசிலையும் என்றி போட்டிட்டு, சீயோவுக்கும் சொல்லுவம். அவர் சொல்லுறபடி என்ன செய்யவேண்டுமோ, அதைச் செய்வம் சேர்” என்று நான் அதிபரிடம் சொல்லுகின்றேன். அதிபரும் அப்படித்தான் யோசித்திருக்க வேண்டும். உடனடியாகவே அனைத்துச் சம்பிரதாயங்களும், அன்று மாலைக்குள் நிறைவேற்றப்பட்டன.

“நீங்கள் இடத்தைச் சுத்தப்படுத்தி மைதானத்தை அமையுங்கோ, என்றிக் கொப்பியை லொக்கிலை ஒட்டிவையுங்கோ”. என்று சீயோ சொன்னபின்னர்தான் அதிபர் வழமையான நிலைமைக்கு வந்தார். இதுவரை அவரது நிம்மதியைக் கெடுத்தமைக்காக நான் அவரிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன்.

அடுத்தநாள் சிரமதானம் நடக்கும்போது, நண்பர்களுக்கு என்ன நடந்தது என்பது கசியத் தொடங்கிவிட்ட போதிலும் யாரும் நேரடியாக என்னிடம் கேட்கவில்லை. நானும் அதுபற்றி மூச்சும் விடவில்லை.

திட்டமிட்டபடி விளையாட்டுமைதானம் 400 மீற்றரில் அமைக்கப் பட்டது. மிகச்சிறப்பாக அனைத்துப் போட்டிகளும் ஒழுங்கமைக்கத் தொடங்கினோம். மாணவர்கள் மூன்று இல்லங்களாக வகுப்புப் பதிவுப்புத்தகத்தின் ஒழுங்கின்படி பிரிக்கப்பட்டனர். மேலும் வயதுப்பிரிவுகள் யாவும் எம்மாலேயே வகுப்புவாரியாகப் பிரிக்கப்பட்டு பிறந்த திகதியும் எழுதப்பட்டு மூன்று இல்லத்துக்கும் அதன் பிரதிகள் வழங்கப்பட்டன.

மேலும் யார் யார் எந்தப் போட்டிகளில் பங்குபற்றுகிறார்கள் என்பதன் பிரதிகளும் எல்லா இல்லங்களுக்கும் வழங்கப்பட்டன. இதன் மூலம்



படிப்பகம்

எந்தவிதமான ஆள்மாறாட்டங்களும் செய்யமுடியாமல் நேர்மையாகவும் நம்பகத்தன்மையுடனும் திறமைக்கு மட்டுமே இடம் வழங்கப்பட்டது. எந்த விடயங்களும் மறைத்து வைக்கப்படாமல் சகலரது பார்வைக்கும் வைக்கப்பட்டதோடு, போட்டி முடிவுகளும் உடனுக்குடன் அறிவிக்கப்பட்டு, புள்ளிகள் பதியப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டது.

பத்து வருடங்களுக்கு முன்பு அம்மன் கோவில் திருவிழாவில், இரு சமூகத்து இளைஞர்களுக்கு இடையில் நடைபெற்ற கைகலப்பு பின்னர் வன்மமாக மாறி அடுத்த திருவிழாவில் பழிவாங்குவதற்குச் சதித்திட்டம் தீட்டவைத்தது. சமாதானம் ஆவதுபோல் நடித்து, இணைந்து நாடகம் போடுவதாகப் பயிற்சியிலும் ஈடுபட்டனர். திருவிழா அன்று நாடகம் மேடையேற்றப்பட்டது. சண்டைக்காட்சி மிகத் தத்ரூபமாக இருப்பதாகச் சபையோர் கைதட்டி ஆரவாரித்தனர். ஆனால் உண்மையில் நடந்தது கொடூரம். உயர்சாதி எனச்சொல்லிக் கொள்வோர் உண்மையான வாளுடன் மேடையிற் தோன்றி அப்பாவிகளை, மக்கள் பார்த்துரசிக்கக் கொலைவெறியாடினர். ஆறுபேர் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். அம்மன் சந்நிதானத்தில் சாதித்திமிருக்கு நரபலி கொடுக்கப்பட்டது.

அன்றுடன் நின்ற விழா எமது பாடசாலை விளையாட்டுப் போட்டியுடன் மீண்டும் ஆரம்பமாகின்றது. ஆனால் பழைய பகை அதுவும் கொலைப்பாதகம், எமக்குப் பயம் இருக்கத்தான் செய்தது. புதிய தலைமுறையிடம் வைத்த நம்பிக்கையே, எமக்குத் துணிச்சலைக் கொடுத்தது இருப்பினும் முன்னேற்பாடாக ஏதாவது செய்யவேண்டும் என்று யோசித்தோம். அப்போதுதான் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரை அழைப்போம் என்ற கோரிக்கை பெற்றோரால் முன்வைக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ளப்படது. பிரதம அதிதி பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் பொலிசாரின் பாதுகாப்பினைப் பெறுவதும் எமக்கு இலகுவாகவும், காரணம் சொல்ல வசதியாகவும் போய்விட்டது.

குறித்த தினத்தில் எவ்வித குளறுபடிகளும் இன்றி, மிகச்சிறப்பாக விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. பிரதம அதிதி தமது உரையில், மிகவும் பின்தங்கிய ஒரு விவசாயக் கிராமத்தின் இந்த விளையாட்டுப்போட்டி யாழ்நகரப் பாடசாலைக்குச் சமமாக அனைத்து அம்சங்களிலும் அமைந்திருந்தமையினைப் பாராட்டினார். அதிபரினால் பயிற்சி அளிக்கப்பட்ட, உடற்பயிற்சிக் கண்காட்சியினை வியந்து பாராட்டிப் பேசினார். மேலும் அவருக்கு கிராமத்தின் பிரச்சினை தெரியும் என்பதால், கிராம மக்களும் அயற் கிராம மக்களும் மகிழ்ச்சியாகக் கலந்து சிறப்பித்தமையினையும் பாராட்டினார்.

www.padippakam.com

ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னர் சொல்லமுடியாத ரகசியங்கள் புதைந்திருக்கும் என்பது என்னவோ இவ்விடயத்தில் நூறுவீதம் பொருந்தியிருந்தது. தம்மிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை மாணவர்கள் கண்டுகொள்ளவும், தமது சகாக்களுடன், ஆசிரியர்களுடன், சமூகத்துடன் ஆரோக்கியமான உறவினை வளர்த்துக் கொள்ளவும் அன்றைய விளையாட்டுப்போட்டி களம் அமைத்துக் கொடுத்தது என்றவகையில் என்நினைவுகளில் இன்றும் பசுமையாகவே உள்ளது.

அழகுற அமைக்கப்பட்ட மைதானமும் அதன் ஒருபக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த அலங்கரிக்கப்பட்டிருந்த இல்லங்களும் அந்த மாலைவேளையில் ரம்மியமாகக் காட்சியளித்தன. எம்முடன் முரண்பட்ட மூத்த ஆசிரியர்கள் பொறாமையினையும் பகைமையினையும் மறந்து, மிகவும் நேர்மையாகவும் சிறப்பாகவும் போட்டிகள் நடைபெற்றமையினைப் பாராட்டி, அன்றைய மகிழ்ச்சியிலும் பின்னர் நடைபெற்ற இராப்போசனத்திலும் பங்குபற்றி நட்பினைப் பரிமாறிக் கொண்டமை நாம் எதிர்பார்க்காத சாதனையேதான். விளையாட்டின் மூலம் எவ்வளவோ சாதனைகளைச் செய்யலாம் என்பதற்கு எமது பாடசாலை விளையாட்டுப் போட்டி, சிறந்த ஒரு உதாரணமாக அவ் வட்டாரத்தில் பேசப்பட்டுக் கொண்டே இருந்தது.

***( கதைக்கான களம் - 1981 )***

***கீற்று. கொம் - 2009***



படிப்பகம்

www.padippakam.com

# விதைப்பு

அடர்ந்து சுருண்ட தலைமுடிகள் வெள்ளத்தில் அள்ளுண்ட வெங்காயத் தண்டுகள்போற் கிடந்தன. உட்கவிந்து ஒளிவீசும் சிறியகண்கள் இரண்டும் அழுது அழுது சிவந்திருந்தன. அவை மிரள மிரள முழித்துப் பார்த்துக்கொண்டிருந்தன. நீல நிற கட்டைக்காற்சட்டையும் வெள்ளை நிற அரைக்கை சேட்டும் அணிந்திருந்தான். மூன்றடிக்குச் சற்று உயரமும் ஒல்லியான தோற்றமும் கொண்டவன், வாய்க்காலில் வீழ்ந்திருக்கவேண்டும் முழுவதுமாக நனைந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது. நனைந்த இரண்டொரு புத்தகங்களும் உடைந்த சிலேற்றையும் வேண்டா வெறுப்பாய்ப் பிடித்தபடி அதிபர் அலுவலகத்திற்கு முன் நின்று கொண்டிருந்தான் இராமச்சந்திரன்.

அவனது கன்னங்கள் இரண்டும் வீங்கியிருந்தன. அதற்கான காரணம் அவனுக்கும் அவனது சண்முகம் அண்ணருக்கு மட்டுமே தெரிந்த இரகசியம். அதிபரிடம் சண்முகம் அண்ணர் அவனைப் பற்றி முறைப்பாடு செய்து கொண்டிருக்க வேண்டும், அவரின் கதையைக் கேட்பதும் இராமச்சந்திரனைப் பார்ப்பதுமாக அதிபர் இருந்தார். பாடசாலை ஆரம்பித்து பாடங்கள் நடந்துகொண்டிருந்தன. வெளியில் மாணவர்களைக் காணவில்லை. இரண்டொரு ஆசிரியர்களும் மொனிற்றர்மார் சிலரும் வராந்தாவில் போவதும் வருவதும் தெரிந்தது. அவர்கள் இவனைப் பார்த்தார்களோ என்னவோ இவன் அவர்களைப் பார்ப்பதைத் தவிர்த்துக்கொண்டான். சகமாணவர்கள் ஆசிரியர்கள் முன் அவமானப்படுத்திவிட்ட சண்முகம் அண்ணர்மீதே அவனது ஆத்திரம் எல்லாம் மையங்கொண்டிருந்தது.

“நீ இப்படியே இண்டைக்கு முழுக்க நில், அப்பதான் புத்திவரும்”.

அதிபரின் வார்த்தைகள் ஈயத்தைக் காய்ச்சி காதில் ஊற்றியதுபோல் இருந்தது. அவ் வார்த்தைகளைக் கேட்டுத் திருப்திப்பட்டவர்போல் அவனைப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தபடி நடையைக்கட்டினார் சண்முகம் அண்ணர். அதிபரின் வார்த்தைகள் கடுமையானதாக இருந்ததே தவிர, இராமச்சந்திரனைப் பார்த்த அவரது பார்வையில் பரிவும் பச்சாதாபமும் தென்பட்டதை மிகநுணுக்கமாக அவதானித்துக்கொண்டான். அந்தப் பார்வை அந்தச் சூழ்நிலையிலும் அவனுக்கு நம்பிக்கையினையும் தைரியத்தினையும் கொடுத்திருக்கவேண்டும்.

“சேர்.. நான் வீட்டைபோய் உடுப்புமாற்றிக் கொண்டுவந்து



படிப்பகம்

படிக்கிறன் சேர்".

அவனை மேலோட்டமாகப் பார்த்த அதிபர் இப்பொழுது உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை பார்க்கிறார். நனைந்த கோழி நடுங்கிக்கொண்டிருப்பதுபோல் அவன் காட்சியளித்தான். அவனது கண்களிலும் வார்த்தையிலும் தென்பட்ட நேர்மையினைக் கண்டுகொண்டாரோ என்னவோ,

"சரி... போய் உடன வந்திட வேணும்".

மிகக் கண்டிப்பான உத்தரவினை அதிபர் வழங்கினார். அவனது மனதில் குடிகொண்ட விவரிக்க முடியாத பயத்தினை நீக்கி, யதார்த்த நிலையினை எதிர்கொள்ளும் பக்குவத்தினை அவன் அடைந்து விட்டான் என்பது அவனது வார்த்தையிலும் நடத்தையிலும் தென்பட்டன.

இராமச்சந்திரன் நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கின்றான். ஆனால் அவனது கல்வி மட்டம் முதலாம் வகுப்பினைவிடச் சற்றுக் கூடியது என்றுமட்டுமே சொல்ல முடியும். இத்தகைய நிலைமைக்குரிய காரணத்தினைத் தேடியறிந்து பரிகாரம் காணும் தேவை ஆசிரியர்களுக்கும் இல்லை வீட்டார்க்கும் இல்லை. அவன் அக்கறையில்லாதவன் எதுவுமே ஏறாத மரமண்டையன் என்ற முடிவே அவர்களுடையதாக இருந்தது. அவனும் ஒரு உயிருள்ள சிந்திக்கும் உயிரி என்ற சிந்தனை அவர்களது மரமண்டையில் ஏறுவதாகத் தெரிய வில்லை. நிறையச் சிந்திக்கும் ஆனால் அதனை வெளிப்படுத்தமுடியாத நிலைமையில் அவன் இருந்தான்.

காலையில் வேளைக்கே எழும்பி மிளகாயக் கன்றுக்குத் தண்ணீர் ஊற்றி, ஆடுகளை அவிழ்த்துவிட்டு, பசுக்கன்றுகளைப் பிடித்துக்கட்டி, காலைக் கடன்களை முடித்தகையோடு பாடசாலைக்கு வெளிக்கிடும் போதுதான், நேற்று செல்லையா வாத்தியார் வீட்டில் செய்துவரும்படி கொடுத்த நான்கு கணக்குகளும் சிலேற்றில் இருந்து அவனைப் பார்த்துப் பயமுறுத்தின. அந்தமனிசன் காட்டுநெல்லித்தடி சுக்கலாகும்வரை அடித்துக்கொண்டே இருக்கும் என்பது, யாருக்கு எடுத்துச்சொல்லி விளங்கப்படுத்துவது. அடிதாங்க முடியாமல் இரண்டுமூன்று காற்சட்டைகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் போட்டுக்கொண்டுபோய் மாட்டுப்பட்டு, பொம்பிளைப்பிள்ளையளுக்கு முன்னால பாஞ்சாலி துகிலுரிபடலம் போல், துச்சாதனாய் செல்லையாவாத்தியார் மாறி ஒவ்வொரு காற்சட்டையாய் உரிஞ்சு பட்ட அவமானம் கண்ணுக்குள் நின்று அவனை

அவமானப்படுத்தியது. எப்படியும் இண்டைக்கு கள்ளம் பண்ணி நிற்கவேண்டும் என்று முடிவெடுத்துக்கொண்டான்.

வழமைபோல் காலைச்சாப்பாட்டில் தொடங்கி ஒவ்வொன்றாகச் சிணுங்கிச் சிணுங்கி நேரத்தினை மினைக்கெடுத்தியது அவனது அம்மாவுக்கு விளங்கியபோதிலும் பாசம் என்னும் வலை அதனைப் பொருட்படுத்த விடவில்லை. அங்கு தோட்டத்தில் வேலைசெய்யவந்த சண்முகம் அண்ணர் இதனைக் கவனித்திருக்க வேண்டும்.

"நேரஞ் செண்டு போச்சு, மணி அடிச்சுக் கேட்குது, வாத்தியார் அடிப்பார்".

அன்று பாடசாலைக்குப் போகாமல் நிற்பதற்கான தயாரிப்புகள் எல்லாம் கனகச்சிதமாய்ச் செய்து முடிந்தாயிற்று. அவனது அம்மாவும் சரி என்று சொல்லும் கட்டத்தில், சிவபூசையில் கரடி புகுந்தது போல சண்முகம் அண்ணர் புகுந்துகொண்டார்.

"சந்திரன்.. நான் கூட்டிக்கொண்டுபோய் வாத்தியாரிட்டைச் சொல்லிறன் நீ வெளிக்கிடு".

மேற்கொண்டு எதுவும் செய்யமுடியாமல் வேண்டாவெறுப்பாய் பாடசாலையை நோக்கி நடக்கின்றான். ஆனால் இவர் யார் இடையில் குறுக்கிட என்ற வெறுப்பு மேலோங்கியபோது விபரீதமான எண்ணம் அவனை ஆட்கொண்டது. படலையைத் திறந்து கிரவல்றோட்டில் ஏறும்போது அதனோடு ஒட்டிய வாய்க்காலில் புதுப்புனல் நுரைதட்டி ஓடிக்கொண்டிருந்தது.தண்ணீரைக் கண்டால் இழுக்கும் எருமைபோல் அவனது மனமும் தண்ணீர்மேல் லயம் கண்டது. மின்னலென ஒரு நரித்தந்திரம் பொறி தட்டியது. பாடசாலை உடுப்பு நனைந்தால் எப்படியும் போக முடியாதுதானே. சரிபிழைபற்றி என்ன கவலை. சண்முகம் அண்ணரின் கரங்களிலிருந்து விடுபட்டு வாய்க்காலில் குதித்துவிட்டான்.

"ஓம் தம்பி இப்படி வாறீரோ! பொறும் பொறும் உமக்குக் காட்டிறன் நான் யாரெண்டு" இவனைப் போல் எத்தனை பேரைப் பார்த்திருப்பார் தனது அனுபவத்தில்,

"டேய் பங்காற்றா பாம்பு வருகுது" பயந்து பதகளித்து வாய்க்கால் கரைக்கு ஓடிவந்தான். எட்டிக் கையில் பிடித்தவர் கொற..... கொற என்று இழுத்தபடி பாடசாலைக் கேற்றில் கொண்டுவந்துதான் விட்டார்.

www.padippakam.com

இராமச்சந்திரன் ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். கொடியில் தொங்கிய காற்சட்டையினையும் சேட்டினையும் மாட்டிக்கொண்டு அதே வேகத்தில் பாடசாலையில் அதிபர்முன் வந்து நின்றான். அவனின் வார்த்தை தவறாத நேர்மை அவரைக் கவர்ந்திருக்க வேண்டும், அலுவலகத்தில் உள்ள புதிய சிலேற் ஒன்றினை எடுத்து அவனிடம் கொடுத்து வகுப்புக்கு அனுப்பிவைக்கின்றார். பின்வரிசையில் அமர்ந்து கொண்டவன் அன்று பாடசாலை முடியும்மட்டும் வகுப்பறையைவிட்டு வெளியில் வரவேயில்லை.

சம்பவம் நடந்த அடுத்தநாள் அதிபர் அவனை அழைத்து, "இண்டைக்கு பாடசாலை விட்டதன் பின்பு என்னை வந்து சந்தி". என்று கூறியபோது, மனதில் ஒருவிதமான பயம் கலந்த குழப்பம் நிலவிய போதிலும் துணிச்சலோடு அதனை எதிர்கொள்ளத் தயாரானான். குறிப்பிட்டவாறு அதிபரின் அலுவலகத்தில் நுழைகின்றான் சிங்கத்தின் குகைக்குள் பிந்திச்சென்ற முயல்போல.

அவனது பயம் எல்லாம் காற்றில் அள்ளுண்ட சருகுபோல் பறந்துபோயின. பாடசாலை நேரத்தில் பிரம்புடன் காட்சியளிக்கும் பயங்கரமான விம்பம் அழிந்து, அன்பான அவன்மீது கரிசனை கொண்ட மரியாதைக்குரியவராக அவன்முன் காட்சியளிக்கின்றார்.

ஆற்றுப்படுத்தாத அவனது சிந்தனை ஓட்டத்தினை முதன்முதலாக நெறிப்படுத்துகின்ற பெரும்பணியினை அதிபர் செய்யத் தொடங்கிவிட்டார். அவரது பேச்சுக்கு மறுபேச்சின்றிக் கட்டுப்படும் பக்குவம் அவனிடம் வந்தது மட்டுமல்ல தனது உணர்வுகளை ஒளிக்காமல் அவரிடம் திறந்து கொட்டினான். செல்லையா வாத்தியாரின் வன்முறை கலந்த கணித பாடபோதனையை வெறுப்பதையும் எடுத்துச் சொன்னான். விவசாயத்தில் இயல்பாகவே அவனுக்கிருந்த ஈடுபாட்டினையும் ஆற்றலையும் விவசாய பாடத்தின் மூலம் வெளிக்கொணர்ந்து, அதன்மூலம் ஏனைய பாடங்களுக்கும் விரிவாக்கும் திட்டத்தினை அதிபர் வகுத்துக் கொண்டார்.

அடுத்தநாள் கணித பாடவேளையில் கரும்பலகையில் கணக்குச் செய்யச்சொல்லி அடிப்பதையே தொழிலாகக்கொண்ட செல்லையா வாத்தியார் அவனை அடிப்பதை நிறுத்திக் கொண்டார். செல்லையா வாத்தியாரின் மனைவியார்தான் செல்வரட்ணம் ரீச்சர், அவர் விவசாயப் பாட ஆசிரியர். அவரின் நேரடிக் கண்காணிப்பில் இராமச்சந்திரன் விடப்பட்டான்.



படிப்பகம்

பாடசாலையில் தோட்டம் ஒன்று பெயரளவில்தான் இருந்தது. அதனை யாரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. செல்வரட்ணம் ரீச்சர் இராமச்சந்திரனிடம் அதனைப் பராமரிக்கும் பொறுப்பினை ஒப்படைத்தார். அன்றிலிருந்து அவனது சிந்தனை செயல் எல்லாம் அதுவாகவே இருந்தது.

இராமச்சந்திரனின் நண்பர்களில் இராமநாதன், ஜெயக்குமார் என்ற இருவருமே மிக நெருக்கமானவர்கள். அவர்களின் உதவியுடன் வீட்டில் இருந்த சிறிய வண்டிலைப் பயன்படுத்தி எரு ஏற்றி இறக்குவது மாலைவேளைகளில் ஒரு பயனுள்ள பொழுதுபோக்காகவே அமைந்து விட்டதெனலாம். காலமறிந்து எருவிட்டு, நேரந்தவறாமல் நீரூற்றி, களைபிடுங்கி, பூச்சி புழுக்கள் பார்த்து, பார்த்து மருந்து தெளித்தமையால் பாகல், புடோல், கத்தரி, வெண்டி, கறிமிளகாய் என பலவகையான காய்கறிகள் காய்த்துக்குலுங்கின, அவற்றினை விற்று வாங்கிய கொப்பி, புத்தகம், சிலேற் ஏழைப்பிள்ளைகளின் கல்விக் கண்களைத் திறக்க வழிசெய்தன. அந்த வருட இறுதியில் சாதனையாளர் விருதும் பாராட்டும் அவனுக்கே என்று அறிவிக்கப்பட்டபோது, அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேது. அது என்றுமே மறக்கமுடியாத நீங்கா நினைவே இராமச்சந்திரனுக்கு.

இராமச்சந்திரன் படிக்கிறானோ என்னவோ இப்பொழுது பாடசாலைக்கு ஒழுங்காகப் போய்வருகின்றான். வயலில் அரிவிவெட்டு நடக்குது வேலையாட்களுக்குச் சோறு கொண்டு போகவேணும் நில்லென்று சொன்னாலும் அவன் அதனைக் காதில்போட்டுக் கொள்வதேயில்லை

கவனிப்பாரற்ற தரிசு நிலம் முட்பற்றைகளும் கற்பாறைகளும் நிறைந்து கிடந்தது போலவே காணப்பட்ட இராமச்சந்திரன் என்னும் விளைநிலமும் அதிபரின் கவனிப்பால் பண்படுத்தப்பட்டு விதைக்கப் படுகின்றது, என்றோ ஒருநாள் அவை முளைகொள்ளத்தானே வேண்டும்.

***( கதைக்கான களம் - 1966 )***

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இத்தொகுதியில் நல்ல மனிதருள் உறைந்து கிடக்கும் போராட்ட உணர்வை வெளிப்படுத்துகிற கதை 'நம்பிக்கை' போரின் பயனாக அங்கவீனமான ஒரு பெண் தன்வாழ்வை சமூகப் பயனுள்ளதாக அமைப்பதிற் காட்டுகிற உறுதியைக் கூறுகிற இக்கதை இன்றைய சூழலில் மிகவும் பயனுள்ள ஒரு பதிவுமாகும். அவ்வாறே இனத்துவேஷம் படமெடுத்தாடுகிற ஒரு சமூகச் சூழலில் மக்களுக்கு நிதானமூட்டுகிற ஒரு கதையாக 'ஜெயா' உள்ளது. இக்கதை சிங்களத்திற்கு மொழி பெயர்க்கப்படுவது பயனுள்ளது.

- பேராசிரியர் சி.சிவசேகரம் -

இச்சிறுகதைத் தொகுப்பிலுள்ள கதைகளில் 'வெள்ளைச்சி', 'விஷகடி வைத்தியம்' ஆகிய கதைகள் உச்சமான இலக்கியச் செழுமையைப் பெற்றிருப்பதுபோல் 'ஜெயா', 'முரண்பாடுகள்', 'நம்பிக்கை' ஆகிய கதைகள் உச்சமான கோட்பாட்டுச் செழுமையைப் பெற்றிருக்கின்றன....... மொத்தத்தில் இதயராசனின் 'முரண்பாடுகள்' என்ற இச் சிறுகதைத் தொகுதியானது வன்னிப் பிரதேசத்தின் இரத்தம் கசிகின்ற 'வெட்டுமுகத்தோற்றம்'

கே.ஆர்.டேவிட்

